
கல்கி
ன்னாமலைப் பல்கலைக் கழக
வெள்ளி விழா மலர்
ணியம்.
ALKI பிப்ரவரி 13, 1955
4 அண


இரு சட்டைகளின் கதை
ராமும், ஷாமும் ஒரேவித சட்டைகளை வாங்குகிறார்கள்.
மூன்று மாதங்களுக்குப் பிறகு— ஒரு மைதானத்தில்
பட்டத்தின் நூல் சிக்கிக்கொண்டு விட்டது-நான் அப்பாவைக் கூப்பிடுகிறேன்.
ராமு, ஷாமும் மீண்டும் சந்திக்கிறார்கள்.
ஏது உன் சட்டை இன்னும் புதிதாகவே இருக்கிறது, என்னுடையது கிழிந்து விட்டதே!
இருவர்களின் மனைவிகள்
ஆம், அதன் ரகசியம் என்ன?
வெகு எளிதானது. ஸன்லைட்டின் ஏராளமான நுரை அடித்துத் துவைக்காமலே எல்லா அழுக்கையும் அகற்றுகிறது.
அடித்துத் துவைப்பதினால் துணியின் நூலிழைகள் விரைவில் வெகு சீக்கிரமே துணிகள் கிழிந்து விடுகின்றன.
அது உண்மைதான்! ஸன்லைட்டின் நுரை துணிகளை அடித்துத் துவைக்காமலேயே வெண்மையாகவும், பிரகாசமாகவும் செய்கிறது. அதனால் நீடித்திருக்கின்றன, பணமும் மிச்சமாகிறது!
SUNLIGHT SOAP
SUNLIGHT SOA
ஸன்லைட் சோப் துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது.

கல்கி

✧ அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழா மலர் ✧

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

மலர் 14



இதழ் 29

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்

அந்தகாரத்தை அகற்றும் ஜோதி!

சில மாதங்களுக்கு முன் ஜினிவாவில் நடந்த சமரசப் பேச்சு வார்த்தைகளின் பலனாக இந்தோ சீனா யுத்தம் நின்றபோது உலக மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக உலகத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் போர் நடந்து கொண்டுதான் இருந்தது என்றும், பல ஆண்டுகளுக்குப் பின் முதல் தடவையாக அப்போதுதான் உலகில் யுத்தமே நின்றிருக்கிறது என்றும் சர்வதேச ராஜதந்திரிகள் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனால் கடைசியில் எல்லோருடைய ஆனந்தமும் அற்ப வாழ்வாகி விட்டது.

வெகுகாலமாகப் புகைந்து கொண்டிருந்த பார்மோசாப் பிரச்னை குபீரென்று ஜ்வாலைவிடத் தொடங்கியதே அதற்குக் காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பார்மோசாத் தீவு சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி மூன்றாவது உலகப் பிரளயமாக மாறாமல் தடுக்க வேண்டும் என்பதில் உலகம் முழுதும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. லண்டனில் கூடியுள்ள காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் கவனம் முழுவதையும் பார்மோசாப் பிரச்னையே கவர்ந்திருக்கிறது. அப் பிரச்னையைத் தீர்க்க ஒவ்வொரு பிரமுகரும் ஒவ்வொரு விதமாக யோசனை கூறி வருகிறார்கள்.

ஆனால், சென்ற வாரம் சென்னைக்கு விஜயம் செய்த "நியூ ஸ்டேட்ஸ்மென் அண் நேஷன்" என்ற பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ கிங்ஸ்லி மார்ட்டின் கூறியுள்ள யோசனை உலக க்ஷேமத்தில் அக்கறை கொண்ட சகலரும் நன்றாகக் கவனிக்கத் தக்கதாக இருக்கிறது.

"நான் ஒரு விஷயத்தில் காந்தி வழியைப் பின்பற்றுபவன். அதாவது சத்தியத்தின் மூலம்தான் உலக அமைதியைக் காண முடியும் என்பதில் பூரண நம்பிக்கையுள்ளவன். இன்று காந்திஜி உயிருடனிருந்தால், பார்மோசாப் பிரச்னையைத் தீர்க்க ஒரே ஒரு வழிதான் உண்டு என்று கூறியிருப்பார்; அதாவது சீனாவின் உண்மையான சர்க்கார் கம்யூனிஸ்டுகள்தான் என்றும் அந்த நாட்டு ஆட்சியில் சியாங் கை ஷேக்கிற்கு இடமில்லை என்றும் காந்திஜி கூறியிருப்பார். பார்மோசா சீனாவைச் சேர வேண்டும் என்றும் வற்புறுத்தியிருப்பார்."

காந்தியடிகள் என்ன சொல்லியிருப்பார் என்பதை விட்டு விடுவோம். ஒரு பிரபல பிரிட்டிஷ் பத்திரிகாசிரியரின் இந்தக் கருத்தை ராஜதந்திரிகள் கவனிக்கலாம்.

"சியாங் கை ஷேக்கை மறுபடியும் சீனாவுக்குக் கொண்டு வருவதற்காக நடக்கும் போரில் ஒரு உயிரைக்கூடத் தியாகம் செய்ய பிரிட்டன் தயாராக இல்லை என்பதை அமெரிக்கா சந்தேகத்துக்கு இடமின்றி அறிந்து கொள்ள வேண்டும். சியாங் கை ஷேக்கின் ஆசையை நிறைவேற்றுவதற்காக மூன்றாவது உலக மகா யுத்தம் ஏற்படும்படி செய்யலாமா?" என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ பெவன் கூறியிருக்கிறார்.

எனவே, பார்மோசா விஷயத்தில் பிரிட்டிஷ் பிரமுகர்களின் மன நிலை எவ்விதம் இருக்கிறது என்பதற்கு இந்த இரண்டு கூற்றுகள் உதவும்.

* * * *

இப்போது கிடைத்து வரும் செய்திகளிலிருந்து, பார்மோசாப் பிரச்னையை ஒட்டி அமெரிக்காவின் முறுக்கு தளர்ந்து வருகிறது என்பது நன்கு தெரிகிறது.

டாச்சென் தீவிலிருந்து சியாங் கை ஷேக் துருப்புகள் வெளியேறுவதற்கு அமெரிக்கா இணங்கி விட்டது.

இதைத் தொடர்ந்து, மட்சு, கிமாய் முதலிய முக்கிய தீவுகளிலிருந்தும் சியாங் துருப்புகளை வெளியேற்றி விடவேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்காரும் இந்தியா உள்பட காமன்வெல்த் சர்க்கார்களும் அமெரிக்காவை வற்புறுத்தத் தொடங்கி யிருக்கின்றன.

ஆள் சேதமில்லாமல் சீனாவுக்கு மிக பக்கமாக இருக்கும் இரண்டு தீவுகளிலிருந்து சியாங் படை காலி செய்வது சமாதானத்தைக் கோரும் உலக மக்களுக்குப் பெரிய லாபம்.

பார்மோசாப் பிரச்னை தீருவதற்கான சூழ்நிலை உருவாகி வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை. பார்மோசா விஷயத்தில் முதலில் அமெரிக்காவின் போக்கைப் பிடிவாதத்துடன் ஆதரித்து வந்த காமன்வெல்த் நாடுகளின் மனம் இப்போது மாறி யிருப்பது எதிர் காலத்தில் நம்பிக்கை அளிக்கக் கூடியதாகும்.

இந்த மனமாற்றத்துக்கு, பாரத நாட்டின் அருமைத் தலைவரான ஜவாஹர்லால்ஜியின் திடமான அபிப்பிராயமும் விடாமுயற்சியுமே காரணம் என்பதை உலக மக்கள் அறிவர்.

இதற்கு முன்பு ஜவாஹர்லால்ஜியின் உழைப்பும் நல்லெண்ணமும் உலக அரங்கில் சமாதானத்தை நிலைநாட்டும் மகத்தான காரியத்தில் ஈடுபட்டு எவ்வளவு தூரம் வெற்றி யடைந்தன என்பது நமக்கு நன்கு தெரியும். இப்பொழுதும் அத்தகைய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

நேருஜியின் தலைமையில் உலக நெருக்கடிகளைத் தீர்க்கும் வாய்ப்பு பாரத நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தகாரம் சூழ்ந்துள்ள உலகில் நேருஜி அதை அகற்றும் ஜோதியாகத் திகழ்ந்து வருகிறார்.

உலகம் போற்றும் உத்தமர் காந்திஜியின் வழி உலக சமாதானத்துக்கு உற்ற வழி என்பதை, அணுகுண்டுகளின் பலத்தில் நம்பிக்கை கொண்ட வல்லரசுகளும் மறைமுகமாக ஒப்புக் கொள்ளச் செய்யும் முயற்சியில் வெற்றி பெற்று வருகிறார்.

அமெரிக்கரின் பிழை

1945 ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி ஹிட்லர் யுத்தம் முடிந்தது. முடிந்த இரண்டாவது நாளே சென்னையில் ராஜாஜி ஒரு கூட்டத்தில் பேசும் போது சொன்னார் :

"ஜப்பானியர் தோற்றுப் போனபின், யுத்தம் சரியாக முடியும் சமயத்தில், அனாவசியமாக ஜப்பான் நகரங்களின் பேரில் இந்த நாசகர அணுகுண்டை வெடித்தார்கள், அமெரிக்கர்கள். இது காரியத்தை யெல்லாம் கெடுக்கும்படியான ஒரு அக்கிரம காரியம். அசட்டுத்தனமும் அநீதியும் இரண்டும் கலந்த நிகழ்ச்சி. இந்த நாசகர அணுகுண்டை இனி மற்றவர்களும் செய்யப்போவது நிச்சயம். இது உலகத்துக்கு ஒரு பெரும் புது அபாயம்" என்று 1945 ஆகஸ்ட் பதினேழாந் தேதியிலேயே அமெரிக்காவைப் பகிரங்கமாகக் கண்டித்தார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் சொன்னது, ராஜாஜி சொன்னது, உண்மையாகவே போய் விட்டது. அமெரிக்காவின் அனாவசியச் செயல் தற்போது தனக்கே அபாயமாக முடிந்து விட்டது.

ஜப்பான் பேரில் குண்டை வெடித்ததோடு நிற்கவில்லை. நாசகாரி அணுகுண்டு ஆராய்ச்சிகளை மும்முரமாக நடத்திக் கொண்டே சென்றார்கள். என்னத்துக்காக இவ்வாறு செய்தார்கள்! ஜெர்மனியும் ஜப்பானும் அடங்கிப் போய் சூன்யநிலை அடைந்த பின்பும் இந்த ஆராய்ச்சி என்னத்துக்கு!

உற்பத்தியும் செய்தார்கள். அது என்னத்துக்காக! பிரிட்டானியாவின் பேரில் போடவா! இல்லை. ஜெர்மனி பேரில் போடவா! இல்லை. ஜப்பான் பேரில் போடவா! இல்லை. என்ன நோக்கத்தைக் கொண்டு இந்த உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டே போனார்கள்!

ருஷியாவுக்குச் சந்தேகமற நிச்சயமாயிற்று: தங்கள் பேரில் போடத்தான் இந்த 'சைத்தான்' ஆராய்ச்சியும் உற்பத்தியும் என்று அவர்கள் நினைத்ததில் என்ன வியப்பு!

சரி; ருஷியாவும் செய்ய ஆரம்பித்தது. ராஜாஜி சென்னையில் சொன்னது நடந்து விட்டது. ருஷியாவும் அணுகுண்டையும் அதற்குமேல் வடவாக்கினி குண்டையும் செய்து முடித்துத் தயாராகி விட்டார்கள். இந்தக் குண்டுகள் எதிரி பேரில் வீசத்தான் பயன்படும். தற்காப்புக்குப் பயன்படக்கூடிய பண்புகொண்ட ஆயுதமல்ல.

ஆங்கிலேய — அமெரிக்க ஆட்சித் தலைவர்கள் ஜெர்மனிமேல் யுத்தம் நடத்தியபோது 'ஹிட்லர் பேரில்தான் நம்முடைய போர், அக்கிரம ஆட்சி, அக்கிரம ஆசை இவற்றின் மேல்தான் நம்முடைய க்ஷாத்திரம், ஜெர்மானிய மக்களின்மேல் நமக்கு விரோதமில்லை' என்று சொல்லி வந்தார்கள். மக்களை எதிர்க்கவில்லை, மக்களை நாசம் செய்வதில்லை என்கிற வாதம் அணுகுண்டு ஆராய்ச்சியில் சுத்தப்பொய்யாகப் போயிற்று. இந்தக் குண்டுகள் மக்களையும் நாட்டையும் அனைத்தையுமே நாசம் செய்யத்தான் உபயோகிக்க முடியும். அத்தகைய ஆயுதத்தைத் தொடர்ந்தாற் போல் ஆராய்ச்சியும் உற்பத்தியும் செய்து வந்தார்கள் அமெரிக்கர். இது மக்களுக்குள் நேசத்தை வளர்க்கும் வழியா! பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கும் வழியா! 'இந்த மடமையை ஒழித்து விட்டு, இந்த ஆயுதத்தை தியாச்சியம் செய்தோம் என்று உலகமறிய விளம்பரம் செய்யுங்கள்' என்று ராஜாஜி அமெரிக்க சர்க்காரைக் கோரினார். அந்தக் கோரிக்கையின் வேகம் வீணாகவில்லை. உண்மையான நட்பு கொண்ட ஒருவர் கடுமையான முறையில் கண்டித்தால் அது வீண் போகாது.

அணுகுண்டை வைத்துக் கொண்டு போடாமலே மிரட்டலாம் என்று பார்த்தால், அதிலும் காரியம் நடப்பதாகத் தெரிய வில்லை. இந்த அணுகுண்டு தங்களுக்கே அபாயம், தங்களுடைய கூட்டாளி தேசங்களுக்கு அபாயம், மொத்தத்தில் லாபம் ஒன்றுமே இல்லை என்பதை அமெரிக்கர் நன்றாகக் கண்டுவிட்டார்கள்; பிரிட்டிஷாரும்கண்டு விட்டார்கள். ஆனால் ஒப்புக்கொள்ளத்தான் தயங்குகிறார்கள். பிழையை ஒப்புக் கொள்ளும் தைரியம் நம் காந்தி மகானுக்குத் தவிர உலகத்தில் வேறு யாருக்கு உண்டு! சுலபத்தில் அந்தத் தைரியம் வராது. தாமே தோள்மேல் தூக்கி வைத்துக் கொண்ட பிசாசைக் கீழே இறக்க முடிய வில்லை. இந்தப் பிசாசுக்கு இந்தியாதான் மந்திரம் போட வேண்டும். நேரு அவர்கள் போட்டுக் கொண்டிருக்கிறார். பக்க பலமும் சேர்ந்து வருகிறது. ஆண்டவன் அருள்வானாக.

இந்த நாசகர உற்பத்தியில் உண்டாகும் சாம்பலும் குப்பையும் உற்பத்தி செய்யும் தேசங்களுக்கே பெருங்கேடு செய்யும் என்பது இப்போது வெளியாகிறது. அந்த விஷப் பொருள்களை மெள்ள வெளி நாடுகளுக்குப் பலவிதமாகக் கலந்து அனுப்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதெல்லாம் உலகத்தின் துரதிர்ஷ்டம். யுத்தமில்லாமலே உலகத்துக்கு ஆபத்து. பிசாசுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டால் அது சும்மாவிடுமா!

எதிர்காலம்



'' இந்தியா முதல்தரமான தொழில் வளமிக்க தேசமாக மாறிவிடும். எத்தனை காலத்துக்குள் ஆகும் என்பதே இந்தியா முன்னுள்ள பிரச்னை '' என்கிறார்கள் வெளி நாட்டு நிபுணர்கள்.

தில்லைப் பதியின் எல்லையிலே!

இன்றைக்கு எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கானாடு காத்தான் என்ற கிராமத்தில் ஒரு செல்வக் குடும்பத்தில் சீரும் சிறப்புமாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஜாதகம் கணித்த சோதிடர்கள் மூக்கின் மேல் விரல் வைத்து அதிசயித்தார்கள். "இந்தக் குழந்தை இலட்சக் கணக்கில் பொருள் தேடும்; ஆனால் இலட்சக் கணக்கிலேயே செலவும் செய்துவிடும்" என்று சொன்னார்கள். பெற்றோர்கள் திகைத்தார்கள். "ஜாதகத்தை நன்றாகப் பாருங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரில் சோதிடர்கள் சொன்னார்கள்: "ஆமாம்! சந்தேகமே இல்லை. செலவு செய்வதற்காகவே சம்பாதிக்கிற ஜாதகம் இது! சம்பாதிப்பதற்கு எப்படிப் பாடுபடுவாரோ, அதைப்போலவே செலவு செய்வதற்கும் கவலையோடு பாடுபடுவார்!"

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சோதிடர்கள் சொன்னது வீண் போகவில்லை. ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வாழ்க்கை அதை நிரூபித்தது. (இது உண்மை நிகழ்ச்சியல்ல. இலக்கியக் கற்பனை. ஜோதிடர்களின் வெற்றியாக வைத்துக் கொள்ள வேண்டாம்.)

செட்டி நாட்டுச் செல்வந்தர்களின் இயல்புக்கு ஏற்ப ராஜா அவர்கள் எத்தனையோ இலட்சங்கள் அரும்பாடுகள் பட்டுச் சேர்த்தார்கள். அந்த இலட்சங்களை யெல்லாம் சம்பாதிப்பதற்குப் பாடுபட்டது போலவே செலவு செய்யவும் பாடுபட்டார்! அவற்றைச் செலவு செய்வதற்கான மார்க்கங்களை இரவும் பகலும் யோசித்தார்! எத்தனையோ பல ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தினார். இந்த ஆக்கங்களில் எல்லாம் இன்று கோபுரமாக உயர்ந்து நிற்பது அண்ணாமலைப் பல்கலைக் கழகந்தான்.

தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, தமிழரின் பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதற்காக, என்று ஒரு கலைக் கழகம் அமைக்க எண்ணினார் ராஜா அண்ணாமலைச் செட்டியார். அவருடைய வாழ்வின் கனவு, இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், 1929ம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக மலர்ந்தது.

"தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக் கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும்!" என்று இந்தக் கழகத்தின் முதலாவது நிருவாக சபைத் தொடக்க விழாவில் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அதிர்ஷ்டம், அன்றிலிருந்து இன்றுவரை அதை நிர்வகிக்கும் தலைவர்களும் அதில் தொண்டாற்றும் பேராசிரியர்களும், அந்தக் கழகத்தைத் தோற்றுவித்த வள்ளலின் இந்தப் பெரும் நோக்கத்தை ஒவ்வொரு செயலிலும் நினைவு வைத்துக் கொண்டு காரியம் செய்து வந்திருக்கிறார்கள்.

தந்தை விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து நடத்தும் பாக்கியம் பெற்ற ராஜா முத்தைய செட்டியார் அவர்கள் தம்முடைய முயற்சியை அல்லும் பகலும் தமிழ் ஆக்கத்தில் செலவிட்டு வருவதைத் தமிழ் மக்கள் அறிவார்கள். தமிழை உலகம் அறிய வேண்டும் என்றால், முதலில் அதைத் தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் அல்லவா! "உலகமே அறிந்தாலும் நமக்கு அக்கறை இல்லை!" என்று சொல்லி விடுகிற அலட்சிய மனப்பான்மைக்கு இடம் தராமல், தமிழ்ப் படிப்பு தமிழ் நாட்டின் கலைகள் ஆகியவற்றில் சிறப்பான பயிற்சி அளித்து வருகிறது, இப் பல்கலைக் கழகம்.

பௌதிகக் கலைகள், வரலாறு, பொருளாதாரம், விவசாயம், பொறி இயல், ரசாயனத் தொழிற் கல்வி, இசை, ஓவியம், மாணவர் படைப் பயிற்சி என்று பல்வேறு துறைகளிலும் நிபுணர்களை நியமித்து ஆயிரக் கணக்கான மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது இந்தக் கலைக் கழகம். தமிழோடு, வடமொழி, ஆங்கிலம், ப்ரெஞ்ச், ஜெர்மன் ஆகிய மொழிகளுக்கும் அபாரமான தொண்டு செய்திருக்கிறது. இப்படி உண்மையிலேயே பலகலைக் கழகமாகப் பணியாற்றி வருகிற இந்த அண்ணாமலைக் கழகம் நாளது பெப்ருவரி 9-ந் தேதி சீரும் சிறப்புடனும் வெள்ளி விழாக் கொண்டாடியது. அது குறித்துத் தமிழ் மக்களாகிய நாம் பெருமை கொள்கிறோம். ஆனந்தம் அடைகிறோம்.

சிதம்பரம் என்ற சொல்லுக்கே 'ஞான ஆகாசம்' என்றும் 'அறிவு வெளி' என்றும் பொருள். இந்த அறிவு மயமான பிரதேசத்தில், ஒரு பெரிய கலைக் கழகத்தை நிர்மாணித்து, அறிவின் பல துறைகளையும் வளர்த்து வருகிறதைக் கண்டு நடராஜனே களித்துக் கூத்தாடியதாகக் கவிமணி தேசிக விநாயகன் பிள்ளை பாடினார். நம் ஓவியரும் அதை அட்டைப் படமாகச் சித்திரித்திருக்கிறார்.

தில்லைப் பதியுடையான்
சிற்றம் பலந்தன்னில்
அல்லும் பகலும் நின்று
ஆடுகின்றான் — எல்லைக்கண்
அண்ணா மலைமன்
அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு
களித்து!

தமிழ்த் தாத்தாவின் நூற்றாண்டு விழா!

அகில உலகக் கறையான்கள் மகாநாடு என்று ஒன்று நூறு ஆண்டுகளுக்கு முன்பு தேவலோகத்திலே நடந்தது. உலகிலுள்ள எல்லா நாட்டுக் கறையான்களும் அங்கே வந்திருந்தன. அந்த மகாநாட்டில் அறிவாற்றலில் ஒப்புயர்வற்று விளங்கிய கறையானுக்கு ஒரு பரிசு வழங்கினார்கள். அந்த அருமையான பரிசு தமிழ் நாட்டுக் கறையானுக்கே கிடைத்தது. காரணம், புண்ணியத் தமிழ் நாட்டின் கறையான்தான் மற்ற எல்லா நாட்டுக் கறையான்களையும் முதுகுக்கு மண் காட்டி விட்டது! மற்ற எந்தக் கறையான்களையும் விடத் தமிழ் நாட்டுக் கறையானே மகா பண்டிதனாக, சர்வ சாஸ்திரங்களையும் உண்டு ஜீரணம் செய்த சம்பன்னனாக விளங்கியது! வான லோகத்து தேவர்கள் எல்லாரும் இந்த அதிசயத்தைப் பார்த்து விட்டுத் திறந்த இமைகளை மூடவே இல்லை என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கதை இது. இந்தச் சம்பவம் மற்றக் கறையான்களைப் பொறாமைக்கு உள்ளாக்கிற்று. அவற்றின் நெஞ்சை

கொதித்தது. 'தமிழ் நாட்டுக் கறையானுக்கு மட்டும் என்ன, அத்தனை சிறப்பு! கூடாது. கூடவே கூடாது!' என்று எண்ணின. உடனே, எல்லாமாகச் சேர்ந்து படைப்புக் கடவுளான பிரும்மாவிடம் போய் முறையிட்டன.

"பரம்பொருளே! நீதான் எங்களுக்குத் தஞ்சம்! அவமானம் எங்களால் தாங்க முடியவில்லை! இந்தத் தமிழ் நாட்டுக் கறையான்களுக்கு நீதான் ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்!" என்று பிரும்மாவை சாஷ்டாங்கமாக விழுந்து கேட்டுக் கொண்டன!

இதற்கிடையில் கறையான்களைக் கண்டு மிகவும் பயந்து சீக்கிரமாக அவற்றை அந்த இடத்திலிருந்து அனுப்பிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த ஸரஸ்வதிதேவி கணவரிடம் பலமாகச் சிபாரிசு செய்தாள்.

பிரும்மா சொன்னார்: "கறையான்களே! கவலை ஒழியுங்கள். இனித் தமிழ் நாட்டுக் கறையான்களைத் தமிழ் மக்களே தோற்கடித்து விடுவார்கள்! தமிழ் நூல்களைத் தாங்களே படிக்க ஆரம்பித்து விடுவார்கள். தமிழ் நாட்டுக் கறையான்களின் மானத்தை வாங்கி விடுவார்கள்!" என்றார்.

அதன் பயனாக என்ன சேர்ந்தது! நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் புண்ணியத் தமிழ் பூமியிலே தோன்றினார் டாக்டர் சாமிநாதய்யர் அவர்கள். காலில் நகம் முளைத்த நாளிலிருந்து, கண் பார்வை மங்கும் காலம் வரை தமிழ் ஏடுகளையே துருவித் துருவி ஆராய்ந்தார். குக்கிராமங்களில், சந்து பொந்துகளில், மூலை முடுக்குகளில்—எங்கெல்லாம் கறையான்கள் கூடியிருந்தனவோ அங்கெல்லாம் சென்று, அந்தத் தமிழ் நாட்டுக் கறையான்களுடைய நாவினின்றும் தமிழை வெளிக் கொணர்ந்தார். நூற்றுக் கணக்கான தமிழ் நூல்களை, அரிய கருவூலங்களைத் தமிழ் மக்களுக்கு வழங்கினார்.


" தழற்புரை சுடர்க்கடவுள்
தந்த தமிழ் தந்தான் "

என்று அகத்தியரைப் பாடியது, சாமிநாதய்யர் அவர்களுக்கும் பொருந்தும் என்று சொன்னால் மிகை இல்லை.

இப்படிப்பட்ட தமிழ்த் தாத்தாவின் நூற்றிராவது பிறந்த நாள், நாளது பெப்ருவரி 19-ந் தேதி தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பெறும் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். சென்னையில் 18-ந் தேதியன்று அடையாறு நூல் நிலையத்தில் ஐயர் அவர்கள் பரிசோதித்த பிரதிகளும், அவர்களுடைய கையெழுத்துக் குறிப்புகளும், கடிதங்களும், அவர்கள் உபயோகித்த பொருள்களும் காட்சியாக வைக்கப்படுகின்றன. முதன் மந்திரியார் இதைத் திறந்து வைக்கிறார். மறுநாள் சாமிநாதய்யர் அவர்களின் மாணவர்கள் மகாநாடு கூடுகிறார்கள். 20-ந் தேதியன்று சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்களின் தலைமையில் அஞ்சலி விழா நடைபெறுகிறது.

தமிழ்ப் பெரியாருக்குத் தமிழ்ப் பெரு மக்கள் செய்யும் இந்த நன்றி விழாவில், தமிழ் நாடெங்கும் உள்ள தமிழன்பர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். குக்கிராமங்களுக்கெல்லாம் ஐயரவர்கள் சென்று ஏடு தேடினார்கள். அவ்வாறே தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் அவர்களுக்கு அஞ்சலி விழாக் கொண்டாடி அன்னாருடைய சேவைக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். இதுவே தமிழன்னைக்குத் தமிழர்கள் செய்யும் வணக்கமாகும்!

சித்வாயின் கனவு பலித்தது!



பல வருடங்களுக்குப் பிறகு முதல் தடவையாக இந்தியா 3 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்தது.

இந்த கல்கி இதழில் உபயோகிக்கப் பட்டிருக்கும் 'கலர் மை' எல்லாம் காஞ்சஸ் பிரிண்டிங் இங்க் பாக்டரி லிமிடெட்டாரின் தயாரிப்பே.



•

காஞ்சஸ் பிரிண்டிங் இங்க் பாக்டரி லிட்.

கல்கத்தா — பம்பாய் — மதராஸ்

GANGES PRINTING INK FACTORY LTD.

CALCUTTA — MADRAS — BOMBAY

---

24 பாயின்ட் மணிமேகலை ரோமன்

Patent No. 80434

ஒறுத்தாரை யொன்றாக வையாரே
வைப்பர் பொறுத்தாரைப் பொன்
போற் பொதிந்து, 'திருக்குறள்'


24 பாயின்ட் மணிமேகலை போல்டு ஆண்டிக்

Patent No. 81017

கொல்லாமை மேற் கொண்டு
ஒழுகுவான் வாழ்நாள் மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று

தயாரிப்பவர்கள் :

நார்டன் கம்பெனி, சூளை, மதராஸ்-7



அச்சுத் தொழில் மகாநாடு

நிகழும் பிப்ரவரி ஆறாந்தேதி சென்னை மியூசியம் தியேட்டர் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்து விட்டது. அன்றையதினம் அகில இந்திய அச்சுத் தொழில் அதிபர்களின் மூன்றாவது மகாநாடு அமோகமாக நடைபெற்றது. இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் சுமார் இருநூற்று ஐம்பது பிரதிநிதிகளுக்கு மேல் வந்திருந்தனர். மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனியிலிருந்து பதின்மூன்று பிரதிநிதிகள் வந்திருந்தனர். தென் ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு பிரதிநிதியும் வந்திருந்தார்.

சென்னை கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா மகாநாட்டை ஆரம்பித்து வைத்துச் சென்னை மக்களின் சிறப்பையும் அச்சுத் தொழிலில் தமக்குள்ள அநுபவங்களையும் எடுத்துக் கூறினார்.

அச்சுத் தொழில் எப்பொழுது ஆரம்பமாயிற்று, முதன்முதலில் இந்தியாவில் எப்பொழுது, யார் ஆரம்பித்தார்கள் என்ற வரலாற்றை எல்லாம் விளக்கமாகக் கூறி மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ எஸ். எஸ். வாசன் வரவேற்றார்.

மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதாக இருந்த ஹிந்துப் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசன் நேரில் வந்து தமது தலைமை உரையை நிகழ்த்த இயலவில்லை. சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் தலைமை வகித்து ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்களின் தலைமை யுரையைப் படித்தார்.

மகாநாட்டில் அச்சுத் தொழில் சம்பந்தமாக உருப்படியான யோசனைகளையும், அது வளருவதற்கு வேண்டிய வழிகளையும் தெளிவாகச் சொன்னவர் ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்கள். அச்சுத் தொழில் வளர்ச்சிக்குச் சர்க்கார் கட்டுப்பாடு பெரிய முட்டுக் கட்டையாக இருக்கிறது. பயிற்சி பெற்ற அச்சுத் தொழிலாளர்களும் போதியபடி இல்லை. இது ஒரு பெரியகுறை. இந்தக் குறைகளை நீக்கினால்தான் நம் நாட்டில் அச்சுத் தொழிலை நல்ல முறையில் வளர்க்க முடியும். இதற்கு முதல் படியாக ஆங்காங்கு அச்சுத் தொழில் பயிற்சி நிலையங்களை அமைக்க வேண்டும். ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவ வேண்டும். இதற்குச் சர்க்காரும் அச்சுத் தொழில் அதிபர்களும் சேர்ந்து பாடுபட வேண்டும் என்று தம்முடைய உரையில் கூறியிருந்தார்.



ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸன்

ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்களின் யோசனைகளைக் காரியத்தில் நிறைவேற்ற அச்சுத் தொழில் அதிபர்களும், சர்க்காரும் முயற்சி செய்வார்களானால், இந்தியாவில் அச்சுத் தொழில் வளருவதற்கு நல்ல எதிர்காலம் இருக்கும். காகிதம் முதல் இயந்திரம் முதலிய அச்சுத் தொழிலுக்கான பண்டங்கள் அத்தனைக்கும் நாம் பிறர் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. எதிர் கால இந்தியா மகோன்னதம் அடைய வேண்டுமானால் நமது நாட்டில் அச்சுத் தொழிலுக்கு வேண்டிய அத்தனை சாதனங்களும் உற்பத்தியாக வேண்டும்.

மகாநாட்டுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைச் சென்னை அச்சிடுவோர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ விஸ்வநாதன் வாசித்தார்.

சங்கத் தலைவர் ஸ்ரீ வி. எம். பிலிப் வந்தனோபசாரம் கூறினார்.

தமிழ் நாடு எல்லா காரியங்களிலும் எப்பொழுதும் இதர மாகாணங்களுக்கு வழி காட்டியாக இருந்து வந்திருக்கிறது! அச்சுத் தொழிலிலும் உலகத்துடன் சரிநிகர் சமானமாகத் தமிழ் நாடு இயங்கப் போகும் நன்னாளை அதிவிரைவில் எதிர் பார்ப்போமாக.

விழாவில் கலந்துகொண்ட ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன், கவர்னர் ஸ்ரீ பிரகாசா, ஸ்ரீ எஸ். எஸ். வாசன் மற்றும் அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள முக்கிய பிரமுகர்கள்.



அத்தியாயம் 40

விஜயராம பட்டினம்

ஒருநாள் எனக்கு உதவி செய்யும் குடியானவப் பெண் வரவில்லை. அவள் வேலையையும் சேர்த்து நான் செய்ய வேண்டியதாயிற்று. நான் கிணற்றில் தண்ணீர் இழுக்கப் போனேன். கிணற்றின் கைப்பிடிச் சுவர் மிகவும் இடிந்து போயிருந்தது. தண்ணீர் வாளி மேலே வந்ததும் அதை இழுத்து வெளியே எடுப்பதற்காக முன்னால் சாய்ந்தேன். ஒரு கணம் எங்கேயோ அந்தரத்தில் பறப்பது போல் தோன்றியது. ஜில்லென்ற கிணற்று நீர், நான் கிணற்றில் விழுந்து விட்டதை எனக்கு உணர்த்தியது. விழுந்தபோது வாளியில் முகம் மோதியிருக்க வேண்டும். அதனால்தான் இப்படி விண்விண்ணென்று தெறிக்கிறது போலும். கைப்பிடிச் சுவர் இடிந்து கற்கள் ஒன்றிரண்டு மேலே விழுந்தன. இத்தனை அதிர்ச்சியிலும் நான் அந்தக் கழியை விடாமலிருந்ததுதான் அதிசயம். எங்கள் வீட்டில் ஏற்றத்திற்குப் போடுவதுபோல் பற்றுக் கழிதான் போடப்பட்டிருந்தது. அதன் நுனியில் வாளி தொங்கும். அந்த மூங்கில் கழியை அழுத்தித் தண்ணீர் நிரம்பியதும் மேலே எடுப்பது வழக்கம். சிரமமும் குறைவு. தானாகவே வாளி மேலே வரும். மூச்சைப் பிடித்துக் கொண்டு இழுக்க வேண்டியதில்லை.

இந்தக் கழியைப் பிடித்துக் கொண்டே தொங்கியபடியால் நான் தண்ணீரில் முழுகிப் போகவில்லை. "அப்பா! அப்பா!!" என்று பெரிதாகக் கூச்சல் போட்டேன். அப்பா, அய்யாக்குட்டி இருவரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். நல்ல வேளையாக இருவரும் காது கேட்கும் தூரத்தில் இருந்தார்கள். இல்லாவிட்டால் இன்று நான் என் சரிதையை எழுதும் பிரமேயம் ஏற்படாமலேயே போயிருக்கலாம்.



கையைக் கடுத்தது. அய்யாக் குட்டியின் முகம் கிணற்றின் விளிம்பில் தெரிந்தது. எனக்கு நிமிர்ந்து பார்ப்பது அவஸ்தையாக இருந்தது. "ஐயையோ! இந்து கிணற்றில் விழுந்திருக்கிறாள்" என்று அவர் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தியது கேட்டது. என் தந்தையும் அருகில் வந்து விட்டார். "என்ன செய்வது, அய்யாக் குட்டி?" என்று என் தந்தை அலறியது காதில் விழுந்தது.

"இப்படியே இழுத்து விடுகிறேன்" என்று கூறிக் கொண்டே அய்யாக் குட்டி கழியைப் பிடித்து மேலே இழுக்க முயற்சித்தார். எனக்கு வந்த கோபத்துக்கு அளவேயில்லை. அப்படியே மேலே இழுத்தால் பற்றுக் கழி முறிந்து விடலாம். அல்லது அவரும் கனம் தாங்காமல் உள்ளே விழுந்து விடலாம். நான் கிணற்றிலிருந்து கத்தினேன். "இழுத்தால் கையை விட்டு விடுவேன். யாராவது ஆளைக் கூப்பிடுங்கள் சீக்கிரம்!" என்று சத்தம் போட்டேன். இன்னும் ஒரு கணம் கூடத் தொங்க முடியாதென்று தோன்றியது. ஒரு யுகம் போலத்

தோன்றிய நேரத்துக்குப் பிறகு பக்கத்தில் எங்கேயோ வேலை செய்து கொண்டிருந்த பண்ணையாள் ஒருவன் ஓடிவந்து கிணற்றில் இறங்கி என் கையைப் பிடித்துக் கிணற்றின் ஓரத்தில் இருந்த கல்லின் மேல் நிற்கச் செய்தான். அங்கு நின்று என் கையைப் பார்த்தேன். ரத்தம் வந்து விடும் போல் இருந்தது. பிறகு சுலபமாக ஒவ்வொரு படியாக ஏறி விட்டேன். நான் மேலே ஏறி வெளியே காலை வைக்கும் சமயத்தில் அய்யாக்குட்டி என் கையைப் பிடித்தார். நான் வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டேன். மறுபடியும் தடுமாறி விழப் போனேன். மெதுவாக அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு சற்று சிரமத்துடன் கிணற்றிலிருந்து வெளியே வந்தேன். அப்பா அழுது விட்டார், பாவம்! "இந்து நீ இப்படிச் செய்யலாமா?" என்று கம்மிய குரலில் கேட்டார். என்னை மெதுவாக உள்ளே அழைத்துச் சென்று உடை மாற்றிக் கொள்ளச் சொன்னார்.

பிறகு, "இந்து! உனக்கு எப்போதுமே பரபரப்பு அதிகமாக இருக்கிறது. எல்லா வற்றிலும் சற்று நிதானம் வேண்டும், அம்மா! நீ இனிமேலாவது இந்த மாதிரி அபாயங்களுக்கு உட்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும். இந்தக் கிழவனை இன்னும் சோதிக்கப் போகிறாயா?" என்றார்.

வாஸ்தவமாகவே எனக்கு ரொம்பப் பரபரப்பு அதிகம். ஒரு கணம் சும்மா இருக்க முடியாது. ஏதாவது செய்து கொண்டே இருப்பேன். எங்கேயாவது இடித்துக் கொள்வேன். நெருப்பில் சுட்டுக் கொள்வேன். விழுவேன். ஆனால் யாரிடமும் சொல்ல மாட்டேன். அதெல்லாம் எனக்கு சகஜமாகப் போய் விட்டது. நான் அதைச் சிறிதும் லக்ஷியமே செய்ய மாட்டேன்.

"ரங்கதுரைக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்? அவர் இங்கிருந்தால், எவ்வளவு கவலைப்பட்டிருப்பார்? தானே கிணற்றில் இறங்கித் தூக்கி விட்டிருப்பார். அவர் என்னைக் காப்பாற்றுகிறார் என்ற உணர்ச்சியில் மெய் மறந்திருப்பேன். 'இனி மேல் நீங்கள் கொடுத்த உயிர் தான் எனக்கு' என்று சொல்லியிருப்பேன்." இப்படிப் பட்ட மனோ ராஜ்யங்களில் ஆழ்ந்து விட்டேன்.



அய்யாக்குட்டி தொண தொணவென்று பேசிக் கொண்டிருந்தார். "எங்காவது அடிபட்டிருக்கிறதா, இந்துமதி?" என்று கேட்டார். எனக்குப் பரிகாசமாகப் பதில் சொல்ல வேண்டும் போல் இருந்தது. "பெரிதாகப் பட்டிருக்க வேண்டியது. ஏதோ அந்த ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் பிழைத்தேன்" என்று கூறினேன்.

"ஆமாம், ஆமாம். மாட்டிக் கொண்டு புனர் ஜன்மம் எடுத்தாய் என்று சொல்லு. எப்படிப் பட்ட கண்டத்திலிருந்து தப்பினாய்?"

"நான் அந்தக் கண்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை. இன்னும் பெரிய கண்டத்தைச் சொல்லுகிறேன்."

"அது என்ன?" அய்யாக் குட்டியின் முகம் சிறுத்தது.

"நான் கிணற்றிலிருந்தபோது நீங்கள் பற்றுக் கழியைப் பிடித்துத் தூக்கியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? என்னை இழுக்க முடியாமல் நீங்கள் முன்னே சாய, கிணற்றின் கரையே இடிந்து நீங்களும் உள்ளே விழுந்திருப்பீர்கள். பிறகு அந்தக் கிணற்றிலிருந்து நான் கரையேறியே இருக்க மாட்டேன்."

அய்யாக்குட்டியின் முகம் சுண்டை வற்றலைப் போல் சுருங்கிப் போயிற்று.

என்னால் மறுநாள் நடக்கவே முடியவில்லை. நன்றாக வலது கால் சுளுக்கிக் கொண்டு விட்டது. அன்று அப்பா அறுவடை காரியமாக வெளியே போய்த் தீரவேண்டியதாயிற்று. அவர் எப்போது போவார் என்று காத்திருந்தது போல், அய்யாக்குட்டி என்னிடம் வந்து சேர்ந்தார்.

மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார். வலி எப்படியிருக்கிறதென்று விசாரித்தார். பொதுவாகச் சில விஷயங்கள் பேசினார். கடைசியில், "இந்துமதி! ரங்கதுரை வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வானென்று நம்புகிறாயா?" என்று கேட்டார்.

"அது என்னுடைய சொந்த விஷயம். அதில் நீங்கள் தலையிட்டுக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை."

"அது உன்னுடைய விஷயம் மாத்திரம் இல்லை; என்னுடைய சொந்த விஷயம் அதனால் பாதிக்கப்படுவதால்தான் கேட்கிறேன். இந்து! உன்னிடம் நான் எப்படிச் சொல்லாமலிருக்க முடியும்?

உன்னை எனக்கு ரொம்பப் பிடித்து விட்டது. நீ இல்லாமல் என்னால் உயிர் வாழவே முடியாது. என்னை நீ மணந்து கொண்டு விட்டால் உனக்கு எப்போதும் ஒரு குறைவும் வராது.''

"போதும், போதும்! இப்படி யெல்லாம் ஒரு பெண்ணிடம் வந்து பேச உங்களுக்கு வெட்கமாக இல்லையா? உங்களுக்கும் அந்தக் கேடு கெட்ட சொக்கையாவுக்கும் என்ன வித்தியாசம்?''



நான் அதைக் கூறியது எவ்வளவு தவறு என்று அடுத்தபடி அய்யாக்குட்டி கூறியதிலிருந்து தெரிந்தது. அதை அவர் நன்றாகப் பயன் படுத்திக் கொண்டார்.

"ஆமாம், இந்து! எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அவன் உன் வாழ்க்கையைக் குலைப்பதற்கு முயன்றான். நான் அதைச் சீராக்குவதற்கு முயல்கிறேன். இதை விட என் அன்புக்கு என்ன அத்தாட்சி வேண்டும்? என்னை நீ மணந்து கொண்டு விட்டால் சொக்கையாவைக் கொன்ற பழியிலிருந்து தப்பித்து விடலாம்.''

"ஐயோ! என்ன சொல்கிறீர்கள்? என்னைப் பயமுறுத்துகிறீர்களா?''

"இந்து! இப்படிப் பேசினால் நான் ஏமாந்து விட மாட்டேன். சொக்கையாவைக் கொன்றது நீதான் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பூஜை அறையில் இருந்த விநாயகர் பாதிரித் தோட்டத்துக்கு எப்படிப் போனார்?''

எனக்கு வியர்த்துக் கொட்டியது. "ஐயோ! ஏன் இப்படி என்னைச் சித்திரவதை செய்கிறீர்கள்?'' என்று கதறி அழுது விட்டேன்.

நான் பயந்து விட்டதை அவர் தெரிந்து கொண்டார். "இந்துமதி! நீ இப்படிப் பயப்படவே வேண்டாம். பெரிய பெரிய போலீஸ்காரர்களை யெல்லாம் எனக்குத் தெரியும். டெபுடி போலீஸ் கமிஷனர் எனக்கு ரொம்ப சிநேகிதர். என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டாயானால் ஒருவரும் சந்தேகிக்கக்கூட மாட்டார்கள். நீ தனியாக இருந்தாயானால், கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டு விட்டால் போதும். பிறகு உன்னைப் பிடித்து ஜெயிலில் போட்டுவிடுவார்கள். உன்னால் என்ன செய்ய முடியும்? அதற்கெல்லாம் ஒரு தகுதியான துணை வேண்டாமா?''

"இப்படி யெல்லாம் நீங்கள் என்னைப் பயமுறுத்துவது நியாயமா? உங்களுக்கே சரியென்று படுகிறதா? உங்களுடைய மிரட்டலுக்குப் பயந்து உங்களை மணந்து கொண்டால்தான் வாழ்க்கையில் சந்தோஷம் ஏற்பட முடியுமா? இந்த எண்ணத்தை விட்டு விடுங்கள். என் தலையே போனாலும் சரி, இதற்கு நான் உடன்பட மாட்டேன். நீங்கள் பரிசுத்தமான மனத்துடன் என்னிடம் பிரியமாக இருக்கிறீர்கள் என்று நம்பி வந்தேன். சுயநல நோக்க முள்ளவர் தான் என்று இப்போதுதெரிந்து கொண்டேன். இல்லா விட்டால் மன மறிந்து இப்படி ஒரு வீண்பழியை என்மீது சுமத்துவதற்கு உங்களுக்குத் தைரியம் வருமா?''

"இப்படி யெல்லாம் குழைந்து, நயமாகப் பேசினால் நான் பயந்துவிட மாட்டேன். ஒரு வாரத்துக்குள் நீ சரியென்று சொல்லா விட்டால் நான் போலீஸில் போய்ச் சொல்லி விட்டு வந்து விடுவேன். அதன் பிறகு என்ன ஆகுமோ எனக்கு அக்கறை இல்லை'' என்று சொல்லி விட்டு விர்ரென்று எழுந்து வெளியே போய் விட்டார்.

அவர் தொலைந்ததே எனக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. குமுறி அழுதேன். அந்தப் பாவி தான் செய்ததையும் செய்து விட்டு என் மீது பழி சுமத்தப் பார்க்கிறாரே? இதிலிருந்தே குற்றவாளி அவர்தானென்று தெரியவில்லையா? என் மனம் பதறியது. ஆனால் என்ன செய்வதென்று தெரிய வில்லை. சர்வேச்வரன் ஒருவருக்கே என் துயரம் தெரிந்திருக்க முடியும்.

அப்பா, "இந்துமதி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே என்னிடம் வந்தார். என்னைப் பார்த்தவுடனேயே அவருக்குப் புரிந்து விட்டது. வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வந்து என் அருகில் உட்கார்ந்தார். "இந்துமதி! உன் தாயார் என் தலையில் எப்பேர்ப்பட்ட பொறுப்பைச் சுமத்தி விட்டுப் போய் விட்டாள்? அவள் இருந்தால் இப்படி யெல்லாம் நேருமா? உன்னை

விட்டுப் போக அவளுக்கு எப்படி மனம் வந்ததோ தெரிய வில்லை. அது சரி! அய்யாக்குட்டி ஏதாவது சொன்னாரா?”

“ஏதாவது இல்லை. என் உயிருக்கே உலை வைத்து விடும்படியான விஷயம் சொன்னார்.”

“விவரமாகச் சொல்லு, அம்மா! பதட்டப் படாதே!”

விம்மலுக்கும், அழுகைக்கும் இடையே அய்யாக்குட்டி கூறியதை யெல்லாம் அவரிடம் சொன்னேன்.

அப்பா கேட்டு விட்டு, “இந்துக் கண்ணு! அது நீ நினைப்பது போல் அவ்வளவு சுலபமான காரியம் இல்லை, அம்மா! போலீஸில் துப்புக் கொடுக்க வேண்டுமானால் பல சான்றுகள் வேண்டும். ஏன் உடனே சொல்ல வில்லை என்று கேட்பார்கள். அவனைப் பற்றி விசாரிப்பார்கள். போலீஸுக்குப் போகுமளவுக்கு அவனுக்குத் துணிச்சல் இருக்காது. அவனைப் பற்றிய விஷயமெல்லாம் அம்பலத்துக்கு வந்து விடும். அதன் மூலம் இந்தக் கொலையிலும் அவன் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிப்பார்கள். இதெல்லாம் அய்யாக்குட்டி அறியாதவன் அல்ல. அதனால் நீ இவ்வளவு கவலைப்பட வேண்டாம்.”

“ஒரு வேளை தன் பேரில் சந்தேகம் ஏற்படாமலிருக்க இவரே துப்புக் கொடுக்கலாம் அல்லவா? அப்போது போலீஸில் இவரை எப்படிச் சந்தேகிப்பார்கள்?” என்றேன்.

“இல்லை, அம்மா! அவனுக்குத் தைரியம் வராது. அவன் ரொம்பக் கோழை. உன்னிடம்தான் அவன் ஜம்பமெல்லாம். நான் பார்த்துக்கொள்கிறேன். நீ கவலைப்படாதே. உன் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள் போதும்” என்று சொல்லிக் கொண்டே நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். எனக்கும் தலையை ஒரேயடியாக வலித்துக் கொண்டிருந்தது.



“இப்படிச் சுடுகிறதே, அம்மா! கிணற்றில் விழுந்தது போதாதென்று, அழுதழுது ஜுரம் வரவழைத்துக் கொண்டு விட்டாயே! என்ன செய்வேன், இந்து! டாக்டரை அழைத்துக் கொண்டு வரச் சொல்கிறேன்” என்றார்.

டாக்டர் வந்து மருந்து கொடுத்தார். உடம்பு பலஹீனமாக இருந்தது. டாக்டர் ராவ் அப்பாவிடம், “இந்துவுக்கு இடமாறுதல் இருந்தால் தேவலை. அவள் அம்மாவை நினைத்து இன்னும் கஷ்டப் படுகிறாள் போலிருக்கிறது. அதனால் தான் உடம்பு தேற வில்லை. நீங்கள் அவளை அழைத்துக் கொண்டு ஒரு மாதம் எங்கேயாவது போய் விட்டு வாருங்கள். அதன் பிறகு உடம்பு சீக்கிரம் தேறி விடும். சமுத்திரக் கரையோரமாக இருக்கும் இடத்துக்குப் போனால் அவளுக்கும் உற்சாகமாக இருக்கும். உடம்புக்கும் நல்லது” என்றார்.

அந்த எண்ணமே ஓரளவுக்கு எனக்கு உற்சாக மளித்தது. நான் கடலையே கண்டதில்லை. மேலும், முக்கியமாக இந்த அய்யாக்குட்டியின் முகத்தில் விழிக்காமல் ஒரு மாதம் இருக்கலாம் என்ற எண்ணம் எனக்குப் புதிய பலத்தை அளித்தது.

மறு நாளே நான் பிரயாணத்துக்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி விட்டேன். உற்சாகமாகத் தேன்குழல் செய்தேன். வெல்லப்பாகு வைத்து அதில் தேன்குழலைப் போட்டுக் கிளறி மனோகரம் செய்தேன். என் தந்தைக்கு ரொம்பப் பிடித்த பக்ஷணம் அதுதான்.

விஜயராம பட்டினத்துக்குப் போகலாம் என்று என் தந்தை கூறினார். ரொம்ப அழகான சந்தடியில்லாத இடம் என்று கூறினார்.

இந்த ஏற்பாடெல்லாம் அய்யாக்குட்டிக்கு மாத்திரம் பிடிக்க வில்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

நாங்கள் புறப்பட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபோதெல்லாம் “இந்தக் குங்குமத் துறையைவிட அழகான பிரதேசம் இந்தப் பூலோகத்திலேயே கிடையாது. ஸ்விட்ஜர்லாந்து கூட இத்தனை அழகாக இருக்குமா என்பது சந்தேகம் தான். இந்த இடத்தை விட்டு வேறெங்கேனும் போவார்களா? விஜயராம பட்டினத்தில் என்ன இருக்கிறது பார்க்க?” என்று அய்யாக்குட்டி சொல்லிக் கொண்டிருந்தார்.

நானும் அப்பாவும் அவருக்குப் பதில் சொல்லிச் சாத்தியமில்லை என்று அவரைப் பொறுத்தவரை பேசாமலிருந்தோம். ஆயினும் அய்யாக்குட்டிவிட்டால் தானே? என் தந்தை மரியாதைக்காக,


மணியம்




"நீயும் வாயேன், அய்யாக்குட்டி! நாமெல்லோரும் வேடிக்கையாக இருந்து விட்டு வருவோமே!" என்று கூப்பிட்டார்.

நல்லவேளையாக அய்யாக்குட்டி, "அது முடியாத காரியம், மாமா! என் கொட்டகை ஆட்கள் எல்லாரும் இங்கு இருக்கிறார்கள். இதை விட்டு விட்டு நான் வந்தால், வசூலாகும் பணம் 'கோவிந்தா' ஆகி விடும். நாமத்தைக் குழைத்துப் பூசிக் கொள்ள வேண்டியது தான்" என்று சொல்லி விட்டார். "நான் இங்கே வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன்" என்றார். ஒருவாறு புறப்பட்டு விஜயராம பட்டினத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்.

என்ன அழகு! என்ன அழகு!! விஜயராம பட்டினத்தில் நான் கண்ட காட்சி என் உள்ளத்தை விட்டு இன்னும் அகலவில்லை. நெடுந் தூரம் பிரயாணம் செய்த களைப்பையும், வெப்பத்தையும் தணித்துக்கொள்வதற்காகச் சூரியன் கடலில் ஸ்நானம் செய்ய இறங்குவது போலத் தோன்றியது. 'என்ன இது! சூரிய பகவான் சமுத்திர நீரில் கரைந்து விட்டாரா? நீல நிறமாக இருந்த நீர் அப்படியே தங்க நிறமாகி விட்டதே!' என்று நினைக்கும்படி சூரிய அஸ்தமனக் காட்சி பிரமிப்பூட்டுவதாக இருந்தது. இயற்கை அன்னையின் பூரண எழிலையும், வர்ண ஜாலங்களையும் அங்கே கண்டேன். வித விதமான சோழிகளும், கிளிஞ்சல்களும், சங்குகளும் மனத்தைக் கவர்ந்தன. அங்கங்கே சில வயதான ஸ்திரீகள் இந்த சித்திர விசித்திர வேலைப்பாடுகள் நிறைந்த வஸ்துக்களைச் சேகரித்து விற்றுக்கொண்டிருந்தார்கள். நான் நிறையச் சோழிகளும் சங்குகளும் வாங்கிப் பெட்டியை நிறைத்து விட்டேன்.

நாங்கள் சென்று இறங்கிய பங்களா விஸ்தாரமாக நன்றாக இருந்தது. காற்று ஜிலுஜிலுவென்று சுகமாக வீசிற்று. உடம்புக்கு வெய்யிலும் காற்றும் மிகவும் இதமாக





அடையார் ஆர்ட் அகாடமி

அடையார் : சென்னை

★

12-2-55 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு
காந்திநகர் பள்ளிக்கூடத்தில்

குமாரி என். ராஜம் ... பாட்டு
வரகூர் முத்துசாமி ஐயர் ... பிடில்
திருச்சி ராகவன் ...மிருதங்கம்

அச்சு இயந்திரத்தில் ஒரு புரட்சி!

சென்னையில் நடைபெறும் அகில இந்திய அச்சுத் தொழில் பொருட்காட்சி நிலையத்தில் நீங்களே வந்து எமது ஸ்டாலில் நேரில் பார்வையிடுங்கள்.

★

தி ஸ்டாண்டர்டு
பிரிண்டிங் மெஷினரி கம்பெனி

12/81, செம்புதாஸ் தெரு :: சென்னை-1
போன்: 55096 தந்தி: 'PRINTMACHO'

அண்டு

தி ஸ்டாண்டர்டு டைப் பவுண்டரி

கல்கத்தா — பம்பாய் — டில்லி

திருச்சி பைன் ஆர்ட்ஸ் (REGD.)

13-2-55 மாலை 5-30 மணிக்கு : திருச்சி தேவர் ஹாலில்

★

கராச்சி கான்சாஹேப்

படே குலாம் அலிகான் & பார்ட்டி

ஹிந்துஸ்தானி சங்கீதம்

டிக்கெட்டுகள்: ரூ. 10, 5, 2, 1.

சபா ஆபீஸில் (மெயின் கார்டுகேட்) டிக்கெட்டுகள் முன்னதாகவே கிடைக்கும்

ஒலிபெருக்கி அமைப்பாளர்: அஸோஸியேடட் ரேடியோ ஏஜன்ஸீஸ், திருச்சிராப்பள்ளி

இருந்தன. என் தந்தை பரவசமான நிலையில் இருந்தார். அங்கே உள்ள ஏதேனும் ஒரு பாறையில் உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்து விடுவார். அதுவும் எனக்குச் சௌகரியமாகவே இருந்தது. நான் என்னுடைய மனோ ராஜ்யங்களில் ஆழ்ந்து விடுவேன். ஏன், நானும் தியானம்தான் செய்து கொண்டிருந்தேன்! என் இஷ்ட தேவதையாக, ரங்கதுரை என் உள்ளத்தில் கோயில் கொண்டிருந்தார்.

சமுத்திரத்தில் இறங்கித் திளைத்து ஸ்நானம் செய்வேன். அலை வரும்போது அதில் முங்கி எழுந்திருப்பதில் சிறு குழந்தை மாதிரி ஆனந்தப் பட்டேன். கொஞ்ச தூரத்துக்கு அப்பால் சென்று தண்ணீரில் அமிழ்ந்து விடுவேன். என் தந்தை மிரண்டு போய் விடுவார்.

"இந்து, உன் தைரியத்துக்கும் சாமர்த்தியத்துக்கும் நீ ஆண் பிள்ளையாகப் பிறந்திருக்க வேண்டும். ஐயோ! நீ பிள்ளையாகப் பிறந்திருந்தால் எனக்கு எவ்வளவு நிம்மதியாக இருக்கும்" என்று அடிக்கடி கூறிக் கொண்டிருந்தார். சமுத்திரத்தில் ஸ்நானம் செய்யும் போது சுகமாக இருக்குமே தவிர, குளித்த பிறகு மேலே உப்பு ஒட்டிக் கொண்டு சிரமமாக இருக்கும். தெள்ளத் தெளிந்த ஸ்படிகம் போன்ற அருவி நீரில் ஸ்நானம் செய்து வழக்கமான எனக்கு அது மாத்திரம் சிரமமாக இருந்தது.

ரங்கதுரையின் நினைவு என் நெஞ்சை நிறைத்துக் கொண்டிருந்தது. அவரும் இங்கே வந்திருந்தால் எவ்வளவு குதூகலமாகப் பொழுது போகும்? அவர் நன்றாய் ரஸிப்பார். இந்த அழகிய காட்சியை அவரைப் போன்ற ரஸிக உள்ளம் படைத்தவர்களோடு சேர்ந்து அநுபவித்தால் இன்னும் சந்தோஷமாக இருக்கும். அவர் திரும்பி வந்த பிறகு அவருடன் மறுபடியும் பௌர்ணமி நாளில் இங்கு வர வேண்டும். இரவு முழுதும் அவரைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.—இப்படி என் எண்ணங்கள் ஓடின.

அத்தியாயம் 41

வக்கீல் குடும்பம்

தினமும் கடலில் குளித்த பிறகு நானும், என் தந்தையும் கடற்கரையருகிலிருந்த கோவிலுக்குச் சென்று விட்டு வருவோம். நாங்கள் வந்து ஐந்து தினங்களுக்குப் பின் ஒரு நாள் இப்படித்தான் கோவிலிலிருந்து வந்து கொண்டிருந்தோம்.

"அப்பா! கோவிலுக்குள் சென்று விட்டால் ஒரு பரிசுத்த உணர்ச்சி உண்டாகிறது அல்லவா?" என்று கேட்டேன் நான்.

'ஆமாம், இந்து! ஆனால் கோவில் அந்தப் பரிசுத்த உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதற்கு ஒரு சாதனம் தான். அந்த உணர்ச்சி எப்போதும் நம் மனத்திற் குள்ளே இருந்து கொண்டு தான் இருக்கிறது."

"ஆனால் நமக்கு ஏன் எப்போதும் தெரிவதில்லை?"

"மனத்தி லுள்ளதை வெளிப் படுத்துவதற்கு ஒரு மார்க்கம் வேண்டியிருக்கிறது. உலகம் நமக்காக இருக்கிறது என்று நாம் எண்ணுகிறோம். உலகத்தில் எந்தப் பகுதியும் ஆண்டவன் கோவில் என்றும், மனிதர்கள், விலங்குகள், பட்சிகள் எல்லாமே அவருடைய நடமாடும் விக்கிரகங்கள் என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி நினைக்கத் தொடங்கி விட்டால் கோவிலுக்குப் போகும் அவசிய மிருக்காது. நீ அந்த மாதிரி மனப் பக்குவத்தை அடைந்து விட்டால் எனக்கு உன்னைப் பற்றிக் கவலையே இருக்காது."

"அந்த மாதிரி மனப் பக்குவத்தை அடைய நான் விரும்பவில்லை."

"ஏனம்மா அப்படிச் சொல்லுகிறாய்?"

"அந்த மனப் பக்குவத்தை அடைந்து விட்டேனானால் என்னைப் பற்றிக் கவலைப் பட மாட்டேன் என்று சொன்னீர்களே."



"ஆமாம்! அதனால் என்ன?"

"ஒருவரைப் பற்றி நாம் எவ்வளவுக் கெவ்வளவு கவலைப்படுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நமக்கு அவர்கள் மீது பிரியம் அதிகம் என்றுதானே அர்த்தம். அதனால் என்னைப் பற்றி நீங்கள் ரொம்



பக் கவலைப்பட்டால்தான் நீங்கள் என்னிடம் ரொம்ப அன்பாக இருக்கிறீர்கள் என்று தெரியும். உங்கள் அன்பு எனக்குத் தெரிய வேண்டுமானால் நான் அவ்வளவு பக்குவம் அடையக் கூடாது."

என் அருமைத் தந்தை கலகலவென்று சிரித்தார். "நான் உன்னிடம் அன்பாக இருந்தால் போதாது. அது ஒவ்வொரு நிமிஷமும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறாயா? இப்போது தெரிகிறது. நீ சமுத்திரத்தில் வெகு தூரத்தில் போய் என்னைக் கதிகலங்கச் செய்வது இதற்காகத்தானா? நல்ல பெண் நீ!" என்றார்.

பிறகு, "நீ எப்போதும் இப்படித்தான் இருப்பாய், இந்து! குழந்தையாக இருந்த போது வெடுக்கு வெடுக்கென்று பேசுவாய். 'சூரியனே உதிக்கா விட்டால் நான் கிழமை யெல்லாம் எப்படிக் கணக்கிடுவது?' என்று கேட்பாய். எனக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கும்.

"உனக்கு ஏழெட்டு வயதாக இருந்த போது என் தங்கை நம் வீட்டுக்கு வந்திருந்தாள். வந்த புதிதில் ஒரு நாள் உன்னிடம் வந்து 'கண்ணே! என் பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிறயா?' என்று கேட்டாள். உனக்குக் கோபம் வந்து விட்டது. 'என்னை ஒண்ணும் கேக்காதீங்க, அத்தை. நான் அப்புறம் வெடுக்குன்னு பேசுவேன்' என்றாய். அவளோ விடவில்லை. 'வெடுக்குன்னுதான் ஒரு வார்த்தை பேசேன், பார்ப்போம்' என்றாள். நீ, 'வெடுக்கு, வெடுக்கு, வெடுக்கு' என்று பத்துத் தடவை சொல்லி விட்டு, 'போதுமா! இன்னும் வேணுமா?' என்று கேட்டாய். சந்திரமணியும் நானும் அதைச் சொல்லிச் சொல்லிப் பல நாட்கள் சிரித்திருக்கிறோம். அதே மாதிரி நீ இன்னும் இருக்கிறாயே என்று நினைத்துப் பார்த்தால் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது" என்றார்.

"இதைச் சொல்லுகிறீர்களே அப்பா, நான் ஒரு சின்னக் குரங்குக் குட்டி வளர்த்தேன். அதன் அம்மா செத்துப் போய் விட்டது. அந்தக் குட்டிக்கு ஆகாரம் சாப்பிடத் தெரியவில்லை. அதற்காக நான் அத்தை தன் குழந்தைக்காக வைத்திருந்த பால் புட்டியில், என் குரங்குக் குட்டிக்குப் பாலை விட்டுக் கொடுத்து விட்டேன். அத்தையின் குழந்தையை விட என் குரங்குக் குட்டி ஒரு விதத்திலும் குறைந்ததல்ல என்பது என் அபிப்பிராயம். ஆனால் அதற்காக அத்தை என்னைப் படுத்திய பாட்டை நினைத்தால் இப்போது கூடப் பயமாக இருக்கிறது. அதற்குப் பிறகுதான் என்னைத் தன் மருமகளாக்கிக் கொள்ளும் எண்ணத்தையே அத்தை அடியோடு விட்டு விட்டார்கள்."

நாங்கள் இருவரும் சிரித்தோம். அதற்கு எதிரொலி போல் சிரிப்பொலி கேட்டது. நாங்கள் இறங்கி யிருந்த பங்களாவின் எதிரில் ஒரு மோட்டார் வண்டி நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து சிலர் இறங்கினார்கள். மிகவும் நாகரிகத்தில் மூழ்கியவர்களாகக் காணப் பட்டார்கள். அவர்களுடைய நடைஉடைகளை யெல்லாம் கண்டு நான் அதிசயித்து நின்றேன். விரைவில் பங்களாவை அடைந்தோம். அங்கு நான் கண்ட காட்சி என்னை இன்னும் வியப்படையச் செய்தது. அவர்கள் கொண்டு வந்திருந்த பெட்டிகளும், சாமான்களும் ஒரு குடித்தனம் செய்வதற்குப் போதுமானதாக இருக்கும். சிரிப்பும், களிப்பும், கும்மாளமுமாக அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். பாதி ஆங்கிலமும் பாதி தமிழுமாகப் பேச்சு ரொம்ப வேடிக்கையாக இருந்தது.

சற்று வயதான தம்பதிகளும், ஒரு யுவன், யுவதி ஒரு ஐந்து வயதுக் குழந்தை இவர்கள்தான் வந்திருந்தார்கள். ஒருவன் டிரைவர் என்று தெரிந்தது.


அந்தப் பெண் அணிந்திருந்த மெல்லிய, பட்டுப் பூச்சியைப் போன்ற வர்ணங்கள் தீட்டப் பட்டிருந்த சேலை என் மனத்தைக் கவர்ந்தது. அவளும் அழகாக இருந்தாள். அந்தமாதிரி சேலையே நான் பார்த்ததில்லை. அந்தச் சேலையின் மூலம் அந்தப் பெண்ணும் என் மனத்தைக் கவர்ந்தாள்.

(தொடரும்)






மணமும் மகிழ்வும் பெற...
TSR
சந்தனாதித் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
கதம்ப காய்கறி ஊறுகாய்கள்
வாசனைப் பாக்கு
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
தென்னிந்தியா
சென்னை நகருக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: கூராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு. கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டு: B. பாலபட்டாபி செட்டியார், கோயமுத்தூர்.


குடிசைத் தொழிலின் முன்னேற்றம்
காந்திய முறைப்படி தினம் தயாராகும் ஐந்து லக்ஷம் தீப்பெட்டிகளும் எங்களது டிப்போக்களில் செலவாகி வருகின்றன. தலை மருந்து, சைடு மருந்து கடற்கரை மற்றும் குளிர் பிரதேசங்களுக்கு மிக உகந்தது.
சிறந்த சரக்கு உற்பத்தி—
சிறப்பான பொதுஜன ஆதரவு
பிரேம்களில் தீப்பெட்டிகள் அடுக்கப் படுகின்றன
SIMCO
தந்தி 'SIMCO'
போன் '63'
எமது டிப்போக்கள் :
அருப்புக்கோட்டை ○ ஆத்தூர் ○ ஈரோடு ○ உடுமலைப்பேட்டை ○ ஊட்டி ○ கண்ணனூர் ○ சேலம் ○ கருநாகப்பள்ளி ○ கும்பகோணம் ○ காயங்குளம் ○ கள்ளிக்கோட்டை ○ கள்ளக்குறிச்சி ○ கோயமுத்தூர் ○ திருத்துறைப்பூண்டி ○ கொல்லம் ○ விருதுநகர் ○ தர்மபுரி ○ சீர்காழி ○ விழுப்புரம் ○ தலைச்சேரி ○ பழனி ○ திண்டுக்கல் ○ திருச்சிராப்பள்ளி ○ திருவாரூர் ○ மாயவரம் ○ பரமக்குடி ○ தூத்துக்குடி ○ மன்னார்குடி ○ பாலக்காடு ○ பொள்ளாச்சி ○ தென்காசி ○ மதுரை ○ மங்களூர்
கல்கத்தாவில் கிடைக்குமிடம் :
சிங் பிரதர்ஸ்
50, தர்மதோலா தெரு, கல்கத்தா
சிம்கோ சிவகாசி, S.I.

தேனம்பேட்டையில் தேசீயத் திருவிழா



பகீரதன்

சீப் இன்ஜினீயர் ஸ்ரீ கே. கே. நம்பியார் ஸ்ரீ நேரு அவர்களை ஹைவேஸ் இலாகாப் பகுதிக்குள் அழைத்துச் சென்று காண்பிக்கிறார். சென்னை ஹைவேஸ் இலாகாவின் சாதனைகளை நேருஜி வியப்போடு பார்ப்பதைக் கவனியுங்கள்.

சென்ற இதழ் தொடர்ச்சி

இந்திய அரசாங்கப் பகுதியின் வாசலில் போய் நின்று உள்ளே பார்த்தால் ஏதோ ஒரு தனி நகரத்துக்குள் நுழைவது போன்ற ஒரு பிரமை தட்டியது. தமிழ் நாட்டின் கலை மணம் கமழும்படி அமைத்துள்ள இந்திய சர்க்கார் வாசலின் அழகை நேரே பார்த்துத்தான் அநுபவிக்க வேண்டும். உள்ளே உழைப்பின் பயனை உணர்த்துவது போல ஒரு தொழிலாளி சம்மட்டியைத் தூக்கிப் பிடித்து இரும்புப் பணியில் அடிக்கும் காட்சி நம்மை, "வாருங்கள். இந்திய சர்க்காரின் சாதனைகளை வந்து பாருங்கள்!" என அழைப்பது போல் இருக்கிறது. அந்தக் காட்சியைப் பார்த்து அநுபவித்த வண்ணம் இந்திய சர்க்கார் பகுதிக்குள் புகுந்து ஒவ்வொரு இலாகா மண்டபத்தையும் பார்க்க ஆரம்பித்தோம்.

இந்திய சர்க்கார் நமது இந்திய தேசப்படத்தை மாதிரிச் சிற்பமாகச் செய்து அதில் மக்கள் திட்டத்துக்குத் தாங்கள் வகுத்துள்ள சாதனைகளையெல்லாம் செய்து காண்பித்திருக்கிறார்கள். கடவுள் உலகத்தை அமைக்கும் போது ஏதோ கன்னா பின்னா என்று கோணல் மாணலாக அமைத்து விட்டிருக்கிறார். ஆனால் இந்தியாவை அமைக்கும் போதோ, பகவான் ஒரு சிறந்த சைத்ரிகராகி, சௌந்தர்ய வடிவமாக அமைத்திருக்கிறார்! இந்தியாவின் அமைப்பு எவ்வளவு அழகானது என்பதை இந்திய சர்க்கார் இலாகாவில் காட்டியுள்ள இந்திய தேசப் படத்தின் உருவத்தைப் பார்த்தபோது நன்றாய்த் தெரிந்தது.

இதுவரை இந்தியா எவ்வாறு முன்னேறியிருக்கிறது! எதிர் கால சுபிட்சத்துக்கு எம்முறையில் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை இந்திய சர்க்காரின் ஒவ்வொரு பிரிவிலும் மிகத் தெளிவாகக் காண்பித்திருக்கின்றனர்.


செய்தி, விளம்பர இலாகா அமைத்திருக்கும் மண்டபத்தில் ஐந்து வருஷத்திட்டத்தை மாதிரிச் சிற்பங்களாகவும், புகைப்படங்களாகவும் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் முறையில் விவரித்திருக்கின்றனர். விவசாயம், சமூக நலத் திட்டங்கள், கைத்தொழில், நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, சமூக சேவை ஆகிய துறைகளில் சர்க்கார் ஈடுபட்டுச் செய்து வரும் அபிவிருத்தி வேலைகள் முதலிய பல விஷயங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளை எல்லாம் பார்த்த என் நண்பர் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்பட்டுப் போனார். "அடாடா! இந்திய சர்க்கார் எவ்வளவு பெரிய திட்டங்கள் வகுத்துக் காரியங்கள் செய்து வருகின்றனர். பெரிய தேசமானதால் இந்தக் காரியங்கள் எல்லாம் நமக்கு உடனுக்குடன் பலன் கொடுக்கவில்லை. இருநூறு வருஷம் கவனிக்கப்படாமல் இருந்துவிட்ட தேசத்தை ஒரு சில வருஷங்களில் சுபிட்சமுள்ள பிரதேசமாக மாற்றிவிட முடியுமா! கொஞ்சம் அவகாசம் வேண்டியதுதான் என்பது இதைப் பார்த்தால் அல்லவா தெரிகிறது" என்று சொல்லிச் சொல்லி வியந்தார். அந்த வியப்பில் அவருடைய கண் விழிகள் வெளியே வந்து விடுமோ என்னும்படியாக இந்திய சர்க்கார் பகுதியைத் திறந்த வாய் மூடாமல் விழித்துப் பார்க்கலானார்.

இதற்குள்ளாகத் தொழிலாளர் இலாகாவுக்குள் போய் விட்டோம். தொழிலாளர் நலனில் நமது இந்திய சர்க்கார் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றனர் என்பதை அங்குள்ள ஒவ்வொரு குறிப்புகளும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம், பிராவிடண்ட் நிதித் திட்டம், சுரங்க, மலைத் தோட்டத் தொழிலாளருக்கான க்ஷேமநலத் திட்டங்கள், ஜாகைத் திட்டம் முதலிய திட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்க்கும் போது, 'இதை எல்லாம் தொழிலாளர் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் நல்ல முறையில் இந்திய சர்க்கார் எடுத்துக் கூறவில்லையே! அப்படிக் கூறியிருந்தால் நமது சர்க்காரை முதலாளிகளின் சர்க்கார் என்று சிலர் தொழிலாளிகளின் மத்தியில் பிரசாரம் செய்கிறார்களே, அப்படிப் பிரசாரம் செய்யும்படி தொழிலாளர்கள் விடுவார்களா! ஒருகாலும் மாட்டார்கள்' என்றுதான் நினைக்கத் தோன்றியது.

இந்த அரிய பகுதியைப் பார்த்துவிட்டுச் சுரங்கத்துக்குள் புகுந்தோம். ஆம்! உண்மையிலேயே அது சுரங்கம்தான். கோலாருக்குப் போகாமலே கோலார் தங்கச் சுரங்கத்தையும், அது செயல்படும் முறையையும் பார்த்துக் களித்தோம்.

இந்தச் சமயத்தில் எங்கிருந்தோ இனிய கானம் காற்றிலே மிதந்து வந்தது. நமது இந்திய சர்க்கார் ஒரு நல்ல காரியத்தைத் திறமையாகச்





1. பொருட்காட்சியில் உள்ள யுனைடெட் கமர்ஷியல் பாங்கிக் காரியாலயம். 2. சேஷசாயி குரூப் ஸ்தாபனப் பகுதி கண்காட்சியில் இப்படிக் காட்சி தருகிறது.

செய்து வருகிறார்கள். அது என்ன தெரியுமா! நமது புராதனப் பண்பாடும் கலைகளும் ஓங்கி வளருகிற முறையில் அகில இந்திய ரேடியோவை வளர்த்து வருகிறார்கள். இந்த உண்மையை அகில இந்திய ரேடியோப் பகுதி மண்டபத்தில் தெரிந்துகொள்ள முடிந்தது.

இந்தியாவின் பல இடங்களில் புதிது புதிதாக ரேடியோ நிலையங்கள் ஏற்படுத்தியிருப்பதையும், இன்னும் பல இடங்களில் ஏற்படுத்தப் போகும் விவரங்களையும் இந்தப் பகுதியில் அற்புதமாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ரேடியோ அலை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எப்படிப் போகிறது என்பதைத் தத்ரூபமாக, சின்னக் குழந்தை கூடப் புரிந்து கொள்ளும் முறையில் சித்திரித்து வைத்திருக்கிறார்கள். நமது அகில இந்திய ரேடியோ சென்னை நிலையத்தின் புதிய கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டால் எப்படி இருக்கும் என்ற மாதிரிச் சிற்பக் கட்டடம் ஒன்று கம்பீரமாக அங்கு காட்சி தருகிறது.

இந்தப் பகுதியிலிருந்து திரும்பும்போது "நான் தான் ராமன். புது டில்லியிலிருந்து வந்திருக்கிறேன். தபால் தந்தி காரியாலயம் எப்படி வேலை செய்கிறது என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா!" என்று சத்தம் கேட்டது.

"யார் இவ்வளவு மரியாதையாக அழைப்பது!" என்று என் நண்பர் நாலாபுறமும் சுற்றிப் பார்த்தார். ஒருவரையும் காணவில்லை.

மீண்டும் அதே போன்ற சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையைக் கூர்ந்து நோக்கினேன். என்ன ஆச்சரியம்! தபால்காரர் உடையில் பத்தடி உயரமுள்ள ஒரு பொம்மை மனிதர் தபால் தந்தி நிலையத்தின் வாசலில் நின்று கொண்டு கைகூப்பி வணங்கி எல்லோரையும் அழைத்துக் கொண்டிருந்தார். தொண்டுகளில் எல்லாம் சிறந்த தொண்டு தபால்காரர் செய்யும் தொண்டுதான். அவர்கள் தான் எவ்வளவு அருமையான தொண்டை, எவ்வளவு சிறந்த முறையில் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட உத்தமத் தொண்டர் கைகூப்பிக் கூப்பிடும்போது போகாமல் இருக்கலாமா! உடனே தபால் தந்தி நிலையத்துக்குள் சென்றோம்.

இரண்டணா தபால் தலையை ஒட்டித் தபாலைத் தபால் பெட்டியில் போட்டவுடன் அது நாம் எழுதியவர் கைக்குப் போவதற்குள் அதற்காகத் தபால் நிலையம் எடுத்துக் கொள்ளும் கவனமும் பாதுகாப்பும் எவ்வளவு பெரிய பொறுப்பான காரியம் என்பதைப் பார்க்கும்போது வியப்பாகத்தான் இருக்கிறது. தந்தியை ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்கு அனுப்பும் இயந்திரங்கள், பழைய காலத்துத் தந்தி இயந்திரம், இப்பொழுதுள்ள இயந்திரம், கம்பி இல்லாமல் ரேடியோ அலைகளைப்போல் தந்திச் செய்தியை அனுப்பும் இயந்திரம் முதலிய இயந்திரங்களைக் காட்சியில் வைத்து விளக்கிச் சொல்கிறார்கள்.

டெலிபோன் பகுதியில் டெலிபோன் இயங்கும் விதங்கள் விளக்கப்படுகின்றன. நாம் பேசும் பேச்சு எப்படி இன்னொருவர் காதில் போய் அப்படியே விழுகிறது! மத்தியில் வேறு யாரும் அதைக் கேட்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா! ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ரஸமான விஷயம். அருமையாக விளக்கிக் கூறுகிறார்கள். பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம்.

தபால் தலைகள் எப்படி அச்சாகின்றன என்பதை எல்லாம் விளக்கிக் காட்டும் சித்திரக்கூடத்தில் புகுந்தோம். அதில் நமது பிரதம மந்திரி நேருவுக்கு அவர் தந்தை மோதிலால் நேரு எழுதிய கடிதம் உலகம் எங்கும் சுற்றிவிட்டு மோதிலால் காலமான இரண்டு மாதங்கள் கழித்து நேருஜியிடம் வந்து சேர்ந்ததாம். காலமான தந்தையிடமிருந்து திடீரென்று கடிதம் வந்தால், கடிதத்தைப் பெற்ற தனயனின் மன உணர்ச்சி எப்படி இருந்திருக்கும்! இந்தக் கடிதத்தை அப்படியே காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள்.

இத்துடன் விதம் விதமான தபால் தலைகளின் பல்வேறு மாதிரிகளும், பல தேசங்களின் தபால் தலைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. பிரஞ்சிந்தியத் திட்டுக்கள் இந்தியாவுடன் இணைந்தபோது வெளியிட்ட பிரஞ்சிந்திய இணைப்புத் தபால் தலைகளும் இருக்கின்றன. விரைவில் அங்கு கோவா இணைப்புத் தபால் தலைகளும் இடம் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

இன்னும் இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம், இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை முதலியவைகளும் இருக்கின்றன. இலங்கை விமானப் பந்தயத்தில் முதல் பரிசு பெற்ற விமானமும் காட்சியில் இருக்கிறது. இந்த விமானத்தைப் பார்த்தவுடன் என் நண்பர் பெருமை பிடிபடாமல் ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்து விட்டார். நான் நிமிர்ந்து விமான நடை போட்டேன். என்னைப்

போலவே எல்லாரும் விமான நடை போட்டுக் கொண்டு விரைந்து சென்றார்கள்.

விவசாய ஆராய்ச்சிப் பகுதியை வெகு விரிவாக வைத்திருக்கிறார்கள். நமது நாடு விவசாய நாடல்லவா! இந்திய சர்க்கார் நமது நாட்டின் உணவுப் பற்றாக் குறையை இவ்வளவு விரைவில் போக்க என்ன பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை அந்தப் பகுதியில் நன்றாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் சுதந்திரம் பெற்ற பலனையும் இந்தப் பகுதியில்தான் தெரிந்து கொள்ள முடிகிறது. கடந்த நூறு வருடத்தில் செய்திருக்கும் சாதனைகளை விடப் பல மடங்கு அதிகமாகச் சென்ற ஏழு ஆண்டுகளில் செய்திருக்கிறார்கள் நமது இந்திய சர்க்கார் என்பதை எண்ணி ஒவ்வொரு விவசாயியும் நிமிர்ந்து நடக்கலாம்.

நான் என்னை ஒரு விவசாயியாகக் கற்பனை செய்து கொண்டேன். உற்சாகம் கரை புரண்டு ஓடியது. அந்த உற்சாகத்திலேயே என் நண்பரின் முதுகில் ஒன்று வைத்து அவரைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு பொருட் காட்சிக்குள் வேறு பகுதிகளைப் பார்க்கக் கிளம்பினேன்.


இந்திய சர்க்கார் பகுதிக்கு எதிரில் டீ போர்டு ஸ்தாபனத்தாரின் டீ மணம் எங்களை மயக்கி இழுத்துச் சென்றது. இந்தியாவின் பெரிய செல்வமல்லவா தேயிலை! அந்தத் தேயிலை வனத்தை மேலும் வளர்த்து நமது நாட்டின் செல்வத்தைப் பெருக்க டீ போர்டு என்ன பாடுபடுகிறது என்பதை அங்கு காட்டும் சினிமாப் படத்தின்மூலம் தெரிந்து கொண்டோம். ஆளுக்கு ஒரு கோப்பைத் தேநீர் அருந்தினோம். உணர்ச்சி மிகுதியில் 'வாழ்க டீ போர்டு' என்று வாழ்த்தினோம். உற்சாகமாக மேலே நடந்தோம். சற்றுத் தூரம் சென்றவுடன் என் தோளைப் பிடித்து நிறுத்தினார் நண்பர்.

"இங்கே பார்த்தீரா ஓவியர் பாலு சகோதரர்களின் காந்திஜி கண் காட்சி மண்டபத்தை! இதற்குள் போகலாமா!" என்று கேட்டார்.

"இதோ கரும்பு, சாப்பிடுங்கள்" என்றால் "கூலிக்கா!" என்று கேட்பேனா! அல்லது "பல் வலிக்கும்" என்றுதான் சொல்வேனா! "சரி" என்று காந்திக் காட்சிக்குள் சென்றோம்.


காந்தி மகான் போர்பந்தர் நகரில் பிறந்ததிலிருந்து கடைசியில் புது டில்லி பிர்லா மாளிகைத் தோட்டத்தில் 'ஹேராம்!' என்று சொல்லி அமரர் ஆன வரையில் அவர் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சரித்திர முக்கிய சம்பவங்களையும் வர்ண ஓவியமாக வைத்திருக்கிறார்கள். இன்னும் திருக்குறள் விளக்கச் சித்திரங்கள், கம்ப ராமாயணக் காட்சிகள், தமிழ் வளர்த்த பெரியோர்கள், பாரத நாட்டின் விடுதலைக்காக முதல் முழக்கம் செய்த வீரபாண்டியக் கட்டபொம்மன் காட்சிகள் ஆகச் சுமார் மூந்நூறுக்கு மேற்பட்ட வர்ண ஓவியங்கள் நம்முடைய வீரத்தையும், பண்பையும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இதை ஒரு முறை பார்த்தால் தேச பக்தி குறைந்து போனவர்களுக்கும், தேசபக்தி இல்லாதவர்களுக்கும் கட்டாயம் தேச பக்தி வந்து விடும். நாட்டின் நலனைப் பற்றியும் நாட்டில் உள்ள மக்களைப் பற்றியும் நினைப்பார்கள். இத்தகைய எண்ணத்துடன் அங்கிருந்து கிளம்பினோம்.







1. டீ போர்டு பகுதியில் காட்சிக்கு வந்தவர்கள் தேநீர் அருந்துகின்றனர். 2. டாட்டா மண்டபத்தின் கம்பீரத் தோற்றம். 3. ஏ. ஸி. ஸி. ஸிமெண்ட் கம்பெனி மண்டபத்தின் ஒரு காட்சி.



அகில இந்திய ரேடியோப் பகுதியைப் பார்வையிடுகிறார் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு. நேருஜிக்கு வலது பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர் சென்னை அகில இந்திய ரேடியோ நிலைய டைரக்டர் ஸ்ரீ எஸ். என். மூர்த்தி.

ஒரு இடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அமைதியுடன் உட்கார்ந்திருந்தார்கள். இவ்வளவு பரபரப்பான இடத்தில் இவ்வளவு பெரிய கூட்டம் அமைதியாக இருந்ததைப் பார்த்தவுடன் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறார்கள்!" என்றேன்.

"இதுதான் கலை நிகழ்ச்சிப் பகுதி. கண்காட்சியில் முக்கியமான இடம். கலா மண்டபம். உட்காருங்கள், நாமும் நாடகம் பார்த்து விட்டுப் போகலாம்" என்று என் தோளைப் பிடித்து அமுக்கி உட்கார வைத்தார் நண்பர்.

நாடகத்தைக் கடைசி வரையில் நன்றாகவே பார்த்தோம். நாடகக் கொட்டகையில் உட்கார்ந்து பார்ப்பதை விடச் சௌகர்யமாக இருந்தது. நாடகத்தின் தரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எல்லாரும் அமைதியாக இருந்து பார்த்ததே அதற்குச் சாட்சி. ஒவ்வொரு நாளும் புதுப் புது நாடகம், நடனம், சங்கீதக் கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரி முதலியவைகள் கலா மண்டபத்தில் நடக்கின்றன. இவைகளை நாம் வாங்கிய நாலணா டிக்கட்டிலேயே பார்த்து மகிழலாம்.

நாடகத்தைப் பார்த்துவிட்டு எழுந்திருந்தோம். எதிரில் டாட்டா ஸ்தாபனத்தாரின் மண்டபம் கம்பீரமாகக் காட்சி தந்தது. நமது நாட்டின் இரும்புத் தொழில் உற்பத்தியில் டாட்டா தொழில் ஸ்தாபனம் செய்து வரும் தொண்டும் அதன்மூலம் நமது செல்வ வளம் பெருகி வருவதும் எல்லாருக்கும் தெரிந்த உண்மை. இருந்தாலும் அந்த டாட்டா மண்டபத்துக்குள் புகுந்து பார்த்தபோது நமது இந்திய இரும்புச் செல்வத்தின் சிறப்பையும் அதைக் கொண்டு நாம் அடையும் பெரும் பயனையும் நன்றாக உணர முடிகிறது.

இந்த அற்புதமான டாட்டா மண்டபத்தைக் கண்காட்சியில் நிர்மாணித்தவர்களின் விளம்பரத் திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

உணவு, உடை, வீடு மூன்றும் ஒரு மனிதனுக்கு முக்கியம். வீடு கட்டுவதற்கு சிமெண்ட் அவசியமான பொருள் ஆகிவிட்டது. அந்த சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை மாதிரிச் சிற்பமாக அமைத்து மின்சாரத்தைக் கொண்டு அத் தொழிற்சாலையை இயங்க வைத்து, கடலில் இருந்து கிளிஞ்சலை எடுத்துச் சுத்தம் செய்து அரைத்து அத்துடன் மணலையும் இன்னும் சில ரஸாயன மருந்துகளையும் கலந்து சிமெண்டாகும் வரையில் செய்து காண்பிக்கிறார்கள். இந்தியா சிமெண்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் பகுதியும், ஏ. சி. சி. சிமெண்ட் கம்பெனியின் மண்டபமும் இருக்கின்றன. இதைத் தவிர டால்மியா சிமெண்ட் பகுதியும் இருக்கிறது. ஏராளமான ரூபாய்களைக் கொட்டி இச் சிமெண்ட் தொழிற்சாலையைப் பற்றிய விவரங்களை மக்களுக்கு உணர்த்திவரும் மேற்படி சிமெண்ட் கம்பெனி நிர்வாகிகளை வாழ்த்துகிறேன்.

அங்கிருந்து கிளம்பி ஒவ்வொரு கடையாகப் பார்த்து ரசித்துக் கொண்டு வந்தோம். ஒரு கடையில் பெண்மணிகள் வளைய வளைய வந்து கொண்டிருந்தனர். வளையல் கடையோ என்று நினைத்து உள்ளே சென்றேன். கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் நவம் நவமான வர்ண வேலைப்பாடுகளுடன் திகழும் கைத்தறித் துணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. "அடாடா! எவ்வளவு அழகான புடவைகள், ஜாக்கெட் துணிகள், போர்வைகள் இருக்கின்றன. இவைகளைத் தான் வாங்க வேண்டும்" என்று ஒரு பெண்மணி தம் கணவரிடம் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண்மணியைப் போல் நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்மணியும் நினைத்தாராயின் கைத்தறித் தொழிலாளர்களின் வறுமையே பறந்து விடும்.

அந்தக் கைத்தறிக் கடைக்காரரை "நல்ல வியாபாரம் ஆகிறதோ!" என்று கேட்டேன்.

"ஓ! நல்ல வியாபாரம் ஆகிறது. கைத்தறித் துணியின் மகிமையை மக்கள் உணர்ந்து வாங்க ஆரம்பித்து விட்டனர்" என்றார், தம் கையில் இருந்த ரூபாய் நோட்டுகளை அருகில் இருந்த சாதாரண தகரப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டே.

"பணங்களை வைத்துக் கொள்ள இரும்புப் பெட்டிகள் வைத்துக் கொள்ளக் கூடாதா! கூட்டம் இருக்கும் இடத்தில் சற்று ஜாக்கிரதையாக இருந்தால் நல்லதல்லவா!" என்றேன்.

"அதைப் பற்றிக் கவலைப்படவே வேண்டாம். யுனைடெட் கமர்ஷியல் பாங்கு தன்னுடைய கிளைக் காரியாலயத்தைப் பொருட் காட்சிக்குள் ஏற்படுத்தியிருக்கின்றது. பணத்தைக் கொண்டு பாங்கில் போட்டு விட்டால் போதும். நாங்கள் கவலையற்று இருக்கலாம்" என்றார்.

பொருட்காட்சியில் உள்ள நூற்றுக்கணக்கான வியாபாரிகளின் சௌகரியத்தையும் பொது மக்களின் நலனையும் உத்தேசித்துத் தொண்டாற்றி வரும் யுனைடெட் கமர்ஷியல் பாங்கி நிர்வாகிகளை எப்படிப் பாராட்டுவதென்று தெரியவில்லை!

இன்னும் பல கடைகளையும் பார்த்து மகிழ்ந்து கொண்டே சென்றோம். கண்ணைப் பறிக்கும் மின்சார வெளிச்சம் நிறைந்துள்ள பொருட்காட்சி சாலைக்குள் ஒரு இடத்தில் நம் கவனத்தைக் கவரும் முறையில் மின்சார வெளிச்சம்

தெரிந்தது. அருகில் சென்று பார்த்த போது சேஷசாயி குரூப் ஸ்தாபனத்தாரின் மண்டபம் தான் அது என்பதை அறிந்தேன். மின்சாரம் செல்லும் செப்புக் கம்பிகளுக்குப் பதிலாக அலுமினியம் கம்பிகளை உபயோகிக்கலாம். அவை செப்புக் கம்பியைவிட கனமும் குறைவு, செலவும் குறைவு, நாட்பட உழைக்கவும் செய்கிறதாம். அந்தக் கம்பிகளை இந்தியாவிலேயே சேஷசாயி குரூப் கம்பெனியார்தான் தயாரிக்கிறார்களாம்.

அச் சமயத்தில் திடீரென்று வந்த ஜனக்கடலில் மோதுண்டு அது சென்ற திசையில் சென்றேன்.

கண்காட்சியில் புதிய விசேஷ அம்சமான சர்வோதயக் காட்சிப் பகுதிக்குச் சென்றேன். அந்தப் பகுதியில் இந்தியாவில் உள்ள குடிசைத் தொழில் முறைகள் அத்தனையும் இருக்கின்றன.

இந்தச் சர்வோதயப் பகுதியில் ஒரு கலா மண்டபம் இருக்கிறது. அதிலும் பாட்டுக் கச்சேரி, கரகம், விகடம் முதலியவைகள் நடக்கின்றன. திறந்த வெளியில் அமைத்துள்ள கலா மண்டபம் ஒரு கலைக் கோயிலாகவே காட்சி தருகிறது.

இந்த காந்தி மகான் ஞாபகார்த்தப் பகுதியில் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும்படி மகாத்மா காந்தியின் திரு உருவச் சிலையை வைத்திருக்கிறார்கள். சர்வோதயப் பகுதியில் உள்ள கிராமக் கைத்தொழில் மண்டபங்களைப் பார்த்துக் கொண்டு வரும்போதே காந்தி மகானின் திரு உருவமும் தெரிகிறது. அடாடா! காந்தி மகான் உயிருடன் இருக்கும்போது கிராமக் குடிசைத் தொழில் வளர்ச்சிக்காக, ஏழை எளிய மக்களின் நலனுக்காக ஓயாமல் பாடுபட்டார். இப்பொழுது அதே தொழிலின் நலனுக்காக ஓய்வு பெற்று உட்கார்ந்திருப்பது போன்ற பிரமை தோன்றுகிறது.

ஒவ்வொரு குடிசைத் தொழில் பகுதியையும், அத்துடன் பொது மக்களுக்குச் சேவை செய்து வரும் இதுபோன்ற ஸ்தாபனங்களையும் பார்த்துக் கொண்டே சென்றோம்.

ஒரு பகுதியில் நாலைந்து மாணவர்கள் செம்புக் கம்பிகளைக் கட்டையில் ஒரு அங்குல அகலத்தில் அடித்திருந்த ஆணிகளில் சுற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். அருகில் சென்று பார்த்தேன். என்ன ஆச்சரியம்! ஐந்து நிமிஷத்தில் இரண்டு டஜன் ஊக்குகளைச் செய்து விட்டனர். சின்னஞ் சிறு மாணவர்கள் தங்கள் பிஞ்சுக் கரங்களினால் ஊக்கு செய்யும் அற்புதத்தைப் பார்த்தவுடன் அந்த மாணவர்கள் யார் என்று விசாரித்தேன். அம்மாப்பேட்டையில் உள்ள அன்னதானசிவன் மாணவர் இல்லத்து மாணவர்கள் என்பதை அறிந்துகொண்டேன். அன்னதான சிவன் மாணவர் இல்லத்தார் ஹரிஜனங்களுக்கும், அனாதைச் சிறுவர்களுக்கும் ஆதரவளித்து அவர்களுக்கு ஏட்டுக் கல்வியுடன் கைத்தொழிலும் கற்றுக் கொடுப்பதை வியந்து மகிழ்ந்து பாராட்டினேன்.

அதற்குப் பக்கத்தில் தஞ்சையில் இருந்து வந்த ஒரு நெட்டி வேலை நிபுணர் நெட்டியில் இருந்து ரோஜாப் பூ செய்து கொண்டிருந்தார். மலர்ந்த ரோஜா வென்று மதிமயங்கித் தேனீக்களே அதைச் சுற்றி வட்டமிடும்போது நாம் ஏமாந்து போவதில் ஆச்சரிய மென்ன! அருமையான குடிசைத் தொழில், கலை மணம் பொங்கிவரும் நெட்டி வேலை பூத்தொழில். இந்தத் தொழிலாளிகள் கலைத் திறமையை வியந்து மனத்துக்குள் வாழ்த்தினேன்.

இன்னொரு இடத்தில் நமது புராதன கலைகளில் ஒன்றான பொய்க்கால் குதிரை ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. அதைச் சுற்றி ஏராளமான மக்கள் பலாப் பழத்தில் ஈ மொய்ப்பது போல மொய்த்துக் கொண்டிருந்தனர். அந்த இடத்துக்கு

வந்தவுடன் என்னையும் அறியாமல் அந்தக் கூட்டத்தோடு கூட்டமாகநின்று பொய்க்கால் குதிரை ஆட்டத்தைப் பார்த்தேன். அடாடா! இந்தப் பொய்க்கால் குதிரை ஆட்டத்தில்தான் எத்தனை எத்தனை புது அம்சங்களைப் புகுத்திக் காலத்துக்கு ஏற்ற வண்ணம் மாற்றி அமைத்திருக்கிறார்கள். மேளத்தின் தாளத்துக்கும், பொய்க்கால் குதிரை ஆட்டத்துக்கும் ஏற்றபடி மக்கள் தங்களை மறந்து ஆடிக் கொண்டிருந்தனர். பங்களூரில் இருந்து வந்திருக்கும் இந்தப் பொய்க்கால் குதிரை ஆட்ட நிபுணரைச் சுற்றி எப்பொழுதும் கூட்டம்தான்.

இன்னும் பொருட்காட்சியில் பல வேடிக்கைக் காட்சிகளைப் பார்த்தோம். கிளி பேசுகிறது, கணக்குப் போடுகிறது, திருட்டுக் கண்டு பிடிக்கிறது. ஆச்சரியமாக இல்லையா! மெழுகு பொம்மைக் காட்சி அநுபவிக்க வேண்டிய அற்புதக் காட்சி. பொம்மலாட்டம் பார்த்துப் பார்த்து ரஸிக்க வேண்டிய கலைக்காட்சி. விக்கிரமாதித்தன் கதை பொம்மை நாடகம், வேடிக்கை நிறைந்த அற்புதம். ஒரு அரிசிக்குள் 182 எழுத்துக்கள் எழுதி யிருக்கும் விந்தைக் காட்சி பிரமிக்கச் செய்கிறது. இவ்வளவும் போதாது என்றோ என்னமோ அங்கு ஒரு சினிமாக் கொட்டகை வேறு இருக்கிறது. தினம் தினம் புதுப் புதுப் படம் போட்டுக் காண்பிக்கிறார்கள். நாளெல்லாம் உழைத்துப் பாடுபடுபவர்களும், மற்றவர்களும் மாலை வேளையில் நாலு அணா கொடுத்துப் பொருட்காட்சிக்குப் போனால் போதும். மனத்துக்கு உற்சாகம் ஏற்பட வேறு ஒன்றும் வேண்டியதில்லை.

இந்தச் சமயத்தில் என் எதிரில் வந்த ஒருவர் "மணி என்ன?" என்று கேட்டார். கடிகாரத்தைப் பார்த்தேன். உடம்பில் மின்சாரம் தாக்கியதைப் போல் அதிர்ச்சி உண்டாகியது. மணி ஒன்பது ஆகி யிருந்தது. மத்தியானம் இரண்டு மணியில் இருந்து நேரம் போனதே தெரியவில்லை. வீட்டுக்குப் போகவேண்டுமே எப்படிப் போவது 'பஸ்' ஏதாவது கிடைக்குமோ என்னவோ என்று தவித்துக் கொண்டிருந்தேன்.

என் மன நிலையை உணர்ந்து கொண்ட என் நண்பர், "பயப்படாதீர்கள் ஐயா! இரவு பத்து மணி வரையில் சென்னை நகரின் எல்லாப் பகுதிகளுக்கும் பஸ் வசதி இருக்கிறது" என்றார்.

இந்தப் பொருட்காட்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த பொருட்காட்சிக் குழுவினரைத் தமிழ் மக்களின் சார்பாக வாழ்த்திக் கொண்டே பஸ் நிலையத்தை நோக்கிச் சென்றேன்.

** ** **

இந்த அருமையான பொருட்காட்சியை நினைக்கும்போது இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் என் சிந்தனைசெல்ல ஆரம்பித்து விட்டது. மீண்டும் இந்தக் காட்சியை ஆரம்பித்த ஸ்ரீ சத்திய மூர்த்தி அவர்களின் நினைவுதான் வந்தது.

தீரர் சத்தியமூர்த்தியின் இடிமுழக்கப் பிரசங்கங்கள் அரசியலில் பெருந் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்த தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பி ஆவேச வெறி கொள்ளச் செய்தது என்பது தமிழகம் தெரிந்த உண்மையாகும்.

அப்படிப்பட்ட தேசத் தலைவருக்கு அவர் ஆரம்பித்த இந்தப் பொருட்காட்சியைவிட வேறு சிறந்த ஞாபகச் சின்னம் யாரால் அமைக்க முடியும் என்று எண்ணிக் கொண்டே பஸ்ஸில் ஏறி வசதியாக உட்கார்ந்தேன். என் எண்ணத்தை ஆமோதித்து வரவேற்பது போல பஸ் ஒரு குலுங்குக் குலுங்கி விட்டுக் கிளம்பியது!



ஜயலக்ஷ்மி

அடுப்பங்கரையிலுள்ள அலுவல்களை முடித்துக் கொண்டு கூடத்துப் பக்கம் வந்தேன்.

என்னைக் கண்டதும் என் நாத்தனார் சுமதி "இந்தா நிர்மலா! குழந்தைக்கு உன்னிடம் வர வேணும் போலிருக்கிறது. சற்றுப் பக்கத்தில் போட்டுக் கொண்டு படுத்துக் கொள். அப்படியே தூங்கி விடுவான்" என்று கூறிக் குழந்தை சுதாகரை என்னிடம் கொடுத்தாள்.

நானும் அவனைப் பக்கத்தில் விட்டுக் கொண்டு படுத்துக் கொண்டேன். வெகு நேரமாக அத்தையுடன் விளையாடிக் களைத்துப் போயிருந்த சுதாகர் வெகு சீக்கிரத்தில் கண்ணயர்ந்து விட்டான். அவனுடைய கள்ளங் கபடமற்ற மதி வதனத்தைப் பார்த்தேன், ஆசை தீர. என் இதயம் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. எனக்கும் இத்தகைய பாக்கியம் இப்பிறவியில் கிடைக்கும் என்று நான் எண்ணியதே கிடையாது.

இருண்டிருந்த என் வாழ்வில் ஒளியைப் பரப்பிய புண்ணியவதி என்னருமை சுமதிதான். அதற்கு ஓரளவு காரணமாக இருந்ததும் சுதாகர்தான்.

* * *

அன்றுதான் முதன் முதலாக என் கணவரின் இல்லத்தில் அடியெடுத்து வைத்தேன். உலகத்தில் எதிலுமே முதல் நாள் என்றாலே ஒரு தனி இன்பம் உண்டல்லவா! அப்பொழுது எனக்கு ஏற்பட்ட இன்பத்தை விவரிக்க இயலவில்லை.

அவரும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்படிக் கண் வலைதான் வீசுவாரா! கைஜாடை காட்டி வம்பு செய்வாரா!

தவிர, எனக்கு மாமியார், மாமனார் என்று ஒருவரும் கிடையாது. அன்பும் அரவணைப்புமே உருவாக, அருமையிலும் பெருமையாக ஒரே ஒரு நாத்தனார்தான் இருந்தாள். என்னைவிட நான்கு வயதுதான் பெரியவள். குணத்துக்கேற்ற பெயர் சுமதி! நான் அவர்களின் வீட்டுக்கு முதன் முதலாக விஜயம் செய்வதை முன்னிட்டு என்னை மங்கள ஆரத்தி சுற்றி வரவேற்கக் கணவன் வீட்டிலிருந்து ஆசையுடன் ஓடோடியும் வந்திருந்தாள்.

அன்று பூராவும் ஒரே கும்மாளம்தான். பரிகாசச் செய்கைகளிலும், உல்லாச உரையாடல்களிலுமே பகல் முழுவதும் சென்றது. மாலை நேரம் வந்தது. என்னை விதம் விதமாக அலங்கரித்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள் சுமதி. நானும் அவளுடைய அன்புத் தளையில் அகப்பட்டுக் கொண்டு இனந்தெரியாத இன்ப வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தேன்.


அப்போது திடீரென்று யாரும் சற்றும் எதிர்பாராத வகையில் ஒரு தந்தி வந்தது. அதுவும் எத்தகைய பேரிடியைத் தாங்கி வந்திருந்தது தெரியுமா, அந்தப் பயங்கரத் தந்தி! அம்மம்மா! 'சுமதியின் கணவர் ரகுநாதன் காரியாலயத்திலிருந்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவர் விதியின் விளைப்பயனால் ஒரு லாரியினால் மோதப்பட்டு அவ்விடத்திலேயே உருக்குலைந்து கோர மரணமடைந்து விட்டார். உடனே வரவும்.' இதுதான் செய்தியின் பறை சாற்றல். அவ்வளவுதான். உலகமே இருண்டு விட்டது போலிருந்தது எனக்கு. மணக்கோலம் பிணக்கோலமாயிற்று. பதறித் துடித்த என் நாத்தனாரை அழைத்துக் கொண்டு உள்ளம் உடைந்துருகிய என்னை உதறிவிட்டு போட்மெயிலில் பறந்து சென்றார் என் கணவர்.

2

அன்று உதறி எறியப்பட்ட உடைதான் நான். ஆறு மாதம் வரையில் கேட்பாரின்றிப் பிறந்தகத்தில் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தேன்.

முதன் முதலில், அவர்களுடைய வீட்டில் நான் அடியெடுத்து வைத்த அன்றே வீட்டின் அருமைப் பெண் வாழ்வை இழந்து விட்டாள். அதற்குக் காரணம் நான் வந்த வேளைதான். என் துரதிருஷ்டம்தான். அப்படித்தான் அவரும் சொன்னார். உலகமும் சொல்லியது. "உன் ஜாதக விசேஷம்தான் எங்கள் அருமையான மாப்பிள்ளையின்

மயிலாப்பூரில் ஒரு புதிய காலனி!



"அப்பவே சொன்னேன், இந்தப் பக்கம் வராதேன்னு! கேட்டாயா! ஸி. ஐ. டி.க்கு ஒரு காலனியே அல்லவா இருக்கு!"

உயிரைக் கவர்ந்து விட்டது" என்ற நாமார்ச்சனையுடன் என்னை வெறுத்துத் தூஷித்தார் என் கணவர். என்னைப் பெற்ற பாவத்தினால் என் பெற்றோர்களுக்கும் நிறைய வசை மொழிகள் கிடைத்தன, சரமாரியாக.

"நல்ல வேளையில் அவளை அழைத்துக் கொண்டு ஊர் போய்ச் சேருங்கள்" என்று இரைந்து பேசிய மாப்பிள்ளையிடம் பேசுவதற்கே பயந்து என்னை அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

அதற்குப் பிறகு ஆறு மாதம் சென்ற பிறகும் என் கணவரிடமிருந்து ஒரு கடிதம்கூட வரவில்லை. என் தகப்பனாரும் என்ன செய்வதென்று தெரியாமல் வருந்தினார். பிறகு நான்தான் ஒரு முடிவுக்கு வந்தேன். வாழாவெட்டி என்ற பெயருடன் பிறந்தகத்தில் வாழ்வதைவிட, பார்ப்பவர்களுக்கு மதிப்பாகப் புருஷன் வீட்டில் இருப்பதே மேல் என்பதுதான் என் தீர்மானம். வேறு வழியின்றி என்னை அழைத்துப் போய் என் கணவரிடம் விட்டுவிட்டுத் திரும்பி விட்டார் என் தந்தை.

'இந்தமட்டும் வந்தாயே' என்று வாய் நிறைய வரவேற்று அன்பு பாராட்டவும் இல்லை என் பதி. இது போதாதா! சுமதி விதியின் விபரீதக் கொடுமைக்கு இலக்காகிக் காவலனைக் காலனுக்குப் பறிகொடுத்து விட்டுப் பாலைவனத்தில் தட்டுத் தடுமாறிக் கொண்டு வாடித் தடுமாறுகிறாள். ஆனால் அந்த நிலையிலும் அவளுள்ளத்தில் அன்பு அழிந்துவிடவில்லை; பண்பு மறந்துவிட வில்லை.

என்னிடத்தில் தன் துக்கத்தையும் பொருட்படுத்தாமல் உற்ற தோழியாக நடந்து கொண்டாள். தன் தமையன் என்னிடம் கொண்டுள்ள வெறுப்பை மாற்றக்கூடிய விதத்தில் நடக்கலுற்றாள். அவள் முயற்சியில் அவளுக்கு, ஏன், எனக்கும்தான் வெற்றி கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. என் கணவர் நான் இருக்கிற வீட்டிலேயே இருந்தும், என்னை விட்டு வெகு தொலைவில்தான் வாழ்ந்து வந்தார். என்னையோ, என் செய்கைகளையோ ஏறிட்டுக்கூடப் பார்ப்பதில்லை. நான் அவரெதிரில் சென்றால் கூட அவருக்கு வேம்பாக இருந்தது. தப்பித் தவறி நான் அவர் கண்களில் பட்டு விட்டால்கூட அவர் தீயை மிதித்தவர்போல் மிரண்டோடி விடுவார். நானும் எனக்குத் தெரிந்த தந்திரங்களெல்லாம் செய்து பார்த்து விட்டேன். அவருடைய மனத்தைக் கவரும் சக்தி எனக்கில்லை.

என்னிடம் இவர் பராமுகமாயிருப்பதால் சுமதியின் இழந்த வாழ்வை மீண்டும் பெற்றுவிட முடியுமா! சுமதிக்கு இக்கதி நேர்ந்ததில் எனக்கு மட்டும் வருத்தமில்லையா! இளம் வயதில் அவள் வாழ்வை இழந்து விட்டபோது அவளெதிரில் நாங்கள் உல்லாசமாக இருந்தால் அவளுக்கு அது வேதனையை அளிக்கும் என்றாலும், என்னை ஒரு மரக் கட்டையென்று எண்ணாமல் நானும் ஒரு மனித ஜன்மம்தான் என்று எண்ணி நடந்து கொள்ளக் கூடாதா! அதுதான் என் மனத்தை வாள் கொண்டு அறுத்து வந்தது.

'முயற்சி திருவினையாக்கும்' என்பார்கள். எவ்வளவு நாட்களுக்குத்தான் முயன்று கொண்டேயிருக்க முடியும்! அவர் அன்பை இனி நாம் பெற முடியாது. அதற்காக முயலுவதும் வீண் சிரமம் தான் என்று தீர்மானித்து விட்டேன்.

ஆனால் என் நிலை கண்டு மிகவும் வருந்தினாள் சுமதி. 'என் வாழ்வுதான் விதிவசத்தால் பாழாகியது. ஆனால் உன் வாழ்வுக்கு நான் எமனாக வர வேண்டுமா!' என்று உள்ளங் குமுறினாள். ஏற்கெனவே மனம் புண்பட்டவள் சுமதி. மேலும் என்னால் வேறு மனக் கஷ்டம் ஏற்பட வேண்டுமா! பொறுக்கவில்லை எனக்கு. சுமதியின் உள்ளத்துக்குக் கூடியவரையில் ஆறுதல் அளிக்க வேண்டியவள் நான். என்னாலேயே அவளுக்குத் துன்பமா! அவளுக்கு மனச் சாந்தியளிக்க விரும்பினேன். அதற்கு வழி! நடிப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. நடிக்கத் தொடங்கினேன். ஆம், அவரும் நானும் மிகவும் அன்யோன்யமாகப் பழகுவதுபோல் என்னைத் தோற்றுவித்துக் கொண்டேன். அதனால் சுமதியும் மனத்திருப்தி யடைந்தாள். என்னுடைய இன்பப் போர்வையிட்ட நரக வாழ்வை ஆதர்ச வாழ்வு என்றெண்ணி மனம் பூரித்தாள்.

3

இந்த நிலையில்தான் நான்கு ஆண்டுகள் தோன்றி மறைந்து விட்டன.


என் வாழ்க்கையில் எத்தகைய மாறுதலும் ஏற்படவில்லை. உள்ளத்து உணர்ச்சிகளை அணையிட்டுத் தடுத்து விட்டு நடிப்புக் கலை பயின்று அதிலும் தேர்ச்சியடைந்து வந்தேன். ஆனால் என்னுடைய நடிப்பு எவ்வளவு நாட்களுக்குத்தான் அம்பலத்துக்கு வராமலிருக்க முடியும்! என் பெற்றோர்கள் ஏன் இன்னமும் தங்களுக்குப் பேரன் பிறக்க வில்லை என்று கேட்டு நச்சரிக்கத் தொடங்கினார்கள். சுமதியும் "நிர்மலா! என் மனத்துக்கு ஆறுதலாயிருக்க எனக்கு ஒரு மருமானை, மருமானோ பெற்றுத் தர மாட்டாயா!" என்று உள்ளம் குழைய நைந்து வேண்டுவாள். இவர்களுடைய கேள்விகளுக் கெல்லாம் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் மறைவில் சென்று கண்ணீர் வடிப்பேன் நான்.

இப்படித்தான் ஒரு நாள் நான் என் அறையில் உள்ளம் வருந்தக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் எதிர்பாராத வண்ணம் திடீரென்று உள்ளே நுழைந்தாள் என் உயிர்த்தோழி பத்மா. அவளைக் கண்டதும் திடுக்கிட்ட நான் என்னை ஒரு நொடியில் சமாளித்துக் கொண்டு, "வா, பத்மா!" என்றேன்.

கலவரம் மிகுந்த குரலில், "நிர்மலா! ஏன் உன் கண்கள் கலங்கியிருக்கின்றன!" என்றாள்.


காமினியா அழகு சாதனங்கள்
பட்டுப் போன்ற கூந்தலையும், சோபை
யுள்ள வதனத்தையும், மென்மை
யான மேனியையும் அளிக்கும்
என்கிறார் :
வைஜயந்திமாலா
பரதநாட்டியமே உருவானவர்
* அழகிய ஸ்திரீகள்
இயற்கையாகவே காமினியா
அழகு சாதனங்களையே விரும்பு
கிறார்கள். ஈடு இணையில்லாத
இந்த அழகு சாதனங்களினால்
எளிதில் வசீகரம் பெறமுடியும்.
காமினியா ஹேர் ஆயில்
தில்பஹார் டாய்லட் சோப்
ஆட்டோ தில்பஹார்
காமினியா ஸ்னோ
KAMINIA OIL
KAMINIA SNOW
DILBAHAR
DIL-BAHAR TOILET SOAP
ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., BOMBAY 2.
சென்னை, மைசூர், திருவாங்கூர்-கொச்சி ராஜ்யங்களுக்கு சோல் ஏஜண்டுகள் :
ஸ்ரீ எஸ். ரெங்கராஜு நாயுடு, கோயமுத்தூர்


பிப்ரவரி 5 முதல்
கெயிட்டி · பிராட்வே
· சயானி ·
மற்றும் தமிழ் நாடெங்கும்
பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ்
நல்ல தங்கை
டைரக்ஷன் :
S.A. நடராஜ்
கதை வசனம் :
A.P. நாகராஜன் ...
ஸ்டுடியோ :
சென்ட்ரல் கோவை ...



"தேனுங்கு பேசும் கிளியை என்னிடம் விற்று விட்டீர்கள்."
"அதற்கென்ன, இந்தக் கிளியையும் வாங்கிக் கொள்ளுங்கள். தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லும்!"

"ஒன்றுமில்லே, பத்மா! அம்மா அப்பாவை நினைத்துக் கொண்டேன்" என்று கூறி மாற்ற முயன்றேன். அவளா விடுபவள்!

"உன் உள்ளத்திலுள்ளதை உயிர்த் தோழியான என்னிடம் சொல்லக் கூடாதா!" என்று என் முகவாயைப் பிடித்துக் கெஞ்சினுள் பத்மா.

என் உள்ளத்திலும் இனந் தெரியாத ஏக்கம், வேதனை இரண்டுமாகச் சேர்ந்து என் வைராக்கியத்தைப் பலவீனப் படுத்தின. மடை திறந்த வெள்ளம் போல் எல்லாவற்றையும் ஆதிமுதல் கடைசி வரையில் கொட்டித் தீர்த்தேன், பத்மா விடம். அவை அனைத்தையும் செவியுற்ற பத்மா வேதனையில் ஆழ்ந்து திக்குமுக்காடிப் போனுள்.

சற்று நேரம் நிசப்தம் நிலவியது.

பிறகு வருத்தந் தோய்ந்த குரலில், "இந்தக் காலத்திலகூட இத்தகைய மூட நம்பிக்கையுள்ள புருஷரும் இருக்கிறூர் என்பதை என்னுல் நம்பவே முடியவில்லேயே, நிர்மலா! அப்படியாவது இந்தப் போலி வாழ்வு வாழத்தான் விரும்புகிறுயா!" என்று வினவினுள் பத்மா.

"என்ன பத்மா அப்படிக் கேட்கிறுய்! எது எப்படியிருந்தாலும் கணவனிடம் இருப்பது தானே நம் மரபுக்கு அழகு! அதையும் தவிர, என் நாத்தனுர் ஒரு உத்தம குணம் படைத்த மாது. அவருக்கு மனச்சாந்தி யளிப்பதற்கேனும் நான் இத்தகைய வாழ்வு வாழத்தான் வேண்டும்" என்றேன்.

"அப்படியானுல் இந்த விஷயங்களை யெல்லாம் உன் நாத்தனுரிடமே கூறி இதற்கு என்ன செய்ய லாம் என்று கேட்டிருக்கலாமே, நிர்மலா!" என்று எடுப்பாகக் கேட்டாள் பத்மா.

"ஏற்கெனவே மனம் நொந்து போயிருக்கிறூர் அவர். போதாக் குறைக்கு நான் வேறு என் துயரம் படிந்த வேதனை வாழ்வைப் பற்றி அவரிடம் எடுத்துக்கூறி அவருடைய மனத்தில் இன்னமும் கவலையை உண்டாக்கலாமா! பின்னும் அவரிடம் இது பற்றிப் பேசவே எனக்குக் கூச்சமாக இருக்கிறதே, பத்மா!" என்று கூறிய நான் அவளுக்குக் காப்பி கொண்டு வரும் நிமித்தம் சமையலறைப் பக்கம் போவதற்கு முற்பட்டேன்.

அதை நுட்பமாகத் தெரிந்து கொண்ட பத்மா, "இப்பொழுது ஒன்றும் வேண்டாம் நிர்மலா! எனக்கு மிகவும் நேரமாகி விட்டது. நான் போய் வருகிறேன், இன்னும் இரண்டு தினங்களில் இதற்கு ஒரு வழி கண்டு பிடித்துக் கொண்டு வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டாள்.

நான் மன வேதனையுடன் என் அறைக்குள் நுழைந்தேன். அப்போது என்னைப் பின் தொடர்ந்துவந்த என் நாத்தனுர், "நிர்மலா! நீ இவ்வளவு நேரம் உன் தோழியிடம் சொல்லிக் கொண்டிருந்த தெல்லாவற்றையும் அகஸ்மாத்தாக அந்தப் பக்கம் வந்த நான் கேட்கும்படி நேர்ந்து விட்டது. நிர்மலா! என் மனத்துக்குக் கவலையைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக என்னிடம் எதையும் தெரிவிக்காமல் இந்த நான்கு வருஷத்திய பொன்னுன வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டு விட்டாயே! இந்த ரகசியத்தை அறியாத நான் 'குழந்தை'யைப் பற்றி எத்தனையோ தடவைகள் உன்னிடம் எப்படி எப்படியோ பேசியும் கேட்டும் இருக்கிறேனே ...... அப்பொழுதெல்லாம் கூட நீ இந்த விஷயத்தை வெளியிடாமலிருந்தாயே! உன் நெஞ்சத்துக்குத்தான் என்ன உறுதி!" என்று என்னை அணைத்துக் கொண்டாள்.

அவளுடைய அந்த அரவணைப்பு என் னுள்ளத்துக்கும் உடலுக்கும் இதமாக இருந்தது. ஆனல் ஏனே விழிகள் கண்ணீரில் மிதந்தன. என் வாயிலின்றும் "என்னை மன்னித்து விடுங்கள், அக்கா!" என்ற வார்த்தைகள் வெளிப்பட்டன.

அன்று மறுபடியும் இரண்டாவது தடவையாக என்னை விசேஷமாக அலங்கரித்தாள் சுமதி. நானும் அவளது அன்புச் செயலுக்கு ஆடும் பொம்மையாக மாறி இயங்கினேன், உள்ளத்தில் நம்பிக்கை இம்மியளவுமின்றி.

இரவு போஜனம் முடிந்ததும் என் கணவர் நிலா முற்றத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு வான வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு சென்ற சுமதி மெல்லிய குரலில் "அண்ணு! உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்!" என்றுள்.

அந்தச் சமயம் கூடத்து அறையில் உட்கார்ந்திருந்த என்னுடைய நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"என்ன கேட்க வேண்டுமோ, கேள்" என்றூர் என் கணவர்.

பட்டதும் படாததுமாகப் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்ட சுமதி "வந்து......என்னை ஏதாவது அனுதை ஆசிரமத்தில் சேர்த்து விடேன், அண்ணு!" என்று தயக்கத்துடன் மொழிந்தாள்.

"என்ன சொல்லுகிறுய்! சுமதி! அந்த வார்த்தையை என் காது படக் கூறுதே. நான் ஒருவன் உயிருடன் இருக்கிறவரையில் நீ ஏன் அனுதை ஆசிரமத்தில் போய் வாழ வேண்டும்! இங்கு உனக்கு என்ன கஷ்டம்! ஒரு வேளை அவள் வந்து...உன்னை ஏதாவது... !" என்று இழுத்தார்.

"ஐயோ! அந்த மாதிரி எண்ணத்தையே உன் உள்ளத்திலின்று அகற்றி விடு அண்ணு! நிர்மலா, ஒரு உத்தமி. ஆனல்...அவள் உள்ளத்தை உள்ளபடி உணர்ந்து அன்பு செலுத்தத்தான் நமக்குத் தெரியவில்லை..." என்றுள் சுமதி.

"சுமதி! நீ என்னென்னமோ சொல்லிக் கொண்டே போகிறுயே! எனக்கு ஒன்றும் புரியவில்லேயே!" என்றூர் என் பதி. அவருடைய குரலில் மிகுந்த வேதனை யிருப்பது போலத் தோன்றியது.

"இவ்வீட்டில் எனக்கு எவ்விதக் கஷ்டமும் கிடையாது. ஆனல் அதே சமயத்தில் என் மன வேதனையை மாற்றி எனக்கு ஆறுதல் ஏற்படும் படியாகவும் எதுவும் ஏற்படவில்லை. அதனுல்தான் சொல்லுகிறேன், என்னை அனுதை ஆசிரமத்தில்

சேர்த்து விடும்படி. அதில் உனக்கு இஷ்டமில்லையென்றால் உபாத்தியாயினி வேலைக்காவது என்னைப் போக அனுமதியேன், அண்ணா! அங்கு வரும் கபடமற்ற குழந்தைகளின் முகத்தைப் பார்த்தாகிலும் என் மனத் துயரைச் சற்று மாற்றிக் கொள்ள முயலுகிறேன்" என்று சற்று அழுத்தமாகவே கூறினாள் சுமதி.

"இதைத் தவிர உன் வருத்தத்தை மறக்க வேறு வழி கிடையாதா!" என்றார். என் கணவரின் குரல் தடைப்பட்டது.

"எனக்கும் இவைகளிலெல்லாம் அபேட்சை கிடையாது. நானும் இந்த நான்கு வருஷங்களாய் உனக்குக் குழந்தைகள் பிறக்கும், அவைகளின் பிஞ்சு முகத்தில் என் நெஞ்சின் சுமையைச் சற்று மறக்கலாம் என்று ஆசையுடன் எதிர்பார்த்தேன். நம் வீட்டில் ஒரு குழந்தையாகிலும் பிறந்திருந்தால் என் மனத்துக்கு எவ்வளவோ ஆறுதல் கிடைத்திருக்கும். என் சந்தோஷம் உங்களுக்கும் ஒரு புது வித ஊக்கத்தைக் கொடுக்கும். இப்போது களையிழந்து காணப்படும் வீடு அப்போது குதூகலமாய் ஒளி பெற்று விளங்கும். ஆனால் என் ஆசை ஈடேறவில்லை. அதனால்தான்..." என்று வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினாள் சுமதி.

"சுமதி! உனக்காக, உன் சந்தோஷத்துக்காக நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன். கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்" என்று கூறிய என் கணவர் சட்டென்று அந்த இடத்திலிருந்து எழுந்திருந்தார்.

சற்று நேரத்துக்கெல்லாம் என் அருகில் வந்து நின்றார். என்ன ஆச்சரியம்! எனக்கென்னவோ நடப்பதெல்லாம் கனவு போல் தோன்றியது. பயத்தால் வெளிறிய முகத்துடன் எழுந்து நின்றேன்.

"நிர்மலா!"

ஆகா! அந்தப் பெயரை அவர் உச்சரிப்பதில் என் உள்ளம் அனுபவித்த ஆனந்தம்தான் என்ன! இப்படி அவர் அழைக்க வேண்டும் என்பதற்காகத்தானே நான்கு வருஷங்களாய்த் தவமிருந்தேன்! தவம் பலித்தது. அவர் வாய் விட்டு 'நிர்மலா' என்று அழைத்த போது என் செவிகளில் அமிர்தமாரி பொழிவது போலிருந்தது. உள்ளத்தில் உருத்தெரியாத இன்ப ஊற்றெடுத்தது. ஆசையும் ஆவலும் அணையின்றிப் போகும் பரவச நிலையில் அவர் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தேன். அவர் அப்போது என்னுடைய முகத்தில் என்னதான் கண்டாரோ!

"உன்னை அன்று சுமதியின் வாழ்வைப் பறித்த துரதிர்ஷ்டசாலி என்றெண்ணி வெறுத்தேன். ஆனால் உன்னை இன்று சுமதியின் துயரத்தை மாற்றக்கூடிய ஆற்றல் வாய்ந்தவள் எனக் கருதி, அதற்காகவே நேசிக்கவும் விரும்புகிறேன். அதில் உனக்கேதும் தடையில்லையே!" என்று கேட்டார்.

கண்ணீர் மல்க, தழுதழுத்த குரலில், "நான் என்றும் தங்களுடையவள்" என்று சொல்லியபடி அவர் பாதங்களில் வணங்கினேன்.

அவரும் என்னை ஆதரவோடு தூக்கி நிறுத்தினார்.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு அன்றுதான் புது மணப் பெண்ணாக விளங்கினேன்.

அதற்குப் பிறகு என் இன்பமயமான தாம்பத்ய வாழ்க்கையினிடையில் கழிந்து போன ஒன்றரை வருஷங்கள் அதிவேகமாகச் சென்று விட்டன.

இந்தச் சமயத்தில்தான் என் ஆசையின் ஜோதியாகச் சுதாகர் பிறந்தான். அரைகுறையாக மலர்ந்திருந்த என் வாழ்வுத் தாமரை சுதாகர் பிறந்த பிறகு பூரண மலர்ச்சியடைந்து மணங் கமழ்ந்தது.

சகோதரியின் விருப்பத்துக்காகவே என்னை நேசிப்பதாகச் சொன்னவர் காலக்கிரமத்தில் எனது பவித்ரமான அன்புக்கு அடிமையாகி விட்டார். சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது. என் சொல்தான் அவருக்கு இப்பொழுது வேத வாக்கு. என் பிரேமையினால்தான் அவரே இயங்கி வருகிறார் என்றால் யாருமே நம்ப மாட்டார்கள்.

எங்களுடைய இந்த ஆனந்தத்தையே தன்னுடைய ஆனந்தமாகப் பாவித்து சாத்வீக வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தாள் சுமதி. அவளுடைய நொந்த உள்ளத்துக்குச் சுதாகர்தான் இன்பமூட்டும் அமிர்தமாக விளங்கி வந்தான்.

* * *

"குழந்தை விழித்துக் கொண்டு விட்டானா, நிர்மலா!" என்று கேட்டுக் கொண்டே வந்த சுமதியின் குரலொலியைக் கேட்டு நான் எனது நினைவுச் சுழலிலிருந்து விடுபட்டுப் பதில் சொல்லுவதற்குள் "அத்தே!" என்று தன் மழலை மொழியில் அழைத்தபடி பரக்கப் பரக்க எழுந்திருந்து தன் அத்தையின் அருகில் சென்றான் சுதாகர். ஓடிவந்து குழந்தையைத் தூக்கிக்கொண்ட சுமதி "என் கண்ணே! நீ சற்று நேரம் தூங்கினால்கூட எனக்குச் சிரமமாக இருக்கிறதடா!" என்று ஆசையும் அன்பும் அலைமோதுகிற குரலில் மொழிந்த வண்ணம் சுதாகரை மார்போடு அணைத்துக் கொண்டு உச்சி மோந்து திருஷ்டி கழித்தாள்.

அந்த ஆனந்தக் காட்சியிலேயே ஈடுபட்டு என்னை மறந்து நின்று கொண்டிருந்த என் கண்களுக்குச் சுமதியின் அன்புருவம் ஒரு தெய்வீக ஒளியாகத் திகழ்ந்தது. ஆம், என் வாழ்வை மலரச் செய்த அவளும் ஒரு தெய்வம்தானே!

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

வெள்ளிவிழாச் சிறப்புமலர்



ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

காலப்போக்கின் முன்னேற்றத்தை அனுசரித்து நெசவு தொழிலில்

50 வருஷ அரிய சேவை

○●○

காளீஸ்வரர் மில்ஸ் லிட்.

தபால் பெட்டி நெ. 503 : கோயமுத்தூர் : தந்தி : "KALEESWARAR"

போன் : காரியாலயம் — 59 (4 இணைப்புகள்)
ஜெனரல் மானேஜர் — 969 (பிரத்யேகம்)
" " 60 (வீடு)

○●○

'காமதேனு' நூல்கள் நெ. 20s முதல் 80s வரை

○●○

நெ. 5000, 9000 க்ரே ஷீட்டிங்குகள், நெ. 306, 286 டவல்கள், சலவை செய்த நெ. 303, 703 மல்கள், நெ. 444 லாங்க்ளாத், வேஷ்டிகள், ஷர்ட்டிங்குகள் முதலியவைகளை உற்பத்தி செய்பவர்கள்.

○●○

மொத்த தறிகள் - 325 :: மொத்த கதிர்கள் - 50314

தற்போது அதிகப்படியாக
100 தறிகள் நிர்மாணிக்கப்படுகின்றன

○●○

ஸ்ரீ P. S. S. சோமசுந்தரம் செட்டியார்

ஜெனரல் மானேஜர் - இன் - சார்ஜ்

வெள்ளி விழா வாழ்த்துக்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா நிகழும் இந் நன்னாளில் என் உளமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

1929 ஆம் ஆண்டில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றது முதல் அது, எல்லாத் துறைகளிலும் மிக விரைவாக வளர்ச்சி யடைந்திருக்கிறது. இன்று இருபதுக்கு மேற்பட்ட துறைகளையும், நாற்றெழுபத்தைவருக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு, உடனுறை தனிப் பல்கலைக் கழகமாக இது விளங்குகிறது. நான்கு ஆண்டுகள் இசைக் கல்வி பயிற்றும் வகுப்பை முதன் முதலில் தொடங்கிய சிறப்பு, இந்தியப் பல்கலைக் கழகங்களுக்குள் இதற்கே உரியதாகும். தமிழ் இலக்கியக் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் தனித் துறைகளை இப் பல்கலைக் கழகம் வகுத்திருப்பது பொருத்தமே. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மேலும் மேலும் வளர்ந்து நாட்டுக்குப் பயன் மிக்க தொண்டுகள் செய்வதாகுக.

— ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்





கடந்த ஏப்ரல் திங்களில் யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றதும், அப்பல்கலைக் கழகம், புதுமைக் கலைகளும், அறிவியலும் இணையப் பெற்றுத் தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழ்க் கல்விக்கும் நிலைக்களமாகச் சிறந்து விளங்குவதை நான் கண்டதும் எனக்குப் பேரின்பம் தந்தன. இப்பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழா விரைவில் கொண்டாடப் பெற விருப்பதை அறிந்து நான் மகிழ் வெய்துகின்றேன். இவ்வமயத்தில் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இப்பல்கலைக் கழகம், எதிர்காலத்தில் எல்லா வகையிலும் வளர்ச்சியும், வெற்றியும் பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

— பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டமாகிய மகிழ்ச்சியும், மங்கலமும் நிறைந்த நல் வேளையில், என் உளம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இதனோடு தொடர்பு கொண்டவர்களுக்குப் புலப்படுத்துகிறேன். இப்பல்கலைக் கழகம், தன் முன்னேற்றத்தில் இன்றியமையாத வளர்ச்சி நிலையை எய்திய நேரத்தில், அதன் வேந்தராக (Chancellor) இருக்கும் பேறு வாய்த்தமை குறித்து என் மகிழ்ச்சி மிகுகின்றது.



இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந் நன்னாளில் இக் கலைக்கழகத்துக்கு அடிப்படையாகிய உயர்ந்த உள்ளக்கிடக்கை வாய்ந்த, பெருந்தகையாளராகிய செட்டிநாட்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களை நாம் நன்றி யுணர்வோடும், பேரன்போடும் நினைக்கின்றோம். இக்கல்விக் கழகத்தின் நலத்தில் ராஜா அவர்களின் குடும்பத்தினர் நெருங்கிய பேருக்கம் தொடர்ந்து காட்டி வருவது, மகிழ்ச்சிக்குரிய தொரு செய்தியாகும்.......

— சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா



பல்கலை வளர்த்த வள்ளல்

"பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்றார் மகாகவி பாரதியார். கவி வாக்கை நிறைவேற்றி வைத்த வித்தகர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சமுதாயத்தின் குறிக்கோள் "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பது. ஆம், செட்டியார்கள் அந்நாட்களில் கடல் கடந்து பர்மா, மலாயா முதலிய நாடுகளுக்குச் சென்று ஏராளமான செல்வத்தைத் திரட்டி வந்தார்கள். தமிழகத்தை அடைந்ததும், அப்படிப் பிரயாசைப்பட்டுத் தேடிய திரவியத்தைக் கோயில் திருப்பணிகளில் செலவு செய்வதில் பேரின்பம் கண்டார்கள்.

நம் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் குலப் பண்புக் கொப்ப அளவு கடந்த செல்வத்தை ஈட்டினார்; கூடவே, ஆலயத் திருப்பணிகள் புரிந்தார். அது மட்டுமல்ல, மருத்துவச் சாலைகள் ஏற்படுத்தினார்; மாதர் உடற் பயிற்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இரண்டு லட்ச ரூபாய் வழங்கிச் சென்னையில் 'வெலிங்டன் கிளப்' என்ற மகளிர் மன்றத்தை நிறுவினார். இப்படி அவர்கள் இலங்கை, பர்மா, இந்தியா முதலிய பல நாடுகளிலும் ஆயிரக் கணக்கிலும் லட்சக்கணக்கிலும் வழங்கி உதவிய பொது நல ஸ்தாபனங்களைக் கணக்கெடுக்கப் புகுந்தால் ஓரளவுக்குள் நிற்காது.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் விளங்குவது, இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஆடும் பெருமான் எழுந்தருளி இருக்கும் சிதம்பரத்தின் எல்லையிலே தமது பெயரிலே அமைந்த பல்கலைக் கழகமாகும்.

* * *

கானாடுகாத்தான் என்ற ஊரிலே அறம் பல புரிந்த செல்வராகிய முத்தையா செட்டியாரவர்களின் புதல்வராக ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் 1881ம் ஆண்டு சாதாரண அண்ணாமலையாகப் பிறந்தார். பிறகு தமது சொந்த முயற்சியில் வெகு பிரயாசைப் பட்டுப் பொருள் ஈட்டினார். இல்லை, — செட்டியாரவர்களுடைய திறமையையும், பலப் பல வகையில் செல்வம் பயன் அடையப் போகிறது என்பதையும் உணர்ந்து பள்ளத்தை நோக்கித் தண்ணீர் பாய்வதுபோல் செல்வம் அவர்களிடம் வந்துசேர்ந்தது!



வெள்ளி விழாவின் தலைவர் மைசூர் ராஜ் பிரமுக் ஜெய சாமராஜ உடையார்

அது மட்டுமன்றிக் காரைக்குடி நகர சபையின் தலைவராயிருந்த போது ராவ்பகதூர், திவான் பகதூர் முதலிய பட்டங்களையும், அவர் பரம்பரைக்கே என்றும் நிலவும் வகையில் 1929-ல் "ராஜா" பட்டத்தையும் அரசாங்கத்தார் வழங்கினார்கள். கல்வித் துறையில் ராஜா ஸர் புரிந்துள்ள பணிகளைப் பாராட்டிச் சென்னைச் சர்வகலாசாலை 1932-ல் எல்.எல்.டி. என்ற டாக்டர் பட்டத்தையும் வழங்கியது.

அந்நாட்களில் பொருள் ஈட்டுவதிலும், வாணிபம் புரிவதிலும், ஆட்சி நடத்துவதிலும் மிகுந்த திறமை காண்பித்த ஆங்கிலேயர்களை அவர்கள் நாட்டிலேயே சென்று காண வேண்டும் என்று விருப்பங்கொண்டார் ராஜா சர் அவர்கள். அதற்கேற்றாற் போல் 1911ம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு அழைப்பும் வந்தது. அதை முன்னிட்டு இங்கிலாந்து

சென்ற ராஜா ஸர் அவர்கள் அங்குள்ள கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு போன்ற உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களைக் கண்டார். அத்தகையதோர் கழகம் தமிழகத்தில் நிறுவ வேண்டும் என்ற ஆசை அங்கே முளை விட்டது. அது விரைவிலேயே—1929ம் ஆண்டிலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகப் பரிணமித்தது.

முதலில் மதுரையம்பதியில்தான் இத்தகையதோர் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்று எண்ணங் கொண்டார். ஆனால் அது சில காரணங்களால் நிறைவேற்ற முடிய வில்லை. ஆயினும் சலியா முயற்சியுடைய செட்டியாரவர்கள் உள்ளம் தளர்ந்து விடவில்லை.

அண்ணாமலைச் செட்டியாரவர்களின் தமையனார் திவான்பகதூர் ராமசாமி செட்டியாரவர்கள் தமது பெயரில் சிதம்பரத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளி நடத்தி வந்தார். தமையனார் 1918-ல் இறைவனடி சேர்ந்தமையால் அதை நிர்வகிக்கும் பொறுப்பு அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தலையில் சுமந்தது. உயர்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு மேற்கொண்டு கல்லூரிப் படிப்புப் பெற வசதியில்லாமலிருந்தது. எனவே, சிதம்பரத்தின் எல்லையிலே திருவேட்களத்தில் நூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தில் 1920-ல் தம் அன்னையாரின் பெயரில் "மீனாக்ஷி கல்லூரி" என்று ஆரம்பித்தார். 1922-ம் ஆண்டு, காலஞ்சென்ற சி. ஆர். ரெட்டியவர்கள் பி. ஏ. வகுப்பைத் தொடங்கி வைத்தார். 1925-ல் ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு முதலியவற்றில் கலைச் சிறப்பு (பி. ஏ. ஆனர்ஸ்) வகுப்புகள் தொடங்கப் பெற்றன. 1927-ல் டாக்டர் சாமிநாதய்யர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு தமிழ்க் கல்லூரியை ஆரம்பித்தார். விரைவில் தமிழ் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் எழலாயிற்று. 1929-ல் இசைக் கல்லூரியும் நிறுவினார் அண்ணாமலை வள்ளல். இதனிடையே 1926-ல் அரசாங்கம் தமிழ் மொழிக் கென்று ஒரு பல்கலைக் கழகம் அமைப்பது பற்றி ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தது. எத்தனை பல்கலைக் கழகங்கள் வேண்டுமானாலும் ஏற்படுத்தலாம்; ஆனால் போதிய பொருள் வசதி யின்மையால் உடனே பல்கலைக் கழகங்கள் தொடங்குவதற்கு இல்லை என்று அக் குழு தெரிவித்தது. அப்போது சென்னைப் பல்கலைக் கழகக் குழுவினர் மீனாட்சி கல்லூரியை வந்து பார்த்துச் சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவலாம் என்று ஒரு திட்டம் தயாரித்து அக்குழுவுக்குத் தெரிவித்தார்கள்.

அரசாங்கம் அத் திட்டத்தை ஆதரித்துப் பொருளுதவி செய்யுமெனத் தாம் நம்புவதாகவும் அக்குழு தெரிவித்தது. அப்போது ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் மீனாட்சி கல்லூரியைப் பல்கலைக் கழகமாக மாற்றுவதாயிருந்தால் ஏற்கெனவே ஏற்படுத்திய நான்கு கல்லூரிகளையும், நன்கு முடிக்கப் பெற்ற எல்லாக் கட்டடங்களையும் இருபது லட்சம் ரூபாயையும் நன்கொடையாகத் தாம் தர முன் வருவதாக அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தார்கள். அரசாங்கத்தாரும் இவ்வள்ளலின் பெருந்தன்மையைப் பாராட்டி, வைப்பு நிதியாக இருபது லட்சமும், மேலும் கட்டடங்கள் கட்டுவதற்காக ஏழரை லட்சமும், ஆண்டுதோறும் ஒன்றரை லட்ச ரூபாயும் வழங்க முன் வந்தார்கள். அதுமட்டு மின்றி, அந்தப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்று வழங்கப் பெறும் என்றும், அதைச் சுற்றி எழும் நகரத்துக்கு அண்ணாமலை நகரம் என வழங்கும் என்றும் அரசாங்கத்தார் உறுதி கூறினார்கள்.

அப்போதைய சென்னை சர்க்காரின் முதல் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன், சென்னைச் சட்டசபையிலிருந்த தீரர் சத்தியமூர்த்தி, ஸர் ஏ. பி. பாத்ரோ முதலியோர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வண்மையைப் பெரிதும் பாராட்டினார்கள். ஆக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1929-ம் ஆண்டு ஜூலை மாதம் 6ம் தேதி தொடங்கப் பெற்றது. இக் கழகத்தின் செனட்சபையைத் தொடங்கி வைக்கும் பெருமை கவர்னர் கோஷன் பிரபுவுக்குக் கிடைத்தது. அன்று அன்னாரைத் தொடங்கி வைக்கும்படி கேட்டுக்கொண்ட ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் "சென்னை அரசாங்கம் தனிப்பட்டவர்கள் செய்யும் பொது நன்மைக்கான முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதும், தமிழ் இலக்கியம் தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்ய வேண்டும் என்று விரும்புவதும் இப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்குக் காரணமாகும்" என்று கூறினார். அன்னிய அரசாங்கமாயினும் இப்படிச் சில சில நற் காரியங்களை அவ்வப்போது செய்திருப்பதை நினைவு படுத்திக் கொள்வதில் ஒரு மகிழ்ச்சியே ஏற்படுகிற தல்லவா?



டாக்டர் ஆர். கே. சண்முகம்

இந்தப் பல்கலைக் கழகம் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் கல்வித் துறையில் மெய்ப்பொருள், வரலாறு, பொருளாதாரம், சமூக கிராம நலம், கணிதம், புள்ளி விவரம், பௌதிகம், ரசாயனம், தாவரம், விலங்கு நூல், விவசாயம், நில நூல், ஆசிரியர் பயிற்சி, இசைப் பயிற்சி, பொறி இயல், ரசாயனத் தொழிற் கல்வி, ஓவியம், நாடகம், மாணவர் படைப் பயிற்சி ஆகியவைகளிலும் தமிழ், ஆங்கிலம், வட மொழி, பிரெஞ்சு, ஜெர்மன், ஆகிய மொழிகளுக்கும் புரிந்துள்ள தொண்டு அபாரமானது.

எல்லாவற்றையும் விடத் தமிழ் இசைக் கலைக்கு இந்தப் பல்கலைக் கழகம் செய்துள்ள பணி மிகவும் போற்றத் தக்கது. இத்துறையில் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தனிக் கவனம் செலுத்தி வந்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதுவரை இருபது தொகுதிகளாக இருபத்துமூன்று தமிழ் இசை நூல்களை வெளியிட்டுள்ளது. அந் நூல்களில் 1254 தமிழ் இசைப் பாடல்கள் அமைந்துள்ளன. மிருதங்க பா

முறைப் புத்தகமும் இத்தொகுதிகளில் ஒன்றாகும். இந்த நூல்கள் பெரும் சங்கீத வித்வான்களால் ஸ்வரங்களுடன் தயாரிக்கப் பட்டனவாகும்.

இப்போது இசைப் பகுதியில் பேராசிரியர் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமண்ய பிள்ளை, மாயவரம் பிடில் கோவிந்தராஜ பிள்ளை முதலிய புகழ் பெற்ற இசை வாணர்கள் அரும் பணியாற்றி வருகிறார்கள்.

இப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தவர் அண்ணாமலைச் செட்டியாரவர்களாயினும் அதைப் பலதுறைகளிலும் வளர்த்த பெருமையில், அதன் துணை வேந்தர்களாக இருந்து பணி புரிந்த பெரியார்களுக்கும் பங்கு உண்டு. ஸர் எஸ். இ. ரங்கநாதன், மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், ஸர் கே. வி. ரெட்டி, எம். இரத்தினசாமி, டாக்டர் எஸ். ஜி. மணவாளராமாநுஜம், டாக்டர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலியவர்களும், இப்பொழுது 1953-ம் ஆண்டிலிருந்து டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயரவர்களும் இந்தக் கழகத்தைப் பல துறைகளில் அரும்பணி புரிந்து சிறப்புறச் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவர் காலத்திலும் இப்பல்கலைக் கழகம் புகழின் ஏணியில் ஒவ்வொரு படியாக ஏறினதைக் கூற இங்கு இடம் போதாததால் விடுகிறோம்.

இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தமிழ் சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரிடையும் இப்பல்கலைக் கழகம் சிறந்த பணி புரிந்திருக்கின்றது.

இங்கு வந்து பயின்ற மாணவர்கள் இன்று வாழ்க்கையில் மிக உயரிய நிலையில் பேர் அதிகாரிகளாகவும், விஞ்ஞானிகளாகவும், இசை நிபுணர்களாகவும், தமிழ்ப் புலமையும், ஆராய்ச்சித் திறன் மிக்கவர்களாகவும் விளங்குகிறார்கள். இன்னும் வரும் காலத்தில் எத்தனை எத்தனையோ பேர் இத்தகைய கற்பயனைப் பெற்றுத் தாய் நாட்டுக்கும் தமிழுக்கும் தொண்டாற்றப் போகிறார்கள்.

இப்படித் தமிழகத்தின் புகழ் உலகமெங்கும் பரவும் வகையில் அற்புதமான பல்கலைக் கழகம் அமைத்த ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நாமம் நீடூழி வாழ்க!

என்றும் இலங்கும்!

தனியொருவர் முயற்சியினுஞ் செயற்கரிய
கலைகழகந் தன்னை நாட்டிக்

கனிமனத்தால் தமிழகத்தார் கலையுயர்வு
பெறச்செய்த கருணை வள்ளல்

மனிதர்களில் தலையான மனிதர் அண்ணா
மலையரசர் புகழ்போல் அன்னார்

இனியதமிழ் இசைவளர்த்த எழிலார்பல்
கலைக்கழகம் இலங்கும் என்றும்!

இத்தகைய கலைக்கோயில் எண்ணியவா
நியற்றிநின்ற இணையிலாத

உத்தமர் அண்ணாமலைவேள் உலகினுக்குப்
பலநெறியால் உதவி செய்த

அத்தனையும் அறிவாற்றல் அஞ்சாமை
வினைத்திட்பம் அருளன் பாய

வித்தகமாங் குணநலமும் விளம்பஒரு நிற்
பெருநூலாய் விரியு மன்றே!

பண்டித வித்துவான்
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்.

பல்கலைக் கழகமும் தமிழ் வளர்ச்சியும்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இதன் தமிழ்த் துறையும் வளர்ந்து வந்திருக்கின்றது. இப் பல்கலைக் கழகம் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்துவரும் பணிகளை எண்ணி முடியாது. தமிழ் இலக்கிய வரலாறு ஒன்று எழுதத் தொடங்கினால் அதில் பல்கலைக் கழகத்தின் தொண்டுக்குச் சிறப்பானதோர் இடம் அளித்தே தீர வேண்டும்.

இப்பல்கலைக் கழகத்தின் 'செனட் சபை'த் தொடக்க விழாவின்போது ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு, இன்னும் நம் செவிகளில் ஒலித்த வண்ணமாக இருக்கின்றது. "தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக் கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும்" என்று ராஜா அவர்கள் அப்போது தெரிவித்தார்கள். அன்னாரின் திருவுள்ளமே இன்று தமிழ்த் துறைக்கு உறுதுணையாக நின்று உதவி வருகிறது.

தமிழில் தேர்ச்சி அடைந்து பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெறுவதற்குரிய வகுப்பு இப் பல்கலைக் கழகத்திலேதான் முதன் முதலாகத் தொடங்கப் பெற்றது. தமிழாசிரியர்களுக்கு ஆசிரியப் பயிற்சி முதன் முதல் அளித்த பெருமையும் இப் பல்கலைக் கழகத்தையே சாரும். பிற பல்கலைக் கழகங்களில் தமிழுக்கெனப் பேராசிரியப் பதவி இல்லாமலிருந்த போது தமிழுக்கெனப் பேராசிரியப் பதவியொன்றை முதன்முதலாக ஏற்படுத்தித் தமிழைப் பெருமைப் படுத்தியதும் இப் பல்கலைக் கழகமே.

தமிழ்த்துறையின் ஒரு பகுதியாக விளங்கியது, தமிழ் ஆராய்ச்சித் துறை. டாக்டர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் ஆராய்ச்சித் துறை தனக்கென ஒரு பேராசிரியரைக் கொண்டு தனித் துறையாகியது. அடுத்து டாக்டர் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் துணை வேந்தராய் வந்தவுடன், அத் தமிழ்த் துறை மேலும் ஒரு தனித் துறையாகப் பிரிந்து, வேறொரு பேராசிரியரைப் பெற்றது. இப் பிரிவுகளைப் பிரிவு என்று சொல்லுதல் கூடாது. தமிழ்த் துறையின் பிரிவு என்றே சொல்லுதல் வேண்டும். எனவே, தமிழுக்கென இப்பொழுது மூன்று பேராசிரியர்களும், அம்மூவரையும் தலைவராகக் கொண்ட மூன்று தனித் துறைகளும் உள்ளன. இன்னும் சொன்னால், தமிழுக்குப் பேராசிரியர் நால்வராகும் நிலை வந்து கொண்டிருக்கிறது. அதாவது, இந்திய அரசியலார், வெள்ளி விழா நினைவாகப் பெருந் தன்மையோடு அளித்த மூன்று லட்ச ரூபாயை மூலதனமாகக் கொண்டு, ஒரு தமிழ்ப் பேராசிரியரை நியமிக்கவும் கருதியுள்ளனர்.



துணைவேந்தர்
திரு சி. பி. ராமசாமி அய்யர்

தமிழ் நாட்டின் தலைப்புதல்வர்களெனப் போற்றப் பெறும் அறிஞர் பலர் ஆசிரியர்களாகவும், பேராசிரியர்களாகவும் இங்கே தொண்டாற்றியுள்ளனர். தமிழ் நாட்டுக்கும், வெளி நாட்டுக்கும் தமிழாசிரியர்களையும், தமிழ்ப் பேராசிரியர்களையும் தமிழ்ப் பகுதி தந்துதவியிருப்பதும் மகிழ்வுடன் குறிப்பிடத் தக்கது. தமிழாராய்ச்சித் துறையினின்று பல அரிய நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழ்த்துறையின் முதல் தலைவராகவும் ரீடராகவும் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் பொறுப்பேற்றார்கள். ஓராண்டுக்குப் பின் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் அப் பொறுப்பினை ஏற்றுச் சில காலம் நடத்தினார்கள்.

பின்னர் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த துறவியான விபுலானந்த அடிகள் ராஜா அண்ணாமலை வள்ளல் அவர்களின் விருப்பத்துக்கேற்ப 1931ம் ஆண்டு முதற் பேராசிரியராகப் பதவி பெற்றார்கள். இவர்கள் காலத்தில்தான் 'தமிழ்ச் சிறப்பு வகுப்பு' (பி. ஏ. ஆனர்ஸ்) தொடங்கப் பெற்றது. 'தமிழ் பி. ஏ. ஆனர்ஸ்' வகுப்பில் பயின்ற மாணவர்கள் முதன் முதலாக 1934ம் ஆண்டில் பட்டம் பெற்றனர். தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்கள் மெய்ப் பொருள் நூல்களும் பயிலத் தொடங்கினர். பி. எஸ்ஸி. படிக்கும் மாணவர்கள் ஆங்கிலம் நீங்கலாக மற்றொரு மொழி படிக்க வேண்டும் என்று திட்டம் செய்யப் பெற்றமையால், தமிழ் கற்கும் வாய்ப்பு, பி. எஸ்ஸி. மாணவர்களில் பெரும்பாலோருக்கும் கிடைப்பதாயிற்று. விபுலானந்த அடிகள் இங்கிருந்த பொழுதுதான் தமது ஒப்பற்ற இசை ஆராய்ச்சி நூலாகிய யாழ் நூலை இயற்றத் தொடங்கினார்கள்.

பின்பு 1933ம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் திரு எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் எம். ஏ., பி. எல்., தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் இங்கு பணிபுரிந்த போது தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்குப் புத்துரை கண்டு, தொல்காப்பிய உரையாசிரியர் வரிசையிலே தாமும் ஒருவரானார்கள். தாம் இயற்றிய 'மாரிவாயில்' என்னும் நூலை அக்காலத்தில் வெளியிட்டனர். அந் நூல் வள்ளல் அண்ணாமலை அரசர் அவர்களுக்கு உரிமையாக்கப் பெற்றது. இவர்கள் மேலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதினார்கள். இவர்களுக்குப் பல்கலைக் கழகத்தார், வெள்ளி விழாவன்று டாக்டர் பட்டம் வழங்கவிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இவர்கள் தலைவராய் இருந்தபோதுதான் தமிழ் ஆராய்ச்சித் துறை தோன்றியது. மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் இத் துறையில் முதல் தமிழ் விரிவுரையாளராக இருந்து,



சென்ற ஆண்டு ஏப்ரலில் அண்ணாமலை நகரில் நடந்த பி. இ. என். மகாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் நேரு விஜயம் செய்தபோது, பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டார்.

அரிய பணிகள் பல செய்தனர். அவர்களது இனிய பாடல் இயற்றும் வன்மைக்குப் "பாரி காதை"யும், அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பற்றிப் பாடிய பாடல்களும், அன்னாரது ஆராய்ச்சி ஆற்றலுக்கு, அவர்கள் எழுதிய 'தமிழ் வரலாறு' 'இத்தன்' 'கோசர்' 'குறுந் தொகையுரை' 'பட்டினப்பாலை யுரை' 'பெரும்பாணாற்றுப் படையுரை' ஆகிய நூல்களும் சான்றாகும்.

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், 1934-ம் ஆண்டிலிருந்து தமிழ் விரிவுரையாளராக நான்கு ஆண்டுகளும், தமிழ்த் துறைத் தலைவரின் அலுவல்களைக் கவனித்து (Acting Professor) இரண்டாண்டுகளும் பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் சம்பிரதான வித்துவான் வகுப்புக்களில் தமிழும் வடமொழியும் கற்கும் மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். அரசியலார், பண்டிதமணி அவர்களின் பெரும் புலமையைப் பாராட்டி, 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தை 1942ம் ஆண்டில் இவர்களுக்குக் கொடுத்துச் சிறப்பித்தனர். பண்டிதமணி அவர்கள் ஊருக்குச் சென்று ஓய்வு பெற்று இருந்த பின்னும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தமிழ்ப் பணி செய்ய வருமாறு இவர்களை அழைத்தனர். அதற்கு இணங்கத் தமிழ் ஆராய்ச்சி ஆலோசனையாளராகப் பொறுப் பேற்றார்கள். அப்பொழுது வடமொழியிலிருந்து கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை மொழிபெயர்த்தனர். அவ்வமயம் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்கள். 1946-ம் ஆண்டில் மீண்டும் ஓய்வு பெற்றனர்.

திரு கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், 1940-ம் ஆண்டில் பேராசிரியராக நியமிக்கப் பெற்று, நான்கு ஆண்டுகள் பணி புரிந்தார்கள். வடமொழியில் வேதாந்த சிரோமணி, சாகித்திய சிரோமணி, வியாகர்ண சிரோமணி என்ற வகுப்புக்கள் இருத்தல் போலத் தமிழிலும் சித்தாந்தப் புலவர், இலக்கியப் புலவர், இலக்கணப் புலவர் என்ற வகுப்புக்கள் தொடங்குவதற்கு இவர்கள் காலத்தில் வழி வகுக்கப் பெற்றது.

திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல். அவர்கள், 1944-ம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் பி. ஓ. எல். பட்டப் படிப்புத் தொடங்கப் பெற்றது.

1946-ம் ஆண்டு முதல் டாக்டர் திரு அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., பி. எச். டி அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார்கள். இவர்கள் 1935-ம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணி புரிந்து வருபவர்கள். இப்போது உள்ள மூன்று தமிழ்த் துறைகளுள் ஒன்றாகிய தமிழ்க் கலைத்துறைப் பகுதிக்கு 1953 ம் ஆண்டு முதல் இவர்கள் பேராசிரியராக இருக்கிறார்கள். பலர் இவர்களின் மேற்பார்வையில் ஆராய்ச்சி செய்து எம். லிட்., பிஎச். டி. ஆகிய பட்டங்கள் பெற்றுள்ளனர். இவர்கள் 1948ம் ஆண்டில் மூன்று திங்கள் வரை துணைவேந்தர் (Acting Vice Chancellor) அலுவல்களைக் கவனித்து வந்திருக்கிறார்கள். இவர்களைப் 'பிரிட்டிஷ் கவுன்சில்' அழைத்தமையால், இங்கிலாந்திலுள்ள பல்கலைக் கழகங்களை ஆறு வாரங்கள் சுற்றிப் பார்ப்பதற்காக இப்போது லண்டனுக்குச் சென்றுள்ளார்கள். இவர்கள் திரும்பி வரும் வரை, தமிழ்க் கீழ்த் திசைக் கலைப்பகுதிப் பேராசிரியர் பண்டித வித்வான் திரு லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் இக்கலைப் பகுதிக்கும் பேராசிரியராக நியமிக்கப் பெற்றுள்ளார்கள்



முன்னாள் துணை வேந்தர்
திரு மணவாள ராமானுஜம்

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமிழ்க் கீழ்த் திசைக் கலைப்பகுதியின் முதற் பேராசிரியராக 1953-ம் ஆண்டில் நியமிக்கப் பெற்றார்கள். இவர்கள் 1936-ம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணி புரிந்து வருபவர்கள். 1943-ம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் தமிழ் இசை ஆலோசனைக் குழுவின் செயலாளராகவும் இருந்து இருபதுக்கு மேற்பட்ட தமிழிசை நூல்களைத் தொகுத்து அவை வெளிவர இவர்கள் பணி புரிந்துள்ளார்கள். ஏழு ஆண்டுகளாக நிறுத்தப் பெற்றிருந்த ஆசிரியப் பயிற்சி வகுப்பு இப்பகுதியில் 1953-ம் ஆண்டில் மீண்டும் தொடங்

கப்பட்டது. புலவர் வகுப்பு மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பத்து ரூபாயாக இருந்த உதவிச் சம்பளம் இருபத்தைந்து ரூபாயாக உயர்த்தப்பட்டது. எம். ஓ. எல். ஆராய்ச்சிப் பட்டம் பெறுவோருக்கும், புலவர் வகுப்பில் சேரும் மாணவர்களுக்கும் உதவியாக விதிகள் தக்கவாறு மாற்றி யமைக்கப் பெற்றிருக்கின்றன. மேலும் அடுத்த ஆண்டு முதல் இப் பகுதியில், எம். ஓ. எல். வகுப்பு நடைபெறுவதற்குரிய முன்னேற்பாடுகளும் செய்யப் பெற்றுள்ளன. 1901ம் ஆண்டிலிருந்து 1953ம் ஆண்டு வரை வாழ்ந்தவர்கள் இயற்றிய இலக்கிய மதிப்புடைய நூல்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தொகுப்பதென, இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் இயங்கும் சாகித்ய அகாடமி முடிவு செய்தது; தமிழைப் பொறுத்த வரையில் அப் பணி பேராசிரியர் திரு இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. இவர்கள் கீழ்த்திசைக் கலைப் பகுதிகளுக்கு டீனாக (Dean, Faculty of Oriental Studies) வும் இருந்து வருகிறார்கள். இப்பகுதியில் பணியாற்றும் திரு. கே. என். சிந்தாமணி அவர்கள், இதுவரை தமிழில் வெளிவந்த எல்லா நூல்களையும் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து வருகிறார்கள்.

தமிழ் ஆராய்ச்சிப் பகுதி தனித்துறையாகப் பிரிந்த நாளிலிருந்து வித்துவான் திரு கோ. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., பி. எல்., அவர்கள் பேராசிரியராக நியமிக்கப் பெற்றுள்ளார்கள். இவர்கள் 1941–ம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்து வருபவர்கள். இப்பகுதியில் "பிற்காலச் சோழர் சரித்திரம்" என்ற சிறந்த நூல் மூன்று பகுதிகளாகத் திரு சதாசிவப் பண்டாரத்தார் அவர்களால் எழுதப் பெற்று இரண்டு பகுதிகள் வெளி வந்துள்ளன. கம்பராமாயணத்துக்குத் திருத்தமான பதிப்பொன்றை வெளியிடுவதற்காகப் பல ஏட்டுச் சுவடிகள் இப்போது ஒப்பு நோக்கி ஆராயப் பெறுகின்றன. இம்முயற்சியால் 'சுந்தரகாண்ட'த்தின் முற்பகுதி வெள்ளி விழாவன்று வெளிவர இருக்கிறது. இவ்வாராய்ச்சிப் பகுதியில் பணியாற்றும் வித்துவான் திரு க. வெள்ளைவாரணன் அவர்கள், இப்போது திருமுறை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

இத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூன்று தமிழ்த் துறைகளும் மேலும் மேலும் வளர்ந்து சிறந்த பணியாற்றும் என்பது உறுதியாம்.

ஓர் எடுத்துக் காட்டு!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம், உண்மையிலேயே மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும். தமிழ் நாட்டின் அரும் புதல்வர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தம் வள்ளன்மையால் இப்பல்கலைக் கழகத்தை நிறுவினார்கள். அதன் வாயிலாகப் புதுமைக் கலைகளுக்கும், அறிவியலுக்கும் ஒரு பெரு நிலையத்தை உண்டாக்கியதோடு மட்டுமன்றித் தமிழ்க் கல்விக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒரு பெருங் கலைக் கூடத்தை அமைத்தார்கள். அதனால், அரசர் பெருமகனார் தமிழ் நாட்டுக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் பெரியதொரு பணியைச் செய்திருக்கிறார்கள்.



இப்பல்கலைக் கழகம், செட்டி நாட்டு அரசர் குடும்பத்தாரின் ஆதரவையும், தளரா உதவியையும் பெறும் பெரும் பேற்றைப் பெற்றுள்ளது. அக்குடும்பத்தில் இன்று மதிப்புக்குரியவராகத் திகழும் தலைமகனார் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களும், அவர்கள் வழி வருவாரும் தொடர்ந்து பல்கலைக் கழகத்தை ஆதரித்து, அதன் முன்னேற்றத்துக்கு வழிகாட்டி வருவார்களென்று உறுதியாக நம்புகிறேன்.

மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், திவான்பகதூர் எஸ். இ. அரங்கநாதன், சர் கே. வி. ரெட்டி நாயுடு, திரு எம். இரத்தினசாமி, டாக்டர் மணவாள ராமாநுஜம், டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சர் சி. பி. இராமசுவாமி ஐயர் ஆகிய பேரறிஞர்கள் வழிகாட்டிய பயனை இப்பல்கலைக் கழகம் பெற்றிருக்கிறது. ஆதலால், இப் பெரும் பல்கலைக் கழகம், ஆண்டால் இளையதெனினும், கல்வி, கலை ஆகிய துறைகளில் பிறர்க்கு எடுத்துக் காட்டாகத் தக்க உயர்ந்த நிலையை உருவாக்கிக் கொண்டிருப்பது வியப்பன்று. இப்பல்கலைக் கழகம், இந்நிலையைத் தொடர்ந்து மேற்கொண்டு, எதிர்காலத்தில் இதன் சீரிய தொண்டினால் மேலும் மேலும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை. இப்பல்கலைக் கழகம், அறிவொளி பரப்பிப் பல்லூழி காலம் நம் மக்களுக்குத் தொண்டு புரிவதாகுக.

— **கே. காமராஜ்**, முதல் அமைச்சர், சென்னை.

ராஜா சர் முத்தைய செட்டியார்

செட்டிநாட்டு ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் (Pro-Chancellor) பதவியை ஏற்றுக் கொண்டார்கள். இவர்கள் கானாடு காத்தான் என்ற ஊரில், 1905-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பிறந்தார்கள். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று, 1924-ம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றார்கள்.

இளம் பருவம் முதல் இவர்கள் பொதுநலப் பணியில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார்கள். தம் இருபத்து நான்காம் வயதில் பேங்குகளின் நிலையை ஆராய்ந்த குழுவிலும், தம் இருபத்து ஆறாம் வயதில், வாக்களிப்பு முறைகளை ஆராயச் சென்னை அரசாங்கம் அமைத்த குழுவிலும் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார்கள்.

1929-ல், ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் (அப்பொழுது குமாரராஜா) சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினராகி, ஆறு ஆண்டுகள் அருட்பணி யாற்றினார்கள். நகராட்சியின் சிக்கல்களை விரைவில் உணர்ந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவராக இருந்தமையால், இவர்கள் சென்னை மக்களின் நன்மதிப்பையும், அரசாங்கத்தினுள்ளவரின் பாராட்டையும் பெற்றார். 1932-ல், சென்னை நகராண்மைக் கழகத் தலைவராகப் போட்டியின்றி இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இவர்களுடைய முயற்சியின் விளைவால், 1933-ம் ஆண்டு தொடக்கத்தில் மேயர் பதவி தோற்றுவிக்கப் பெற்றது. இவர்களே 1933-ல் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதோடு, 1934-35-ம் ஆண்டு மீண்டும் ஒரு முறை மேயராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இவ்வளவு இளம் வயதில் யாரும் எங்கும் மேயரானதில்லை என்பது குறிப்பிட வேண்டும். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சென்னை நகரம் பல வகைகளில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்தது.



1930-ல், சென்னைச் சட்டசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று, அக்காலந் தொடங்கிச் சென்னை மாநிலத்தின் பொது வாழ்வில் சிறந்து விளங்கும் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார்கள். 1936-ல் கல்வி — சுகாதார அமைச்சராகப் பணி யாற்றினார்கள். அதே சமயத்தில் சென்னை பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் (Pro-Chancellor) இருந்தார்கள். 1937-ல் மீண்டும் சென்னைச் சட்ட சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று, ஸ்தல ஸ்தாபன அமைச்சராகவும் பணி புரிந்தார்கள்.

கல்வித் துறையில் இவர்களுக்கு எப்பொழுதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. இத்துறையில் பெருந் தொண்டாற்றிய ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருமைப் புதல்வர் என்ற முறையில், இவருக்கு இந்த ஆர்வம் இருப்பது இயற்கையேயாகும். 1928-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டம், சட்டசபைக்கு வந்த பொழுது அதனை ஆர்வத்துடன் ஊன்றிக் கவனித்து, இப்பல்கலைக் கழகத்தை உருவாக்குவதில் தந்தையார் அவர்களுக்கு இவர்கள் உதவியாக இருந்தார்கள். அன்று முதல் கல்வித் துறையில் இவர்கள் காண்பித்த ஆர்வம் மேலும் மேலும் பெருகி வருகின்றது. இவர்கள் பச்சையப்பர் அறநிலையங்களின் ஆட்சிக் குழுவில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினராக இருந்து, சிறந்த தொண்டாற்றி வருகிறார்கள். இவர் பச்சையப்பர் அறநிலையங்களின் ஆட்சிக் குழுவின் தலைவராக இருந்தபோதுதான் பச்சையப்பர் கல்லூரியின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஆறாண்டு (1940-46) இவர்கள் உறுப்பினராக இருந்தபோது பல்கலைக் கழகத்துக் கல்வி முறை, ஆட்சி முறைகளைத் தெளிவாக ஆராய்ந்தார்கள். தம்முடைய தலைசிறந்த செல்வாக்கைப் பல்லாற்றாலும் பயன்படுத்தித் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழிசை வளர்ச்சிக்கும் சிறப்பாக இவர்கள் செய்து வரும் அரும்பெருந் தொண்டுகள் என்றும் பாராட்டப் பெறும்.

செட்டியார் அவர்களுக்கு பேங்குகளின் நடவடிக்கைகளில் மிகுந்த அநுபவம் உண்டு. இந்தியன் பேங்கின் டைரக்டராக நான்கு ஆண்டுகளும் (1928-32), இம்பீரியல் பேங்கின் டைரக்டராக 1932 முதல் 1936 வரையும் பணியாற்றினார்கள்; மீண்டும் அந்த இம்பீரியல் பேங்கின் டைரக்டர் குழுவில் 1945ம் ஆண்டு முதல் உறுப்பினராகி, இப்போது இப் பேங்கின் சென்னைக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்கள்.

இவர்கள், 1941ல் தென்னிந்திய வணிகச் சபையின் தலைவராக இருந்தார்கள். தொழில்-வணிகச் சபைகளின் அகில இந்திய அமைப்பு நிலையத்தின் தலைவராக 1943-44-ல் இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இப்பெரும்பேற்றைப்பெற்ற தென்னிந்தியர் இன்றளவும் இவர்கள் ஒருவரே யாவர்.

போர்க் காலத்தில், தேசியப் பாதுகாப்புக் குழுவில் உறுப்பினராக இருந்தார்கள். இதன் பயனாக, நாட்டின் தற்காப்பினைப் பற்றியும், முப் படைகளைப் பற்றியும் செம்மையாக அறிந்து கொள்ள இவர்

களுக்கு வாய்ப்பு நேர்ந்தது. 1946, 1952ம் ஆண்டுகளில் சென்னைச் சட்ட சபையின் உறுப்பினராக இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பெற்று, இன்றளவும் அதன் உறுப்பினராக இருந்து வருகின்றார்கள். அரசியல் அமைப்பு மன்றத்திலும் இவர்கள் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

சென்னைச் சட்டசபையில் அதிக அநுபவம் உடையவர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள். ஏறத்தாழ ஒரு தலைமுறை இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து அச் சபையின் உறுப்பினராக இருக்கின்றார்கள்.

சென்னை மாநிலத்தில் சிறந்து விளங்கும் பொது நல நிலையங்களெல்லாம் எவ்வகையிலேனும் இவர்களின் தொடர்பைப் பெற்றனவாகவே இருக்கும். இவர்களுடைய தோற்றப் பொலிவு, அறிவின் ஆழம், ஒவ்வொரு செயலையும் நுணுகி ஆராயும் ஆற்றல், முன்னேற்பாட்டுடன் நடந்து கொள்ளும் தன்மை ஆகிய இக்குணச் சிறப்புகள் இவர்களோடு பழகுவார் அனைவர் உள்ளத்தையும் கவர்கின்றன. இவர்கள் அருள் நிறைந்தவர்கள்; அலுவல்கள் மலைபோல் குவிந்திருப்பினும் எப்போதும் எவருக்கும் காட்சிக்கு எளியவர்கள்: இவர்களுடைய பெருந்தன்மை பிறரிடம் காணுதற்கரியது; அனைவரையும் வயப்படுத்தும் இயல்புடையது. இவர்கள், நலம் பயக்கும் செயல்களிலெல்லாம் ஈடுபடும் இயல்புடையவர்கள்; இதனால் எல்லா வகுப்பினரிடையும் இவர்களுக்குப் பல நண்பர்கள் இருக்கின்றனர். செட்டி நாட்டு அரசர் குடும்பத்தினருக்கு உடன் பிறந்த இயல்பாகிய விருந்தோம்பலை இவர்கள் அன்பே உருவாகிய தம் மனைவியார் செட்டி நாட்டு அரசி அவர்களுடைய உதவியுடன் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களுடைய தந்தையார் அவர்களிடத்தில் இவர்களுக்கு இருக்கும் பெருமதிப்பும் தந்தையார் மேற் கொண்ட துறைகளிலெல்லாம் தாமும் ஈடுபட்டு அவற்றை வளர்க்க வேண்டும் என்பதில் இவர்கள் கொண்டிருக்கும் தளராத பேரார்வமும், இவர்களுடைய தந்தையாரின் நண்பர்களை எல்லாம் இவர்கள் பால் ஈர்த்து இவர்களை மதிக்கச் செய்கின்றன. தந்தையார் பெயரால் ராஜா அண்ணாமலைபுரம் என ஒரு நகரம் சென்னையின் ஒரு பகுதியாக அமைக்கப் பெற்றிருப்பது, இவர்களின் தந்தையார் அவர்களிடத்து இவர்களுக்கும் சென்னை நகர மக்களுக்கும் உள்ள பெரு மதிப்புக்குத் தக்க சான்றாகும்.


தம் தந்தையார் அவர்கள் உயிர்போல் கருதிய நிலையங்களைப் பாதுகாத்து வளர்ப்பதே தமது வாழ்க்கையின் தலைசிறந்த குறிக்கோளாக இவர்கள் கொண்டுள்ளார்கள். தம் தந்தையாரவர்கள் நாள்தோறும் பேணி வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், தமிழ் இசையையும் ஆதரித்தும் பாதுகாத்தும் வளர்த்தும் வருவதில் இவர்களின் உள்ளமும், செயலும் எப்போதும் ஈடுபட்டுள்ளன. ஏழு ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக இருந்து பல வகைகளிலும் பல்கலைக் கழகத்துக்குப் பணியாற்றுவதில் கண்ணுங்கருத்துமாயிருப்பதை ஐயந்திரிபறக் காட்டியுள்ளார்கள். இவர்களுக்கு நன்றி செலுத்தும் முறையில் இவர்கள் பெயரால் கவினுறு மண்டபம் ஒன்றை அமைக்கவும், இவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கவும் பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பது மிகவும் பொருத்தமாகும்.

ராஜா சர் முத்தைய செட்டியாரவர்கள் மேலும் மேலும் பல பொதுநலப் பணிகள் புரிந்து, இன்புற்று நீடூழி வாழ்க என வாழ்த்துவோமாக!

தமிழகத்தின் சிறப்பு!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருபத்தைந்து ஆண்டுகள் பயனுள்ள பணியாற்றி, அதன் வெள்ளிவிழாக் கொண்டாடுவதை அறிந்து நான் மகிழ்வெய்துகின்றேன். இப்பல்கலைக் கழகத்தின் தோற்றத்துக்குக் காரணம், காலஞ் சென்ற ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வள்ளன்மையே யாகும். அவர்களுக்குப் பின், அன்னார் மகனார் ராஜா முத்தைய செட்டியார் அவர்கள், இப்பெரு நிலையத்தின் வளர்ச்சியிலும், நலத்திலும் பேரூக்கம் காட்டி வருகின்றார்கள். இப் பல்கலைக் கழகம் புகழ் பெற்ற கல்வியாளர்களின் உறுதுணையைப் பல ஆண்டுகளாகப் பெற்றுத் தென்னிந்தியாவுக்குப் பெருமதிப்புக் குரிய பணியாற்றி வந்திருக்கிறது...... இதன் ஆராய்ச்சித் துறைகளும், இசைப் பகுதியும் நாடு முழுதும் பெரும் புகழ் ஈட்டியுள்ளன. இளைஞரிடத்தும் காணுதற்கரியனவாகிய ஆற்றல், சோர்வின்மை, மன உறுதி ஆகியவற்றோடு இப்போது செயலாற்றி வரும் துணை வேந்தருக்குப் பல்கலைக் கழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இக்கலைக் கூடம் எதிர்காலத்தில் மேலும் மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என்பது என் உளமார்ந்த வழிபாடாகும்.

உதவி ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்







இரவு வேளைகளில் நிம்மதியற்ற உறக்கம் பகலிலோ சிணுங்கலும், எதிலும் அதிருப்தியும் . . . இதனால் குழந்தை பருவத்திற்கேற்ற வளர்ச்சியுறுததில் வியப்பில்லையல்லவா?

தாயாரின் கவலையோ மேலும் வளர்ந்தது ...... தனது தாயாரிடமே கலந்தாலோசித்தாள். அவளது தாயின் அனுபவமும், அறிவும் குழந்தைக்கு 'க்ளாக்ஸோ' உணவு புகட்ட வழிகாட்டியாக உதவின.





திடமான எலும்புகளும், பற்களும் வளர்வதற்கெனவே விடமின் டியும் சுத்தரத்த வளர்ச்சிக்கென இரும்புச் சத்தும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட 'க்ளாக்ஸோ' ஒரு சுத்தமான, போஷாக்களிக்கும் பால் ஆகாரம்.

முன்பு சோனியாய் இருந்த குழந்தைதான் இது என்று உங்களாலேயே அடையாளம் கண்டு கொள்ளமுடியாத மாற்றம்! அது நன்கு உறங்குகிறது. அன்றியும், கிரமமான வளர்ச்சியும் தேகதிடமும் பெற்று எப்பொழுதும் மனச் சந்துஷ்டியுடனும் விளங்குகிறது.

Glaxo


''க்ளாக்ஸோ'' ஒரு சிறந்த சுத்தமான போஷாக்களிக்கும் பால் ஆகாரம்.

'க்ளாக்ஸோ' லேபரடரீஸ் (இந்தியா) லிமிடெட்

பம்பாய் – கல்கத்தா – மதராஸ்

மூன்று நாட்கள்

சி. ஜி. வித்யாலங்கார்



ஹிந்திக் கதை மொழிபெயர்ப்பு : ஜெயமணி

முதல் நாள்

இன்று காலையில் நான் எழுந்திருந்த போது இவ்வளவு சமீபத்தில் உண்மையான ஒரு சொர்க்க லோகம் இருப்பது எனக்குத் தெரியவே தெரியாது. நாங்கள் காஷ்மீரைச் சேர்ந்த ஒருவருடைய விருந்தாளிகளாக வந்திருந்தோம்.

ஆஹா! அவரது தோட்டத்தின் அழகை என்னவென்று சொல்லுவது! குன்றுச் சரிவு முழுவதும் தோட்ட மரங்களால் மறைக்கப்பட்டிருந்ததால், இயற்கையிலேயே பச்சைக் குன்று வானோங்கி வளர்ந்திருப்பது போல் தோன்றியது. குன்றை யடுத்து, பரந்து விரிந்து நீலப் பாய் போல் காட்சி அளிக்கும் மானஸபல ஏரியின் கண்கொள்ளாக் காட்சியை வர்ணிக்க இயலாது.

வசந்த காலம் பூரணப் பொலிவுடன் விளங்கிய சமயமாதலால், தோட்டத்தில் எங்கு பார்த்தாலும் பல வர்ணத்திலும் உள்ள புஷ்பங்கள் ஆழ்ந்த வாசனையை அள்ளி வீசிக்கொண்டு எல்லோரையும் மகிழ்ச்சி பொங்க வரவேற்பது போல் தோன்றின.

ஏரிக்கு அப்பாலும் விண்ணை முட்டும் குன்றுத் தொடர்கள் பனிக் கட்டிகளால் மூடப்பட்டு, சூரிய வெளிச்சத்தில் பளீரென்று பிரகாசிக்கும் வெண் மலைகளாகக் காட்சி தந்தன. ஏரியில் தெரிந்த அவற்றின் பிரதி பிம்பங்கள், அந்தக் கனவு உலகத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்தன. ஆம், இதைக் காட்டிலும் மிக்க அழகான சொர்க்க லோகம் வேறு என்ன இருக்க முடியும்!

ஆடம்பரமான நகர வாழ்க்கைக்கும், பூமியில் எங்கேயோ ஓர் ஓரத்தில் உள்ள இந்தக் கிராம வாழ்க்கைக்கும் எவ்வள வேற்றுமை!

நகரங்களில் வாழும் ஜனங்களின் சிரிப்புக்கூட செயற்கையாகவே இருக்கிறது. அங்கு போகும் இடங்களிலெல்லாம் முகம் தெரியாத அன்னியர்களே தென்படுகிறார்கள். கிராமங்களிலோ ஜனங்களிடையே நேசமும் ஐக்கிய பாவமும் தென்படுகின்றன. கிராமங்களில் இயற்கைத் தாயின் அழகையும் கருணையையும் பாருங்கள்!

நேற்றிரவு நான் இங்கு வந்து சேர்ந்தபோது குளிர்ந்த பூ மணம் கமழும் இளங்காற்று என்னை எதிர்கொண்டு அழைத்தது. இன்று காலையிலோ எங்கும் பசுமை பொருந்திய எல்லையற்ற நிலப்பரப்பு என்னைப் பார்த்துப் புன்முறுவல் புரிகின்றது.

இணையற்ற இந்த இயற்கை அழகைப் பார்க்கும் போது, என் கண் எதிரிலிருந்து திடீரென்று ஒரு திரை விலகியதுபோல் தோன்றியது. நான் உடை உடுத்திக் கொண்டு, நீண்ட தூரம் உலாவி வருவதற்காகப் புறப்பட்டேன்.

முதலில் நான் குன்றுச் சரிவிலிருந்து கீழே இறங்கி, வெல்வெட்டைப் போல் மிருதுவான புல் தரையில் நடந்து சென்றேன்.

அப்போதைக்கப்போது ஆகாயத்தில் செல்லும் இரண்டொரு குருவிகளைத் தவிர, மற்றப்படி எங்கும் நிசப்தம் நிலவியது. நான் பார்க்கும் காட்சிகள் எல்லாம் எனக்கு விசித்திரமாகவும், புதுமையாகவும்

உலகச் சிறுகதைப் போட்டியை ஒட்டிப் புது டில்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையால் பரிசளிக்கப்பட்ட கதைகளில் இது ஐந்தாவது பரிசாக ரூபாய் ஐந்நூறு பெற்ற ஹிந்திக் கதையாகும். இதை எழுதிய ஸ்ரீ சந்திரகுப்த வித்யாலங்கார் ஏராளமான அரசியல், சரித்திர நூல்களும் சிறு கதைகளும் நாடகங்களும் எழுதிக் கீர்த்தி பெற்றவர். அவர், தற்போது இந்திய சர்க்கார் விளம்பர மந்திரி சபை வெளியீடான "விசுவ தரிசன்" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வருகிறார்.

தோன்றின. இருந்தாலும் என்னை அந்தப் பிரதேசம் ஒரு பழைய நண்பனைப் போல் ஆகர்ஷித்தது.

* * *

நான் என் நண்பரின் எஸ்டேட் பங்களாவுக்குத் திரும்பிய போது மத்தியானமாகி விட்டது. அவர் தோட்டத்தில் விசித்திரமாகத் தோன்றிய ஒரு மரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் என்னை மனமார்ந்த புன்முறுவலுடன் வரவேற்று, என் சௌக்கியத்தை விசாரித்தார்.

நான் அருகில் சென்று பார்த்த போது, அந்த விசித்திர மரத்தின் அடிப்பாகம் மிகவும் கனமாக இருந்தது. அதிலிருந்து வெவ்வேறான மூன்று விதப் பழ மரங்கள் மூன்று பிரம்மாண்டமான கிளைகளாகப் பிரிந்திருந்தன. அவற்றைப் பார்த்ததும் எனக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை.

“இது முதலில் ஒரு பேரிக்காய் மரமாக இருந்தது. இப்போது இந்த மரத்திலிருந்து பேரிக்காய், ஆப்பிள், கோவைப் பழம் இம்மூன்று தினுசுப் பழங்களும் கிடைக்கின்றன” என்று விளக்கினார் என் நண்பர்.

“இப்போது இந்த மரத்தில் மற்றொரு பழக் கிளையை ஒட்டி இனிமேல் நாலு விதப் பழங்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறீர்களா!” என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

“இல்லை, இல்லை. ஆனால் நாலுவிதப் பழங்கள் கொடுக்கும் மரமும் இந்தத் தோட்டத்தில் இருக்கிறது. தவிர, வேறு பழ மரத்தின் கிளையை ஒட்டுவதற்கு இது உற்ற பருவம் அல்ல” என்றார் நண்பர்.

“ஒரு மரத்தில் வேறொரு மரக் கிளையை ஒட்டுவதற்குக் காலமும் பருவமும் உண்டா!”

“அதற்குக் காலமும் பருவமும் மாத்திரமல்ல, மரத்தின் மன நிலை கூடச் சரியாக இருக்க வேண்டும்!”

“மரத்துக்கு மனநிலை வேறா!” என்று கூறி நான் மேலும் உரக்கச் சிரித்தேன்.

“கிளை ஒட்டுதலைப் பற்றி உங்களுக்கு அதிகம் எதுவும் தெரியாது என்று தோன்றுகிறது. மனிதருக்குள் பரஸ்பரம் ஐக்கிய பாவம் ஏற்படுவதற்கு எப்படி மன நிலை முக்கியமோ, அது போலவே ஒரு மரத்தில் மற்றொரு மரக்கிளை ஒட்டிக் கொள்வதற்கு மனப் பாங்கு இன்றியமையாததாகும்” என்றார் நண்பர். இவ் விஷயமாக இதற்கு மேல் என் நண்பருடன் நான் விவாதிக்கவில்லை. பிறகு இருவரும் சாப்பிடச் சென்றோம்.

சாப்பிட்ட பின் நான் சிறிது நேரம் இளைப்பாறினேன்; பிறகு மறுபடியும் நண்பரின் பரந்த தோட்டத்தைச் சுற்றுவதற்குப் புறப்பட்டேன்.

தோட்டத்தைச் சுற்றிக் கொண்டு நான் திரும்பி வரும்போது இருட்டிவிட்டது. என் நண்பருடைய பங்களாவின் வாசலில் ஒருவர் மோட்டாரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்.

அந்தப் புதிய விருந்தாளியை நண்பர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

“இவர்தான் டாக்டர் ஆனந்த் குமார். இவரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். இவர் பல நூல்கள் எழுதியுள்ளார்” என்று பெருமிதத்துடன் கூறினார் நண்பர்.

ஆம், டாக்டர் ஆனந்த் குமார் எழுதிய நூல்களில் சிலவற்றை நான் வாசித்திருக்கிறேன். ஆனால், அவரை நான் நேரில் சந்திப்பது இதுதான் முதல் தடவை. பல நூல்கள் எழுதிப் பிரபலமாக விளங்கும் அவர் இவ்வளவு இளைஞராக இருப்பார் என்று நான் நினைக்கவே இல்லை.

டாக்டர் ஆனந்த்குமார் என்னைப் பார்த்ததும் அன்புடன் புன்முறுவல் செய்தாரெனினும், அவர் முகத்தில் படர்ந்திருந்த கலக்கத்தையும் சோகத்தையும் நான் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

அவர் வந்த பின் என் நண்பரைக் கூட கவலை ஆட்கொண்டு விட்டது போல் தோன்றியது. ஏனெனில் சாப்பிடும் போது வழக்கமாக உற்சாகத்துடன் பேசும் நண்பர் அன்று அதிகமாகப்



பேசவே இல்லை. டாக்டர் ஆனந்த் குமாரும் மன நிம்மதியின்றி ஊமை போல் உட்கார்ந்திருந்தார். என்னுடன் உறவு கொண்டு பேச டாக்டர் ஆனந்த் விரும்பாதது போல் எனக்குத் தோன்றியது. எனவே, நான் என் அறைக்குச் சென்று, படுத்துக் கொண்டு தூங்கி விட்டேன்.

இரண்டாம் நாள்

மறுநாள் காலையில் நான் எழுந்த போது என் மனம் மிகுந்த உற்சாகத்தில் ஆழ்ந்திருந்தது. முதல் நாள் நான் கண்ட இயற்கைக் காட்சியினாலும்,

நல்ல காற்றினாலும் என் உடல் ஆரோக்கியம் கூட அபிவிருத்தி யடைந்திருப்பது போல் எனக்குத் தோன்றியது.

மறுபடியும் நான் உலாவி விட்டு வருவதற்காக ஏரியை நோக்கிப் புறப்பட்டேன்.

ஏரிக்கரைக்குச் சென்றபோது அங்கு ஒரு படகு இருந்தது. அதைக் கண்டதும் எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. நான் கல்லூரியில் வாசித்துக் கொண்டிருந்தபோது படகு விடுவதில் எனக்குப் பழக்கம் ஏற்பட்டிருந்தது. எனவே, நான் படகில் குதித்து அதை உற்சாகத்துடன் விட்டுக் கொண்டு, ஏரியைச் சுற்றி வந்தேன். ஏரி நடுவில் மூழ்த்திருந்த தாமரைப் புஷ்பங்களையெல்லாம் குழந்தையைப் போல் பறித்து, படகில் வைத்துக் கொண்டேன். படகைக் கரையில் கொண்டு வந்து சேர்த்தபின் ஏரியில் இறங்கிச் சிறிது நேரம் நீந்தினேன்.



எனவே, நான் வீட்டுக்குத் திரும்பி வர நேரமாகி விட்டது. எனக்காக நண்பரும் டாக்டரும் காத்துக் கொண்டிருந்தார்கள். டாக்டர் ஆனந்த் முதல் நாள் இருந்ததைப் போல் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு ஊமையாக இல்லை. சிறிது உற்சாகத்துடனேயே அவர் பேசிக்கொண்டிருந்தார்.

காலை ஆகாரம் சாப்பிட்டபின் டாக்டர் ஆனந்த் தோட்டத்தைச் சுற்றி வருவதற்காகச் சென்றார். அப்போது நானும் நண்பரும் தனியாக இருந்தோம். நண்பர், டாக்டர் ஆனந்த் குமாருக்கு ஏற்பட்டுள்ள மனக் கஷ்டத்தின் காரணத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார் :

"ஐந்து வருஷங்களுக்கு முன் டாக்டர் ஆனந்துக்கும் ஜெனட் என்ற பெயருள்ள ஒரு கல்லூரி மாணவிக்கும் ஏற்பட்ட சாதாரண நட்பு காதலாக முற்றியது. ஒரு சமயம் அந்தப் பெண்ணின் பெற்றோர் டாக்டர் ஆனந்தை அவர்களுடைய வீட்டுக்கு அழைத்திருந்தார்கள். டாக்டர் ஆனந்த் அங்கு சென்றிருந்தபோது, அவரிடம் ஜெனட்டின் பெற்றோர்கள் மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டார்கள். அதிலிருந்து ஆனந்தும் ஜெனட்டும் தாங்கள் கல்யாணம் செய்து கொள்வதில் அவர்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இருப்பதற்கில்லை என்று முடிவு செய்தனர். அதன் பின் அவ்விருவரும் தங்களுடைய திருமணத்துக்கு எவ்விதத் தடையும் இல்லை யென்று எண்ணி, மிகவும் குதூகலமாகவும் சந்தோஷமாகவும் இருந்தனர். கூடியசீக்கிரம் தனக்கும் ஜெனட்டுக்கும் கல்யாணம் நடக்கப் போவதாக ஆனந்த் தம் நண்பர்களிட மெல்லாம் பெருமையுடன் கூறினார். எனக்கும் ஆனந்த் மேற்படி சந்தோஷ சமாசாரத்தைக் கடித மூலம் அறிவித்திருந்தார்.

இச் சந்தர்ப்பத்தில்தான் ஆனந்த் வாழ்க்கையில் ஒரு பேரிடி விழுந்தது. அதாவது கிறிஸ்துவ வகுப்பைச் சேராத ஒருவரைத் தாம் மாப்பிள்ளையாக அடைய விரும்பவில்லை என்று ஜெனட்டின் தந்தை அவருக்கு அறிவித்து விட்டார். அவர் அத்துடன் நிற்கவில்லை. ஆனந்துக்கும் ஜெனட்டுக்கும் உள்ள நட்பைக் கத்திரித்துவிட வேண்டும் என்ற உத்தேசத்துடன், தமது மூத்த மகனை அனுப்பி, கல்லூரியிலிருந்து ஜெனட்டை வீட்டுக்கு அழைத்து வந்து விடுமாறு உத்தரவிட்டார்.

இச் செய்தியால் ஆனந்துக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. மதத்தைக் காட்டிலும் காதல் பெரிதென்றும், மாசற்ற, உண்மையான காதலுக்கு மத சம்பந்தமான தடைகளை விதிப்பது அர்த்தமற்ற காரியம் என்றும் ஆனந்த் ஜெனட்டின் தந்தைக்குக் கடிதம் எழுதினார். நீண்ட காலமாக வளர்ந்துள்ள தங்கள் காதலுக்கு மதத்தின் பெயரால் தடை விதிப்பது தகாது என்றும் சுட்டிக் காட்டினார்.

ஆனால், ஜெனட்டின் தந்தை சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. ஆனந்த் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து விட்டால், அவரைத் தம்முடைய குடும்பத்தில் ஒருவராக வரவேற்கத் தயாராக இருப்பதாக அறிவித்து விட்டார். ஆனந்த் குமார் கிறிஸ்துவ மதத்தை வெறுப்பவர் அல்ல. எனினும், கல்யாணத்துக்காக மதம் மாறுவது தம்முடைய கண்ணியத்துக்கும் சுய மதிப்புக்கும் உகந்ததாக அவருக்குத் தோன்றவில்லை.

அதே சமயம், ஜெனட்டிடமிருந்தும் ஆனந்துக்கு ஒரு கடிதம் வந்தது. ஜெனட் சந்தேகத்துக்கு இடமின்றிப் பட்டவர்த்தனமாகத் தனது கருத்தைத் தெரிவித்திருந்தாள்.

"என் பெற்றோருக்கு விரோதமாக நடந்து கொள்ள நான் விரும்பவில்லை. எனக்காகத் தங்கள் இஷ்டத்துக்கு முரணாக மதம் மாறுவதையும் நான் விரும்பவில்லை. எனவே, இக்கிலையில், நாம் ஒருவரை யொருவர் மறந்து விடுவதே சிறந்தது" என்று ஜெனட் அவருக்கு எழுதி யிருந்தாள். ஏற்கெனவே சோகத்தில் ஆழ்ந்திருந்த ஆனந்



துக்கு ஜெனட்டின் கடிதம் மேற்கொண்டு சகிக்க முடியாத வேதனையைக் கொடுத்தது.

இந்தப் பெரிய அதிர்ச்சியிலிருந்து ஆனந்த் விடுதலை பெற்று, மனச்சாந்தியும் ஆறுதலும் அடைய வேண்டும் என்பதற்காகவே, அவரை நான் இங்கு வரும்படி அழைத்தேன். அவரை இங்கு சில நாட்கள் தங்கியிருக்கச் செய்து, தேறுதல் சொல்லி, அவர் மனத்துக்கு அமைதி ஏற்படும்படி செய்ய உத்தேசித்திருக்கிறேன்.''

இவ்விதம் ஆனந்தைப் பற்றிய வரலாற்றை நண்பர் விவரமாகக் கூறிய பிறகுதான், ஆனந்தின் மன நிலையையும் மௌனத்தையும் என்னால் சரிவர உணர முடிந்தது.

* * *

அன்று மாலை நாங்கள் மூவரும் சேர்ந்து தோட்டத்தில் உலாவச் சென்றோம். முதலில் ஒருவரும் அதிகமாகப் பேசவே யில்லை. ஆனந்தின் மனத்துயரம் எல்லோரையும் ஆட்கொண்டிருப்பது போல் தோன்றியது!

சிறிது நேரத்துக்குப் பின் இயற்கை அழகு நிறைந்த அந்தச் சூழ்நிலையில் ஆனந்த் தம் மனவேதனையை மறந்து சிறிது உற்சாகத்துடன் பேசத் தொடங்கினார்.

தோட்டத்திலிருந்து நாங்கள் இருட்டிய பிறகுதான் திரும்பி வந்தோம். அப்போது நண்பருடைய பங்களாவின் வாசலில் அவரது மோட்டார் நின்றது. அதிலிருந்து ஒரு இளம் பெண் கீழே இறங்கினாள்.

என் நண்பரைக் கண்டதும் அவள் ஓடி வந்து, ''மாமா'' என்று கட்டிக் கொண்டாள்.

நண்பரின் முகம் திடீரென்று மாறியது. அவருக்கு ஒன்றுமே புரிய வில்லை. அவளது வரவை அவர் சிறிதும் எதிர்பார்க்க வில்லை என்பது அவரது முகத்திலிருந்து தெரிந்தது.

''இந்திரா, என் கண்ணே! எப்போது நீ அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்தாய்! அஜித் எங்கே! நீ வருவதாக எனக்கு எழுதக்கூட இல்லையே!'' என்று நண்பர் மிகுந்த பரபரப்புடன் கூறினார்.

''அஜித் எங்கே!'' என்று மறுபடியும் கேட்டார். அந்தக் கேள்விக்கு இந்திரா யாதொரு பதிலும் அளிக்காமல் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

இந்திரா அவருடன் தனிமையில் ஏதாவது சொல்ல வேண்டி யிருக்கும் என்று எண்ணி நானும் ஆனந்தும் அந்த இடத்தை விட்டுச் சென்றோம்.

ஆனந்தின் முகம் மறுபடியும் துக்கம் தோய்ந்ததாக மாறி விட்டது! அவர் மீண்டும் ஊமை போலாகி விட்டார்!

மூன்றும் நாள்

என் நண்பரை நான் நீண்ட காலமாக நன்கு அறிவேன். அவர் பிறர் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து சமயோசிதமாக நடக்கும் உயர்ந்த குணமும் மகத்தான பொறுமையும் உள்ளவர். எதற்கும் கலங்காத சுபாவம் உடையவர். அவர்கூட முதல் நாள் இந்திராவின் நிலையைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்து விட்டார்.

அவரைப் பார்க்கவே எனக்குப் பரிதாபமாக இருந்தது. இந்திரா காலஞ்சென்ற அவரது சகோதரியின் புதல்வி. அவருக்கு வேறு உறவினர் இராததால், இந்திரா மீது அவர் உயிரையே வைத்திருந்தார்.

இன்று காலைதான் நண்பரிடமிருந்து இந்திராவைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். அவளது வரலாற்றின் சாரம் இதுதான்:

இந்திரா மனப்பூர்வமாகக் காதலித்த இளைஞன் அவளைத் துரோகம் செய்து விட்டான். அவன் மீது அவள் வைத்திருந்த தளரா நம்பிக்கை பாழாகி விட்டது.

இந்திராவைக் காதலிப்பதாகக் கூறிய அஜித் சென்ற வருஷம் மேல் படிப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றான். அவனது செலவுக்கெல்லாம் என் நண்பர்தான் பணம் கொடுத்து வந்தார்.


மூன்று மாதங்களுக்கு முன் அஜித் என் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தான். பிரேஸில் நாட்டில் ஓர் அருமையான காப்பித் தோட்டம் விலைக்கு வருவதாயும், எனவே உடனே ஐம்பதினாயிரம் ரூபாயுடன் இந்திராவை அனுப்பி வைக்கும்படியும், அதன் பலனாகத் தன்னுடைய வாழ்வும் இந்திராவின் எதிர்கால வாழ்வும் சீருடனும் சிறப்புடனும் திகழுமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். என் நண்பர் இந்திராவின் பெயருக்குப் பெருந்தொகை பாங்கியில் போட்டிருப்பது அஜித்துக்குத் தெரியும்.

இந்திராவின் எதிர்கால நல் வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்ட நண்பர் அந்தப் பெருந்தொகையுடன் இந்திராவை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

பாவம்! இந்திரா தன் எதிர்கால க்ஷேமத்தைப் பற்றி என்னவெல்லாமோ கனவுகள் கண்டாள். அந்தத் தொகையுடன் அமெரிக்காவுக்குச் சென்றாள். ஆனால் இப்போது!......இப்போது அவள் தனியாக மனம் ஒடிந்து, கையில் காசின்றித் திரும்பும்படி நேர்ந்து விட்டது. அமெரிக்காவில் அவள் கண்ட உண்மை என்ன! அஜித் இந்திரா கொண்டு வந்த பணத்தைத்தான் விரும்பினானே யன்றி, இந்திராவை விரும்பவில்லை.



உல்லாச சவாரிக்கு
உகந்த சைக்கிள்
மட்டற்ற மகிழ்ச்சியும், உல்லாச உடற் பயிற்சியும் பெற ஒரு ஹெர்குலிஸ்-இந்தியா'வில் சவாரி செய்யுங்கள்.
ஹெர்குலிஸ்-இந்தியா
டி.ஐ.சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்.
எல்லா பிரதான வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



The Famous
FOURSOME
OF THE
FUJI
FAMILY!
AT YOUR BECK & CALL
TO SERVE ONE & ALL!
Trade-Mark
Verify the ideal films for picturising ideal subjects on FUJEX quality paper.
FUJI
NEOPAN SS 120 .... Rs. 2. 1. 0
NEOPAN SS 620 .... Rs. 2. 1. 0
NEOPAN SS 127 .... Rs. 1. 14. 0
NEOPAN SS 35 mm.
20 exp. Cartridge ... Rs. 2. 13. 0
32° Sch.
FUJI FILM
The Best From Modern Japan!
SOLE DISTRIBUTORS:
CHOWGULE & CO., (HIND) LTD.
Bombay P.O. Box 1478 New Delhi P.O. Box 486 Calcutta P.O. Box 8943 Madras P.O. Box 1743

வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

கால்கேட் டூத் பவுடர்

மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!

✓ ஒளிவீசும் பற்கள்!

✓ சொத்தை குறையும்!



வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள்:

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ்கொண்டு தேய்க்கவும்.
- பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- எப்போதும் ஈற்றிலிருந்து பல்நுனி நோக்கி தேய்க்கவும்.

பெரிய சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துக

கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!

பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!



சிவகாசி தீப்பெட்டிச் சங்கத்தாரும், சிவகாசி மாஸ்டர் பிரிண்டர்ஸ் கழகத்தாரும் சேர்ந்து ஜனவரி மாதம் 26-ந் தேதி குடியரசு தினத்தை உற்சாகமாகக் கொண்டாடினார்கள். இந்த விழாவுக்கு ராமநாதபுரம் கலெக்டர் ஸ்ரீ விசுவாசம் தம்பதிகள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். கலெக்டர் தம்பதிகளையும் சிவகாசி தீப்பெட்டி, சீனவெடி, அச்சுத் தொழில் ஆகியவற்றைச் சேர்ந்த தொழில் அதிபர்களையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.

அன்று மாலைதான் அவள் ஸ்ரீநகருக்கு வந்தாள். அவள் ஒரு டாக்ஸிக்காகக் காத்துக் கொண்டிருந்த போது, ஏதோ சாமான்கள் வாங்குவதற்காக ஸ்ரீநகருக்குச் சென்றிருந்த என் நண்பரின் டிரைவர் அவளைக் கண்டு, அதே மோட்டாரில் வீட்டுக்கு அழைத்து வந்தார்.

ஓர் இளைஞன், தன்னை முற்றிலும் நம்பி அன்னிய நாட்டுக்கு வந்த தன் காதலியிடம் எப்படி அவ்வளவு மிருகத்தனமாக நடந்து கொள்ள முடியும் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. இந்திராவின் நிலை மிகவும் பரிதாபகரமாகவும் வருந்தத் தக்கதாகவும் இருந்தது. இந்திரா வந்ததிலிருந்து, என் நண்பரின் முகமும் கவலையால் வாடியது.

எனவே, அவர் கவலையைச் சிறிது நேரமாவது மறக்கும்படி செய்ய வேண்டும் என்ற உத்தேசத்துடன், அவரை இன்று காலை என்னுடன் உலாவுவதற்கு வரும்படி வற்புறுத்தி அழைத்தேன்.

இருவரும் வெகு தூரம் சென்றோம். அவருக்கு உற்சாகமூட்டுவதற்காக நான் பல விஷயங்களையும் சம்பவங்களையும் எடுத்துக் கூறினேன். எனினும் நான் செய்த முயற்சிகள் யாவும் தோல்விதான் அடைந்தன. என்னுடைய நண்பருக்கு ஏற்பட்ட கஷ்டத்தில், நான் ஆனந்த்குமாரின் துக்கத்தைக் கூட மறந்து விட்டேன்.

நாங்கள் உலாவி விட்டுத் திரும்பி வந்தபோது, மத்தியானம் இரண்டு மணி இருக்கலாம்.

வந்ததும் நேராகச் சாப்பாட்டு அறைக்குச் சென்றோம். நாங்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்லுமுன், வேலைக்காரன் மெதுவாகக் கதவைத் தட்டினான். நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தோம். பிறகு இருவரும் வேலைக்காரனைப் பார்த்தோம்.

அவன் செய்கை எங்களுக்கு விசித்திரமாகத் தோன்றியது. உள்ளே யார் இருக்கிறார்கள்! கதவு தாளிடப்படாமல் இருக்கும்போது வேலைக்காரன் ஏன் அப்படிக் கதவைத் தட்ட வேண்டும்!

நாங்கள் சிறிது நேரம் வாசற்படியிலேயே நின்றோம். பிறகு கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றோம். உள்ளே நான் கண்ட காட்சி என்னை ஆச்சரியத்தில் மூழ்கும்படி செய்தது. என் வாழ்க்கையிலேயே அதற்கு முன் எத்தகைய சம்பவமும் எனக்கு அவ்வளவு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்ததில்லை.

அதாவது அங்கு இந்திராவும் டாக்டர் ஆனந்த்குமாரும் ஒருவருக்கொருவர் வெகு சமீபத்தில் உட்கார்ந்து கொண்டு, தங்களையே மறந்து பேச்சில் ஆழ்ந்திருந்தனர். நாங்கள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றது கூட, அவர்களுடைய காதுகளுக்குக் கேட்கவில்லை.

இன்னும் ஆச்சரியம் என்னவென்றால், அவ்விருவருடைய முகங்களிலும் சோகத்தின் அறிகுறி கூடத் தென்படவில்லை; அதற்கு மாறாக மகிழ்ச்சியும் உற்சாகமும் தாண்டவமாடின. அவர்களுடைய அந்தரங்கப் பேச்சுக்கு எவ்வித இடையூறும் இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன், நாங்கள் சந்தடி செய்யாமல் கதவை மூடிக் கொண்டு வெளியே வந்து விட்டோம்.

வெளியே வந்த பின் வேலைக்காரன் நிலைமையை விளக்கிக் கூறினான்.

"காலை ஆகாரம் சாப்பிட்டதிலிருந்து அவ்விருவரும் அங்கேயேதான் உட்கார்ந்திருக்கிறார்கள். முதலில் இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். அதன் பின் இருவரும் சிறிது நேரம் விம்மி விம்மி அழுதார்கள். பிறகு வெகு நேரம் பேசுவதும் அழுவதுமாக இருந்தார்கள். இப்போதுதான் சிறிது நேரமாக இருவரும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்."

இவ்விதம் வேலைக்காரன் கூறியதைக் கேட்டதும், நேற்று முதல் சோகத்தினாலும் கவலையினாலும் வாடியிருந்த என் நண்பரின் அகமும் முகமும் மலர்ந்தன. அதைப் பார்த்த என் மனத்திலும் மகிழ்ச்சி பொங்கியது.

"பார்த்தீர்களா! மரக்கிளைகளைப் போல் மனிதரின் மனமும் ஒட்டிக் கொள்ளக் காலமும் பருவமும் வரவேண்டும் என்று சொன்னேன் அல்லவா!" என்றார் நண்பர் உணர்ச்சியும் ஆனந்தமும் பொங்க.

ஆம், உண்மையே. அவர் ஏற்கெனவே கூறிய தன் தத்துவத்தை அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். ஒரேவித நோயால் வாடிய இரண்டு பேருடைய மனமும் ஒட்டிக் கொள்வதன் மூலம், நோய் ஒழிந்து விடுவதை நேரில் பார்த்த போது, சிருஷ்டியின் தத்துவம் அதிசயிக்கத் தக்கதாகத் தோன்றியது.

வாழ்க்கை வளம் பெற்று சந்தோஷம் ஏற்படுவதற்கு இயற்கை உதவி புரிகிறதேயன்றி, பாதகம் விளைவிப்பதில்லை. இயற்கைக்கு முரணாகச் செல்வோர்தான் வாழ்க்கையின் வளமையையும் இன்பத்தையும் அநுபவிக்க முடியாமற் போகிறது என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்.



அதைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். பிறகு, "ஜன்னல் கதவுகளைச் சாத்தி விட்டால் தப்பிவிடலாம் என்ற எண்ணமா? இனிமேல் வாயைத் திறந்து ஏதாவது நீ பேசினால் உன் வீட்டில் நெருப்பை வைத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்று சீறினான்.

கதவுகளையெல்லாம் நன்றாகச் சாத்திய பின்தான் வத்ஸராஜின் சீற்றம் மிகுந்த கடைசி வாக்கியத்தைக் கேட்டார் லால்ஜி ஸேட்.

குப்பென்று இருள் சூழ்ந்து விட்டது. கோகிலா, ராதா, வத்ஸராஜ் ஆகிய மூவரும் மொட்டை மாடியிலிருந்து திரும்பித் தங்கள் அறைக்கு வந்தார்கள்.

வெளிச்சத்தில் வந்து பார்த்தால் கோகிலாவின் முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்த பரபரப்பையும் பயத்தையும் சொல்லி முடியாது.

39. இரு உள்ளங்கள்

லால்ஜி ஸேட்டை வத்ஸராஜ் கட்டாயம் அடித்தே இருப்பான். ஆனால் கோகிலா அதற்கு இடம் கொடுக்காமல் இடையே குறுக்கிட்டு விட்டாள். அவளுக்குத் தன் தோழி விஜயலக்ஷ்மியின் நினைவு வந்தது. அதனால் லால்ஜி ஸேட்டைப் போனால் போகிறதென்று விட்டு விடுமாறு வத்ஸராஜை வேண்டினாள். வத்ஸராஜ் தன் பிடியைக் கொஞ்சம் தளர்த்தினதுதான் தாமதம்; லால்ஜி ஸேட் செத்தோம் பிழைத்தோம் என்று ஓரே ஓட்டமாக ஓடித் தம் வீட்டுக்குள் புகுந்து கொண்டார். கதவை அறைந்து சாத்தித் தாழ்ப்பாளும் போட்டுக் கொண்டார். அடுத்த சில கணங்களுக்கெல்லாம் மாடியில் இருந்த தமது சயன அறையில் நின்று கொண்டு அவர்களைக் கண்டபடி ஏசினார். அதட்டி உருட்டிப் பயமுறுத்தினார்.

"நாளைக்கு இந்த வீட்டில் நீங்கள் யாரும் இருக்கக் கூடாது. வாடகையைத் தம்பிடி பாக்கியில்லாமல் கணக்குத் தீர்த்து வைத்து விட்டு நடையைக் கட்டுங்கள்!" என்று உறுமினார், சோனி நாய் வெகு தூரத்தில் இருந்து குரைப்பது போல!

"டேய் ஸேட்! இன்னும் உனக்குப் புத்தி வரவில்லை. உதை கேட்கிறது. என்ன, மேலே ஏறி வரட்டுமா, பேசாமல் போகிறாயா? இந்தச் சுவரேறிக் குதிக்க எனக்கு வெகு நேரம் பிடிக்காது. தெரிந்ததா?" என்றான் வத்ஸராஜ்.

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் தடதடவென்று தற்காப்பாக ஜன்னல் கதவுகள் சாத்தும் சத்தம் கேட்டது. வத்ஸராஜ்

சில மணி நேரத்துக்குள்ளாக, வாழ்க்கையில் உள்ள சங்கடங்கள் அனைத்தும் அவளை ஏகமாகச் சூழ்ந்து கொண்டு விட்டன. ஜகதீஷ் இல்லாத வருங்காலம் அவளெதிரே பயங்கரமாக உருவெடுத்து நின்றது. இனி என்ன செய்வாள் அவள்? இது தானே புரியாத பெரிய பிரச்னை!

அவள் முகத்தில் இடையறாமல் முறுவலித்துக் கொண்டிருக்கும் மலர்ச்சி—எப்பொழுதும் பச்சிளம் பாலகர்களை நினைவூட்டும் கள்ளங் கபடமற்ற சிரிப்பு—எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. கோகிலாவின் மாசு மறுவின்றிப் பளிச்சிடும் கண்களில்—அழகுக்கு அழகு செய்யும் வகையில் அமைந்த கண்களில் நிழலாடிக் கொண்டிருந்த ஜீவ ஒளி நிமிஷத்தில் மறைந்து விடவே, விழிகள் களையிழந்து காணப்பட்டன. அதைக் கவனித்த ராதா, "என்ன, அண்ணி! முகம் இப்படி ஓரேயடியாக வெளிறி விட்டதே!" என்று கேட்டாள். அவள் உள்ளத்தில் உருவான பதற்றம் குரலிலும் காணப்பட்டது.

அதைக் கேட்டதும் கோகிலா சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டாள்; சிரமப்பட்டு முகத்தில் முறுவலை வரவழைத்துக் கொண்டாள். "இல்லையே! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே? இதோ பார்!" என்று சொன்னாள். ஆனால் அதற்குள்ளாகவே, அவள் முகத்தில் முகிழ்த்திருந்த முறுவல் மறுபடியும் மறைந்து விட்டது. விழிகளில் நீர் சோர்ந்து பளிச்சிடுவதை ராதா விளக்கொளியில் கண்டாள். அவள் படும் துயரத்தைக் காண அவள் மனம் சகிக்க

வில்லை. எனவே, ஆறுதல் சொல்லும் நோக்கத்துடன், "கஷ்டம் வந்தது வந்து விட்டது. பொறுத்துக் கொண்டுதானே ஆகவேண்டும்? வருந்தி என்ன பயன்? கஷ்டங்கள் இப்படித் திடுதிப்பென்று வருவது இந்த உலகத்துக்கு ஒன்றும் புதிதில்லையே!" என்றான்.

அவன் சொன்ன அந்த ஆறுதல் மொழிகள் கோகிலாவின் இருதயத்தை இன்னும் அதிகமாக நிலைகுலுங்க வைத்து விட்டன. அவள் விழிகள் ஒளிவு மறைவின்றிக் கண்ணீரைப் பெருக்கத் தொடங்கி விட்டன.

"கஷ்டம் என்றால் என்னவென்றே இன்றுவரை நான் அறியேன். அவர் என்னோடு இருந்த வரை எனக்கு எந்தக் குறையும் குறைவாகத் தெரியவில்லை; நிறைவாகத்தான் தெரிந்தது. நான் என் கணவரைக் கரம் பற்றிய நாளிலிருந்து இன்றுவரை பிரிந்திருந்ததில்லை. இன்றுதான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை எதிர்பார்க்காத எனக்குப் பெரும் கஷ்டமாகத் தோன்றுகிறது. என்ன சொல்வேன், ராதா?" என்றவள் கேவிக்கேவி அழத் தொடங்கி விட்டாள்.

"அண்ணி! என்னை எடுத்துக் கொள்ளுங்கள். என் நிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள். தந்தைக்கு எதிராக நின்று இவரை மணம் செய்து கொண்டேன். இரண்டு மூன்று வருஷங்கள் இன்பமாகத்தான் ஓடின. அப்புறம் இவர் தலையில் சிறைத்தண்டனை எழுதியிருந்தது. எங்களுக்கு என்ன சொத்தா, சுதந்திரமா? மேலே வானம், கீழே பூமி என்ற நிலையில்தான் நாங்கள் இருந்தோம். நான் பிச்சை வாங்கித் திரிவதைப் பார்த்த அண்ணாவுக்கு என்மேல் இரக்கம் பிறந்தது. எனக்கு அடைக்கலம் அளித்துக் காத்தார். இப்பொழுது கடவுள் கருணை கூர்ந்து இவரை என்னிடம் திருப்பித் தந்தார். ஆனால் அண்ணாவை எங்கோ மறைத்து விட்டார். அண்ணாவைத் தேடிக் கொண்டு வரச் செய்யாமல் நான் தூங்க மாட்டேன். நீர்கூடக் குடிக்க மாட்டேன்!" என்றாள் ராதா.

வத்ஸராஜ் வெளி வராந்தாவில் நின்று கொண்டு சிறைச்சாலையின் சித்திரத்தை மனத்திரையில் புதுப்பித்துக் கொண்டிருந்தான். இந்தச் சொற்களைக் கேட்டதும் அவர்கள் இருக்கும் அறைக்குள் வந்தான். பிறகு ராதாவைப் பார்த்து, "அண்ணியை





தஞ்சை சர்க்கார் அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் அநாவது கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் சார்பாகக் குடியரசுதின விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவின் திருவுருவப் படத்தை அலங்கரித்து வைத்து, ஓங்கி வளர்ந்த கம்பத்தின் மீது தேசியக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டு அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் அணி அணியாக நிற்பதைக் காணலாம்.

நாம் நம்மோடு அழைத்துப் போய் வைத்துக் கொள்வோம். உங்கள் இருவரையும் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு எசமானரை எங்கிருந்தாலும் நான் தேடிக் கொண்டு வந்து விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்!'' என்றான்.

ஒருநாள் அவனைப் பார்ப்பதற்காக ஜகதீஷ் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தான் அல்லவா? அப்பொழுது வத்ஸராஜ் அவனைச் சேர்ந்தாற் போல் ஐந்தாறு நிமிஷங்கள் பார்த்திருந்தான். அதனால் அவனுக்கு ஜகதீஷைக் கண்டு பிடிப்பதில் அதிக சிரமம் ஏற்படாது என்றே தோன்றிற்று. ஜகதீஷ் அவன் கண்களில் எசமானராகவேதான் தோற்றமளித்தான். அதனால்தான் அவன் ஜகதீஷைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது எசமானர் என்றான்.

"அது சரிதான். நம்மோடு வைத்துக் கொள்ளாமல் நடக்குமா? நீயும்தான் வந்து விட்டாய். அண்ணாவைத் தேடிக் கண்டு பிடித்தபின் அண்ணியையும் அண்ணாவையும் குறைந்தது இரண்டு மாதங்களாவது நம்ளரில் வைத்துக் கொள்ளவேண்டும். என்ன, நான் சொல்வது புரிந்ததா?'' என்றான் ராதா.

"நீ எந்த பாஷையில் பேசுகிறாய், சொல்லுவது புரியாமல் இருப்பதற்கு?'' என்று வத்ஸராஜ் கேலி செய்தான்.

அதற்குள்ளாகக் கோகிலா இடைமறித்து, "வேண்டாம், ராதா, வேண்டாம்! நான் இங்கேயேதான் இருக்கப் போகிறேன்! என்னை வற்புறுத்தாதே!'' என்றாள்.

"இம்மாதிரியெல்லாம் நீங்கள் பேசினால் கொலைப் பட்டினி கிடந்து நான் உயிரை விட்டு விடுவேன். என் ஒரே பிள்ளையான அமரன்மீது ஆணைவைத்துச் சொல்கிறேன்!'' என்று ஆரம்பித்து விட்டாள் ராதா.

"நானும் அப்படித்தான்!'' என்று ஆரம்பித்தான் வத்ஸராஜ்.

"அடடா! என்ன ராதா, இது! தத்துப்பித்து என்று பேசுகிறாயே! இப்படியெல்லாமா பேசுவார்கள்? ஒருவர் மேலும் ஆணை-கீணை வைக்காதே. கடவுள் உன்னை நன்றாக வைப்பார்!'' என்றாள் கோகிலா.

அந்தக் கிராம்ய தம்பதிகளின் மாசு மறுவற்ற மனப்பான்மையைக் கண்ணுற்ற அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

"எசமானர் இல்லாமல் உங்களை இங்கே தனியாக இருக்க விடவே மாட்டேன். அவசியம் ஏற்பட்டால் அவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் திருட்டுக் குற்றத்தை என் தலைமீது போட்டுக் கொள்ளத் தயார். இது ஒரு பெரிய காரியமா? இன்னும் ஒரு நாலு வருஷம் கம்பி எண்ணிவிட்டு வந்து விட்டால் போயிற்று!'' என்றான் வத்ஸராஜ் சுலபமாக.


"நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்ட கோகிலா, வியப்பினால் விரிந்த வாயை மூடவே இல்லை. வியப்புக்கு மேல் வியப்பை அளிக்கும் நிகழ்ச்சிகளைக் காணும்பொழுது ஒருவர் எப்படி வாய் மூடமுடியும்?

வத்ஸராஜுக்கு ஜகதீஷ் என்ன பெரிய உபகாரம் செய்து விட்டான்? எதற்காக அவன் ஜகதீஷுக்குப் பதிலாக மறுபடியும் நான்கு நீண்ட வருஷங்கள் சிறை புகத் தயாராக வேண்டும்? ஒரு நாள் அவன் வத்ஸராஜைப் பார்த்து வருவதற்காகச் சிறைச்சாலைக்குச் சென்று வந்தான். அவன் மனைவி ராதாவுக்குத் தன் வீட்டில் இடம் அளித்துச் சில நாட்கள் சம்ரக்ஷித்தான். இதற்காக நினைக்கக்கூட முடியாத இவ்வளவு பெரிய தியாகமா? என்ன விந்தை!


கோகிலா வியப்புத் தாண்டவமாட வத்ஸராஜை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள். அவள் கண்களில் அவன் நாகரிகம் தெரியாத நாட்டுப்புறத்தானாகத் தோன்றவில்லை; பண்புடன் பழகத் தெரியாத பட்டிக்காட்டானாகப் படவில்லை. அவன் புஜபல பராக்கிரமம் வாய்ந்த எழில் மிகு வீரனாகத் தோற்றமளித்தான். தியாகத்தின் தெய்வீக ஒளி அவன் முகத்தில் தேஜோமயமாகச் சுடர்

எவ்வளவு காலம் உழைக்கிறது...

என்ன புதுமை!



501 ஸோப்பைக் கொண்டு சலவை செய்யப்படும் துணி மணிகள் நீடித்துழைப்பதுடன் புதுமையும் அடைகின்றன. இந்த ஸோப்புகள் பார்களாகவும், சிறு தூள்களாகவும் விற்கப்படுவது தவிர, 501 ஸ்பெஷலுமாகக் கிடைக்கும். இவை பணம் மிச்சப்படுத்துகின்றன, துணிகளை மிகவும் பாதுகாக்கின்றன, வீட்டுச் சலவை வேலையை உங்களுக்கு எவ்வளவோ சுலபமாகவும் செய்கின்றன.



501

சலவை ஸோப்புகள்

டாடா தயாரிப்பு

A TATA PRODUCT

இந்திய மூலதனத்தைக் கொண்டு, இந்திய நிர்வாகத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது

FS 8708

விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ராதா வைத்த கண் வாங்காமல் வத்ஸராஜை அன்பு ததும்பும் விழிகளுடன் விழுங்கி விடுபவன் போலப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்பே உருவான கோகிலாவுக்கு அந்தக் குறிப்பை அறிந்து கொள்வது ஒரு சிரமமா?

கோகிலா அதற்குமேல் அந்தப் பேச்சை வளர்த்த விரும்பாமல், "கூடாது, கூடாது! இம்மாதிரி காரியத்துக்கு நான் இடம் கொடுக்க மாட்டேன். அது ரொம்பத் தவறு. உங்கள் மனத்தில் என்ன என்ன வெல்லாம் ஆசைக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்களோ? எனக்காக உங்கள் ஆசைக் கோட்டைகளை ஒருநாளும் தகர்த்துக் கொள்ளக் கூடாது. அப்படிச் செய்வதை நான் விரும்ப மாட்டேன். தெரிந்ததா?" என்றாள்.

"விடுங்கள். இந்தப் பேச்செல்லாம் இப்பொழுது வேண்டாம். நாளைக் காலையில் எங்களோடு புறப்படுங்கள். ஏழைகளான எங்கள் கோட்டையைப் பார்க்கக் கூடாதா? அங்கே உங்களுக்கு ஒரு கஷ்டமும் ஏற்படாமல் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். யோசிக்காதீர்கள்!" என்றான் வத்ஸராஜ்.

கோட்டை என்ற சொல்லைச் சொல்லும் பொழுதே அவனுக்குப் பெருமை உணர்ச்சி பொங்கியது. ஒரு காலத்தில் அவனுடைய முன்னோர்களின் கீர்த்திச் சின்னமாக விளங்கியது அந்தக் கோட்டை. இன்று அது க்ஷீணித்துக் கிலமாகிக் கிடந்தது. பெயருக்குக் கோட்டை என்று சொல்லக் கூடிய வகையில் அவரைப் பந்தலாகத் திகழ்ந்த வீடுதான் இப்பொழுது அங்கே மிகுந்திருந்தது. அந்த வீடும் தமக்குப் பந்தகம் வைக்கப் பட்டு விட்டதாகக் கிரிதர ஸேட் அவனுக்குச் சொல்லியிருந்தார். அதோடு அவன் சிறைத் தண்டனை யடைந்து விட்டு எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் திரும்பிக் கொண்டிருந்தான். இவ்வளவு இருந்த பொழுதிலும் தன் கோட்டையைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் அவன் உள்ளம் பெருமிதத்தினால் பூரித்து விம்மியது.

கோகிலாவுக்கும் வேறு வழி தோன்றவில்லை. ஜகதீஷும் இல்லை. அவள் தனியாகத்தான் இருக்க வேண்டும். லால்ஜி ஸேட்டின் நோக்கம் கெட்டிருக்கிறது என்பதையும் அவள் நேரில் கண்டிருந்தாள். தம் இஷ்டத்துக்கு இணங்காத அவளை அவர் தம் வீட்டில் இருக்க விடுவாரோ, என்னமோ? அப்படி விட்டாலும் அபலையான அவள் அங்கே தனியாக எப்படி இருப்பது? இதையெல்லாம் நிரயோசித்த கோகிலாவுக்கு வத்ஸராஜுடன் அவன் கிராமத்துக்குப் போவது சரியென்றே பட்டது. எனவே, அவனுடன் அவர்கள் கிராமத்துக்கு வருவதாக அவள் ஒப்புக் கொண்டு விட்டாள்.

இரவு அதிகரித்துக் கொண்டேயிருந்தது. எத்தனை நாழிகைதான் இப்படி உட்கார்ந்திருப்பது? அவள் உட்கார்ந்திருந்தாலும் மற்றவர்களும் எதற்காக உட்கார்ந்திருக்க வேண்டும்? அதனால் கோகிலா அவர்களைப் பார்த்து, "நான் இந்த வெளியறையிலேயே படுத்துக் கொள்கிறேன். எனக்கு உள்ளே படுத்துக் கொள்வதென்றால் பயமாயிருக்கும்!" என்றாள்.

"எனக்கு யாரிடமும் பயம் இல்லை. நான் உள்ளே படுத்துக் கொள்கிறேன்!" என்றான் வத்ஸராஜ். அவனோ கள்ளங்கபடு சிறிதும் அறியாதவன். சிறைச்சாலையின் கட்டாந்தரையில் படுத்துத் தூங்கிப் பழக்கப் பட்டவன். படுக்கைக்கு வழிவகை செய்வதில் சிற்சில சமயம் வீட்டில் உள்ள பெண்மணிகள் எத்தகைய சாமர்த்தியத்தையும் மேதையையும் கையாள்கிறார்கள் என்பது அந்த அப்பாவிக்கு எப்படித் தெரியும்? கோகிலா உள்ளே உறங்கப் பயப்படுகிறாள் என்றுதான் அவன் எண்ணினான். அதனால் முந்திரிக் கொட்டையாக முந்திக்கொண்டு, தான் உள்ளே படுத்து உறங்கத் தயார் என்று சொன்னான்.

பாம்பின் கால் பாம்பு அறியும் என்பது போல் பெண்ணின் உள்ளத்தைப் புரிந்து கொள்வதில் பெண்கள்தானே தேர்ந்தவர்கள்! கோகிலாவின் உட்கருத்தைப் புரிந்து கொண்ட ராதா கண்ஜாடை காட்டி அவளைக் கடிந்து கொண்டாள். கோகிலா இலேசாகச் சிரித்தாள். பிறகு வத்ஸராஜ் பார்க்காமல் இருக்கும் சமயமாகப் பார்த்து ராதாவுக்கெதிரே விரல்களை அசைத்து 'மாட்டிக் கொண்டாயா?' என்று கேட்பவளைப் போல் ஜாடை காட்டினாள்.

ராதா கோபத்துடன் விடுவிடு வென்று வேகமாக நடந்து சென்று தன் படுக்கையை எடுத்து வந்து கோகிலாவுக்கு அருகிலேயே போட்டுக் கொண்டாள். வத்ஸராஜ் மிகவும் களைத்துப்போயிருந்ததனால் உடனே உள்ளே போய்ப் படுத்து விட்டான்.

சிறிது நேரத்துக் கெல்லாம், "இன்று ஏனோ தெரியவில்லை, எனக்கு ரொம்பக் களைப்பாயிருக்கிறது!" என்றாள் கோகிலா.

"அப்படியானால் நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் காலைப் பிடித்து விடுகிறேன்!" என்றாள் ராதா.

"அதெல்லாம் வேண்டாம். ஒரு காரியம் எனக்காகச் செய்வாயா?" என்றாள் கோகிலா.

"என்ன?"

"என் போர்வை அந்த அறைக்குள்ளே இருக்கிறது. கொஞ்சம் எடுத்து வந்து எனக்குப் போர்த்திவிடேன்!" என்றாள் கோகிலா.

இதுவரை ராதாவுக்குக் கோகிலா இம்மாதிரி காரியங்கள் கொடுத்ததில்லை. 'உண்மையாகவே கோகிலாவுக்குக் களைப்பு மேலிட்டிருக்க வேண்டும். அதனால்தான் இப்படிச் சொல்லுகிறாள்!' என்று எண்ணிய ராதா, "அதற்கென்ன? இதோ போய்க் கொண்டு வருகிறேன்!" என்றாள்.

அதைச் சொன்னவள் உடனே எழுந்து போர்வையை எடுத்து வருவதற்காக அறைக்குள் சென்றாள். போர்வையை எடுத்துக்

கொண்டு திரும்பியவளுக்கு அறைக் கதவு வெளிப்புறமாகத் தாளிடப்பட்டு விட்டது என்பது புலனாகியது. அவனும் வத்ஸராஜனும் ஒரே அறைக்குள் இருந்தனர். வேண்டுமென்றே கோகிலா இந்தச் சூழ்ச்சி செய்து, தன்னை அடைத்து விட்டதாகத் தோன்றியது ராதாவுக்கு. அது அவளுக்கு ஒரு விதத்தில் நல்லதாகவும் பட்டது. இருந்தாலும் அவள், "அண்ணி, போர்வை கொண்டு வந்திருக்கிறேன். கதவைத் திறவுங்கள்!" என்றாள்.

"கதவைத் திறக்க என்னால் இப்பொழுது எழுந்திருக்க முடியாது!" என்று கோகிலா வெளியிலிருந்தவண்ணமே பதில் அளித்தாள்.

"இதென்ன வேடிக்கை? நான் பெண் பிறந்த. வேடிக்கை? கதவைத் திறக்கிறீர்களா, இல்லையா?" என்று கடிந்தாள் ராதா.

"உன் புருஷன்தான் பலசாலியாயிற்றே! அவரிடம் சொல்லிக் கதவை உடைத்து உன்னை வெளியே அனுப்பச் சொல்லேன். களைத்துக் கிடக்கும் என்னை எதற்காக எழுந்திருக்கச் சொல்கிறாய்?" என்றாள் கோகிலா.


"கதவைத் திறக்கா விட்டால் அப்புறம் நான் உங்களோடு பேசமாட்டேன்!"

"நீ என்ன? நானும்தான் இன்று இரவு முழுவதும் உன்னோடு பேசப் போவதில்லை. ராதா, பிழைத்துக் கிடந்தால் பார்த்துக் கொள்வோம். போய்ப் பேசாமல் படுத்துத் தூங்கு!" என்று சொன்ன கோகிலா 'கட கட' வென்று நகைத்தாள்.

கோகிலா என்ன சொன்னாலும் கதவைத் திறக்க மாட்டாள் என்பது ராதாவுக்கு விளங்கி விட்டது. வேறு வழி யில்லாமல் வெட்கத்துடன் திரும்பினாள்.

பல ஆண்டுகளாகப் பிரிந்து துயர்ப்பட்ட காதல் தம்பதிகளைத் தனிமையில் சந்திக்குமாறு செய்து விட்ட பெரும் மகிழ்ச்சியுடன் கோகிலா ஊஞ்சலில் போய் உட்கார்ந்தாள்.

தினமும் கோகிலா அதே ஊஞ்சலில் தான் ஜகதீஷோடு உட்காருவது வழக்கம். ஜகதீஷ் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்தால், திடீரென்று அவன் வேடிக்கையாக ஊஞ்சலை நிறுத்தி விடுவாள். அதையும் மீறி அவன் ஊஞ்சலை ஆட்ட முற்பட்டால், தன் கால்களால் அவன் கால்களை அழுத்தி மிதித்து அவனை ஊஞ்சல் ஆடவொட்டாமல் அடித்து விடுவாள். அக்காரியத்துக்கு என்ன என்னவெல்லாம் இடைஞ்சல் செய்யலாமோ, அவ்வளவையும் செய்து விடுவாள். ஜகதீஷைக் காட்டிலும் தனக்குத்தான் அதிக பலம் என்று கூறி அவன் விரல்களை மடக்குவாள்; கைகளை முறுக்குவாள்; ஒடிப்பாள். சுருண்டு மடிந்து அழகாகப் படிந்திருக்கும் அவன் கேசங்களைச் சரி செய்கிறேன் பேர்வழி என்று சொல்லிக் கைகளால் கோதிக் கலைத்து விடுவாள். 'நம்மில் யாரால் அதிக நேரம் கண் கொட்டாமல் இருக்க முடிகிறது,



கல்கத்தா தென் இந்திய சங்கத்தைச் சேர்ந்த சென்னை யூனியன் பெண்கள் பள்ளிக்கூடத்தில் குடியரசு தினக் கொண்டாட்டம் கோலாகலமாக நடந்தது. குடியரசு தினத்தில் மாணவர்கள் கலந்துகொண்டு கொடி வணக்கம் செய்கிறார்கள்.

பார்த்து விடுவோம்!' என்று விசித்திர நிபந்தனையொன்றை விதித்து அவனுடன் போட்டி போட்டுக் கொண்டு இமை கொட்டாமல் நேரம் போவது தெரியாமலே உட்கார்ந்திருப்பாள். அவளுடைய அசையாத விழிகளைக் கண்டு அவன் அசந்து போய் விடுவான். ஜகதீஷின் மாநிறத்துக் கன்னங்களுக்குத் தன்னால் ரோஜாச் சிவப்பு நிறம் ஏற்ற முடியும் என்று சொல்லி, அவன் கன்னத்தோடு கன்னமாகத் தன் கன்னங்களை ஒற்றுவாள்.

அவளுடைய அந்த வேடிக்கைகள் ஜகதீஷைத் திக்கு முக்காடித் திணற வைத்து விடும். 'அடடா! நீங்கள் மிகவும் களைத்துப் போய் விட்டீர்கள் போலிருக்கிறதே!' என்று அன்பு ஒழுகக் கூறி அவனை அப்படியே ஊஞ்சலில் படுத்துக் கொள்ளச் செய்வாள். பிறகு ஊஞ்சலை இதமாக ஆட்டியவாறே தேனினும் இனிய தன் குரலில் இரண்டொரு பாட்டுக்களைப் பாடுவாள். அவளுடைய அந்தத் தீஞ்சுவைக் கீதத்தைக் கேட்டவாறே ஜகதீஷ் மெய்ம்மறந்து போய்க் கண் அயர்ந்து விடுவான்.

இதுபோல் காதலொருமித்த அந்த இளம் தம்பதிகள் எத்தனை எத்தனை இன்பக் கேளிக்கைகள் புரிந்திருப்பார்களோ? யார் கண்டு கணக்கிட்டுக் கூறுவார்கள்?

இருள் சூழ்ந்த இரவில் எத்தனை எத்தனை எண்ணற்ற தாரகைகள் வானவெளியில் பளிச்சிட்டுப் பிரகாசிக்கின்றன! அதே போல் கோகிலாவின் இருதயவானில் எத்தனை எத்தனையோ எண்ணற்ற நிகழ்ச்சிகள் எழுந்து நின்றன. ஜகதீஷுடன் ஆனந்தமாகப் பொழுதைப் போக்கிய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வரவே, அவள் மனத்தை வேதனை மேலும் கசக்கிப் பிழிந்தது. ஜகதீஷ் இல்லாத காரணத்தினால் அன்று ஊஞ்சலும்



"இவர்கள் ஆவடி வைபவத்தைப் பார்த்து ஆச்சரியத்தினால் மூக்கின்மேல் விரல் வைத்தவர்கள்!"
"அது சரி! வைத்த விரலை இன்னமும் எடுக்கவில்லையே, அதைச் சொல்லுங்கள்!"

வெறிச்சோடிக் காணப்பட்டது. எனவே, கோகிலா எதையோ பறி கொடுத்து விட்டவள் போல் முகம் வெளிறி உட்கார்ந்திருந்தாள். ஆம்! அவள் அப்பொழுது ஜகநீனைப் பறி கொடுத்து விட்டுத்தானே தனிமையில் துயரம் வாட்ட உட்கார்ந்திருந்தாள்!

ஜகநீஷின் நிலையை வருடியவாறு அவனைத் தூங்கச் செய்வதற்காக எப்பொழுதோ பாடிய பாட்டின் முதல் அடி அவளுக்கு அச்சமயம் திடீரென்று நினைவு வந்தது.

"என்னை மறந்து எங்கு சென்றனையோ, என் ஆருயிரே!" என்னும் பொருள் தரும் அவ்வடியைச் சோகக் குரலில் அவள் மெதுவாக இசைக்கவும் ஆரம்பித்தாள்.

அதே சமயம் வெளிக் கதவை யாரோ 'தடதட'வென்று தட்டும் சத்தம் கேட்டது. லால்ஜி ஸேட்தான் மறுபடியும் திரும்பி வந்து விட்டாரோ என்று அவளுக்குப் பயம் உண்டாயிற்று. ஆயினும் துணிச்சலோடு, "யார் அது?" என்று கேட்டாள்.

"நான்தான்!"

அவளுக்கு அறிமுகமான விஜயலக்ஷ்மியின் குரல் வெளியிலிருந்து வந்தது.

எதிரே மனைவி இருந்து விட்டால் கணவன் எத்தனையோ விஷயங்களில் அடக்கத்தை அனுஷ்டிக்கிறான். தனியே வரும் ஆடவனைக் காட்டிலும் ஒரு பெண்ணோடு வரும் ஆடவன் அத்தனை பயத்துக்கு உறைவிடமானவனாகத் தோன்றுவதில்லை. விஜயலக்ஷ்மி வந்து விட்டதனால், லால்ஜி ஸேட்டைப் பற்றிய பயம் கோகிலாவுக்குக் கொஞ்சம் குறைந்து விட்டது. விஜயலக்ஷ்மியோடு லால்ஜிஸேட் வந்திருந்தாலும் பாதகமில்லை என்ற தைரியத்துடன் கோகிலா எழுந்து சென்று கதவைத் திறந்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்தது போல் அப்பொழுது விஜயலக்ஷ்மியோடு லால்ஜி ஸேட் வரவில்லை. விஜயலக்ஷ்மி மட்டும் தனியாகவேதான் வந்திருந்தாள்.


அவள் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக, "உன் கணவர் சௌக்கியமாக இருக்கிறார். இதைச் சொல்லிப் போகத்தான் இந்த அவேளையில் நான் வந்தேன். உன்னிடம் உடனே இதைச் சொல்லுமாறு அவர்தான் என்னிடம் கேட்டுக் கொண்டார்!" என்றாள்.

அந்தச் செய்தியைக் கேட்டதும் கோகிலாவின் மனவருத்தம் அப்போதைக்கு மறைந்து விட்டது. குரலில் ஆவலை வரவழைத்துக் கொண்டு, "அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்?" என்று கேட்டாள்.

"உனக்கு எப்பொழுது பார்த்தாலும் 'எங்கே இருக்கிறார், எங்கே இருக்கிறார்?' என்ற கேள்விதானா?" என்று அன்புடன் கடிந்தவாறே கோகிலாவின் கையைப் பற்றிக் கரகரவென்று இழுத்துக் கொண்டு விஜயலக்ஷ்மி ஊஞ்சலை அடைந்தாள். அதில் தானும் உட்கார்ந்து கொண்டு பக்கத்தில் கோகிலாவையும் அழைத்து உட்கார வைத்துக் கொண்டாள்.

ஜகநீஷின் சமாசாரம் விஜயலக்ஷ்மிக்கு எப்படித் தெரிந்தது என்று கோகிலாவுக்கு வியப்பாக இருந்தது; யோசிக்க யோசிக்கப் புரியாத புதிராகவும் இருந்தது. எனவே, "ஏன், விஜயா! அவர் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள்.

"ஏன்? எனக்குத் தெரிந்ததில் உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? உன் கணவர் உன்னைத் தவிர வேறு யாரிடத்திலும் தன் அந்தரங்கத்தைச் சொல்ல மாட்டார் என்று தானே நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய்? இன்று என்னிடம் சொல்லி விட்டாரே!" என்று குழந்தைகளைப் போல் மகிழ்ச்சி எக்களிக்கக் கூறினாள் விஜயலக்ஷ்மி. சிறிது நேரமாவது ஜகநீஷோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததே என்ற மட்டற்ற மகிழ்ச்சி அவள் உள்ளத்திலும் உடலிலும் ஒருங்கே பரவிப் புளகாங்கிதத்தை ஏற்படுத்தியது. (தொடரும்)


·SANFORIZED·
REGD TD MK
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப்
பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
-எத்தனை முறை
சலவை செய்தாலும்
முக்கிய கவனிப்பு
உங்கள் தையல்காரரிடம் சொல்லுங்கள்:
"இது 'சான்பொரைஸ்ட்' துணி
–உடை தைப்பதற்குமுன்
நனைக்க வேண்டாம்"

சக்கரவர்த்தித் திருமகன்

52. துக்க சாகரம்

இஷ்டப்பட்ட வடிவம் எடுத்துக் கொள்ளும் சக்தியைப் பெற்றிருந்த மாரீசன் மானாக வந்து ஏமாற்றி சீதையின் ஆசையைக் கிளப்பி அதன் காரணமாகத் தன்னை வெகுதூரம் இழுத்துக் கொண்டு போய், அங்கே தன்னுடைய அம்புக்கு இரையாகி உயிர் விடும்போது தன் சுய உருவத்தை வெளிப்படுத்தி 'ஹா லக்ஷ்மணா நான் செத்தேன்' என்று பொய்க் குரலில் அரக்கன் பலமாகக் கத்தினதையும், — எல்லாவற்றையும் நினைத்து ராமன் கவலை கொண்டான்.

"ஓகோ! இது பெரிய மோசம்; இந்த மோசத்தால் லக்ஷ்மணன் ஏமாற்றமடைந்து சீதையைத் தனியாகக் காட்டில் விட்டு விட்டு என்னைத் தேடிக் கொண்டு வந்து விட்டிருந்தால் பெரிய அபாயமாகுமே! சீதையை அபகரித்துக் கொண்டு போகவோ, கொன்று தின்று விடவோ அரக்கர்கள் இந்த மோசத்தைச் செய்திருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. 'ஹா செத்தேன்' என்று என்னுடைய குரலைக் கேட்டதாக எண்ணி உடனே சீதை பயந்து லக்ஷ்மணனை என்னிடம் அனுப்பி விடுவாள். நரிகள் அவலட்சணமாக ஊளை யிடுகின்றன. பறவைகளும் மிருகங்களும் துரதிருஷ்டக் குறிகளைக் காட்டுகின்றன. உள்ளத்தில் தைரியத்துக்குப் பதில் நடுக்கமாக இருக்கிறது. நான் காண்பதெல்லாம் அபசகுனங்களாகவே இருக்கின்றன. பெரிய ஆபத்தை அடைவேன் என்றே நினைக்கிறேன்."

இவ்வாறு தனக்குள் கவலைப் பட்டுக் கொண்டு ராமன் மிக வேகமாக ஆசிரமத்தைநோக்கிச் சென்றான். எதிரே லக்ஷ்மணன் வருவதைக் கண்டான். அவனைக் கண்டதும்,

"ஐயோ! நான் நினைத்தவாறே ஆயிற்று" என்று கத்தினான்.

"சீதையைக் காட்டில் தனியாக விட்டு விட்டு வந்து விட்டாயே, லக்ஷ்மணா! அவளை ராக்ஷசர்கள் கொன்று தின்று விடுவார்கள் என்பது நிச்சயம். தவறான காரியம் செய்து விட்டாயே! ஜானகி தப்ப மாட்டாள்!" என்று ராமன் லக்ஷ்மணனுடைய கையைப் பிடித்துக்கொண்டு மிக வருத்தத்துடன் சொன்னான்.

"ஆசிரமத்தில் அவளைக் காணாவிடில் லக்ஷ்மணா! நான் இறப்பேன், நிச்சயம். நீதான் திரும்ப அயோத்திக்குப் போய் விஷயத்தைச் சொல்வாய். ஐயோ, கௌசல்யை துக்கத்தை எப்படிப் பொறுப்பாள்? கைகேயி விரும்பியதைப் பூர்த்தி செய்து விட்டாயே, லக்ஷ்மணா? ராக்ஷசர்களுக்கு நம் பேரில் இருந்துவந்த பகையைப் பேதை சீதையின் மேல் காட்டி இதற்குள் அவளைக் கொன்று தின்று விட்டே யிருப்பார்கள்! அவளைத் தனியாய் எப்படி நீ விட்டு விட்டு வந்தாய்? மாரீசன் போட்ட சத்தத்தைக் கேட்டு ஏமாந்து போனீர்களே! நான் இப்போது என்ன செய்வேன்? சீதையை நான் காணப் போவதில்லை. அரக்கனுடைய சதி வெற்றி யடைந்து விட்டது. நான் சாவது நிச்சயம். உன்னை நம்பி சீதையைப் பார்த்துக் கொள் என்று அவளை உன்னிடம் ஒப்புவித்து வந்தேன், நீ ஏன் அவளை விட்டு விட்டு வந்து விட்டாய்? இப்படிச் செய்யலாமா?" என்று பசியாலும் தாகத்தாலும் துக்கத்தாலும் கோபத்தாலும் வாட்டப்பட்ட ராமன் பலவாறு கதறினான். கோபம் மேலிட்ட அண்ணனைப் பார்த்து லக்ஷ்மணன் கண்களில் நீர் பெருகப் பேசலானான்:

ராஜாஜி

"அண்ணா! நான் என்னசெய்வேன்? 'ஹா சீதா! ஹா லக்ஷ்மணா!' என்ற கூக்குரலைக்

கேட்டதும் சீதைக்குப் பெரும் பயம் பிடித்துக் கொண்டு விட்டது. அவள் துடி துடித்து நடுங்கி, 'போ! போ! ஓடு! ஓடு! ஏன் நிற்கிறாய்?" என்று என்னை விடாமல் தொந்தரவு செய்து நான் என்ன சொல்லியும் கேட்காமல் என்னைத் துரத்தினாள். 'சீதையே! பயப்பட வேண்டாம். ராமனை இந்த உலகத்தில் எந்த ராக்ஷசனும், எந்தப் பகைவனும் எதிர்த்து வெற்றி பெற முடியாது. இது ராமன் குரல் அல்ல. இது மோசம். மூன்று உலகத்திலும் ராமனைக் கொல்லும் ஆற்றல் படைத்தவர்கள் யாரும் இல்லை. யுத்தத்தில் அவன் இம்மாதிரி தீன சுவரத்துடன் ஒரு நாளும் மானத்தை விட்டுக் கதற மாட்டான், இதை ஒரு கணமும் நம்ப வேண்டாம்' என்று நான் எவ்வளவு சொல்லியும் கேளாமல், 'ஓ பகைவனே! வேஷம் போட்டு எங்கள் கூட வந்து மோசம் செய்தாயே! ராமன் இறந்ததும் என்னை அடையலாம் என்றல்லவா காட்டுக்கு எங்களுடன் நீ வந்தாய்! நீ ஒரு நாளும் என்னை அடைய மாட்டாய்,



மோசக்காரனே! மகா பாபி! பரதனும் நீயும் செய்த சதியா இது?' இவ்வாறு சொல்லி, பொறுக்கமுடியாத தோஷத்தை என்மேல் சாட்டி, 'நீ போனால் ஆயிற்று. இல்லா விட்டால் உயிரை இப்போதே விடுவேன்' என்று கதறினாள். உன்மத்தமடைந்தவளாகித் தாங்க முடியாத பேச்சுக்களைப் பேசி என்னைத் துன்புறுத்தித் துரத்தியபடியால் வேறு வழியில்லாமல் வந்தேன், அண்ணா!'' என்றான்.

"நீ சொல்லும் சமாதானத்தை நான் ஒப்புக் கொள்ள முடியாது" என்றான் ராமன். "அவள் என்ன சொன்ன போதிலும் அஞ்ஞானத்தால் உண்டான பேச்சு என்று நீ பொறுத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும் அல்லவா? அவளைத் தனியாக விட்டு நீ எப்படி வரலாம்? பெண்ணாய்ப் பிறந்தவள் பயத்தினால் ஏதேதோ சொல்லுவாள். அதை ந பொருட்படுத்தியிருக்கக் கூடாது. நீ செய்தது பெருந் தவறு. சீதையை நான் மறுபடி காணப் போவதில்லை" என்று சொல்லி லக்ஷ்மணன் மேல் கோபித்துக் கொண்டு துக்கத்தில் மூழ்கினான்.


இருவரும் வெகு வேகமாக ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்கள்.

போகும்போது பல அசுபக் குறிகள் தோன்றின. அவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றிய போதெல்லாம், ராமன் "சீதையின் க்ஷேமம் சந்தேகம், சந்தேகம்" என்று லக்ஷ்மணனுக்குச் சொல்லிக் கொண்டே சென்றான்.

ஆசிரமத்தை யடைந்ததும், சீதையின்றிச் சூன்யமாகக் கிடப்பதைக் கண்டார்கள். ராமனுடைய இதயம் உடைந்து போயிற்று.

மான் தோலும், தர்ப்பையும், புல் பாயும் யாவும் சிதறிக் கிடந்தன. குடிசை பாழாய்க் கிடப்பதைப் பார்த்து ராமன் விம்மி விம்மி அழுதான். இங்கு மங்கும் குடிசைக்குச் சேர்ந்த வனத்தில் ஓடியோடித் தேடிப் பார்த்தான். மரங்களிலெல்லாம் இலைகளும் புஷ்பங்களும் வாடியிருந்தன. சீதையை எங்கும் காணவில்லை.

"ஐயோ! கொன்று தின்று விட்டார்களோ, எங்கே தூக்கிக் கொண்டு போனார்களோ! எவ்வளவு பயந்து போயிருப்பாள்! சகிக்க முடியவில்லையே!



ஒரு வேளை ஆற்றுக்குப் போயிருக்கிருளோ, ஜலம் கொண்டு வரப் போயிருக்கிருளோ, புஷ்பம் பறிக்கப் போயிருக்கிருளோ, பார்ப்போம்!" என்று பைத்தியம் பிடித்தவனைப் போல் கண்கள் சிவந்து இங்கும் மங்கும் அலைந்தான். ஒளிந்து கொண்டு வேடிக்கை செய்கிருளோ என்று மரம் மரமாகத் தேடிப் பார்த்தான்.

ராமனுடைய துயரம் வர வரக் கடல் போல் பொங்கிற்று. உன்மத்த நிலை அடைந்து விட்டான். ஒவ்வொரு மரமாகச் சென்று அவற்றைக் கூவி யழைத்துப் பிரலாபிக்க ஆரம்பித்தான்.

"அசோக மரமே! உனக்கு நன்ருகத் தெரியும். சீதை எங்கே என்று சொல்லுவாய். என் சோகத்தைத் தீர்க்க மாட்டாயா?"

"ஓ, பனைமரமே! அவள் எங்கே இருக்கிருள்? உனக்குக் கட்டாயம் தெரியும். சொல்வாயே!"

இவ்வாறு செடி, கொடி, மரம் ஒவ்வொன்றையும் கட்டிக் கொண்டு அழுது கேட்டுக் கொண்டே பைத்தியம் பிடித்தவனுக வனமெல்லாம் திரிந்தான்.

வனத்தில் கண்ட மிருகங்களை யெல்லாம் இம்மாதிரியே கேட்டுக் கொண்டு அலைந்தான்.

"ஏ, புலியே! அந்த யானையும் மானும் எனக்கு உண்மை சொல்லப் பயப்படுகின்றன. உனக்குத்தான் பயம் என்பது இல்லையே, நீயாவது சொல். உனக்குக் கட்டாயம் தெரியும்."

இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதான்.

"ஒளிந்து கொண்டிருக்கிருய். அதோ பார்த்து விட்டேன். போதும் உன் விளையாட்டு. இனி நிறுத்து. என்னுல் பொறுக்க முடியவில்லை" என்று சொல்லி அழுதான்.

இவ்வாறு பிதற்றிக் கொண்டும், அழுது கொண்டும் சுற்றிலு முள்ள காடெல்லாம் தேடிச் சென்ருன். எங்கும் காணுமல் துக்கம் மேலிட்டு, "ஹா லக்ஷ்மணு, ஹா சீதே!" என்று கதறித் தரையில் விழுந்தான்.

"லக்ஷ்மணு! எங்குமில்லை சீதை! அவளை அரக்கர்கள் பிடித்து அங்கம் அங்கமாகப் பிய்த்துத் தின்று விட்டார்கள். நான் இனி என்ன செய்வேன்? உயிர் தங்காது. தந்தை தசரத மகாராஜாவைப் போய்ச் சேருவேன். ஐயோ! அங்கும், 'மகனே, நான் இட்ட ஆணையைத் தீர்க்காமல் ஏன் முன்னுல் வந்து விட்டாய்?' என்று தந்தை கோபிப்பார். நான் கெட்டேன்!" என்று சேற்றில் அகப்பட்ட யானையைப் போல் விரிட்டு அழுதான்.

இவ்வாறு ராமன் துயரப்பட்டு, நிலையிழந்து உன்மத்தனைப் போல் கஷ்டப்படுவதைக் கண்டு சகிக்க முடியாமல் லக்ஷ்மணன் சொன்னுன்:

"அண்ணு இப்படி அழுவது தகாது. இருவரும் சேர்ந்து காடு முழுவதும் தேடிப் பார்ப்போம். உனக்குத் தெரியுமே, சீதை குகைகளிலும் வனங்களிலும் சஞ்சரிப்பதில் மிகப் பிரிய முடையவள். ஆற்றில் குளிப்பதிலும் விளையாடுவதிலும் புஷ்பங்கள் பறிப்பதிலும் மிகவும் ஆசை கொண்டு எங்கேயோ விளையாடிக் கொண்டிருக்கிருள். பார்ப்போம், நம்மைச் சோதிக்கவே இப்படி அவள் விளையாட்டாகச் செய்கிருள். வா, இருவரும் தேடுவோம். பிரலாபிக்காதே!"

இருவரும் காடு, மலை, ஆறு, தடாகம் ஒரு இடம் விடாமல் தேடினுர்கள்.

• • •

"எங்கும் காணவில்லை, லக்ஷ்மணு! நான் என்ன செய்வேன்?" என்ருன் ராமன்.

"புலம்பாதே, அண்ணு! மகாவிஷ்ணு பலிச்சக்கரவர்த்தியை அடக்கி மூன்று உலகத்தையும் அடைந்தது போல் நீ சீதையை அடைவாய். நிச்சயம், தைரியம் இழக்காதே!" என்ருன் லக்ஷ்மணன்.

"இல்லை, தம்பி! தேடிப் பார்த்தாயிற்று. சீதை எங்குமில்லை. அவளை இழந்தேன். என் உயிர் இனி எனக்கு வேண்டியதில்லை" என்ருன் ராமன்.

ஒரு முகூர்த்த நேரம் நினைவிழந்து கிடந்தான். பிறகு நினைவு வந்ததும் 'ஐயோ' என்று துயரம் தாங்காமல் உரத்த குரலில் அழ ஆரம்பித்தான். லக்ஷ்மணன் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை.

"லக்ஷ்மணு! என்னுல் இனி என்றைக்கும் அயோத்தி போக முடியாது. சீதையை அழைத்துக் கொண்டு வனம் சென்றவன் அவளைப் பாதுகாக்க வகையில்லாதவன், அவளை அரக்கர்களுக்குத் தின்னும்படி கொடுத்து விட்டுத் தனியாகத் திரும்பி வந்தான் என்று உலகமெல்லாம் என்னை இகழும். ஜனகருக்கு நான் என்ன சொல்லிச் சமாதானப்படுத்துவேன்? நீ போய் நம் தாய்மார்களைக் கவனித்துக் கொள். பரதனை ஆலிங்கனம் செய்து எனக்காக அவனுக்குச் சொல்லி விடு. 'நீயே அரசன்;

தேசத்தை நீயே அரசனாக இருந்து ஆள் வாய். ராமன் உனக்கு ஆக்ஞை யிட்டு விட்டான்' என்று சொல்லிவிடு'' என்றான்.

லக்ஷ்மணன் எவ்வளவு தேறுதல் செய்ய முயற்சித்தும் பயன் படவில்லை. சீதையை ராக்ஷசர்கள் தூக்கிச் சென்று உடலைப் பிய்த்துப் பிய்த்துத் தின்று விட்டார்கள் என்று தீர்மானித்து விட்டான். நரமாமிசம் தின்னும் அரக்கர்களிடம் அவள்படும் இம்சையைக் கற்பனை செய்து, அதை விவரித்துச் சொல்லிச் சொல்லி அழுது கொண்டே யிருந்தான்.

"நான் பெரும் பாபங்களைச் செய்தவனாக இருக்க வேண்டும். இல்லாவிடில் எனக்கு இவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்திருக்குமா? என்னுடன் வந்த சீதை அரக்கர்களுக்கு உணவாகப் போனதை நான் சகிக்க வேண்டியதாயிற்றே! என்னைப் போன்ற பாபி உலகத்திலே வேறு ஒருவனுமில்லை" என்றான்.

"அண்ணா, இப்படி நீ மன நிலையை இழந்து விடலாமா? தைரியத்தை இழந்தவர்கள் ஒரு முயற்சியையும் எடுக்க முடியாது. துக்கத்தை அடக்கி யாண்டு மனத்தை ஸ்திரப்படுத்திக் கொள். விதியை முயற்சியால் வெல்ல வேண்டும். அப்படி வெற்றி பெறுவதற்கு மனத்தினின்று அதைரியத்தை விலக்கித் தைரியம் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறுதான் உலகத்தில் தைரியசாலிகள் காரியசித்தி யடைகிறார்கள். வனம் முழுதும் தேடிப் பார்ப்போம். சோகத்தில் மூழ்கிப் போகாதே! தைரியசாலிகளுடைய வழியைப் பின்பற்றுவோம்" என்று லக்ஷ்மணன் பலவாறு சொல்லிப் பார்த்தான். ஆனால் ராமனுடைய அளவு கடந்த துயரத்தில் அது பயனில்லாமல் போயிற்று.

ராமன் தன்னை ஒரு மனிதனாகத்தான் கருதினான். தன்னை விஷ்ணுவாக அறியவில்லை என்பதற்கு இந்தக் கட்டம் சந்தேகமற்ற அத்தாட்சியாகும். சில இடங்களில் நிகழ்ச்சிகளும் பேச்சுகளும் வேறு அபிப்பிராயத்துக்கு இடம் தந்தாலும் இந்தக் கட்டத்தில் வால்மீகி ராமனை மனிதனாகத்தான் வர்ணித்திருக்கிறார். உயிரைக் காட்டிலும் பிரியமான மனைவியை அரக்கர்கள் நிறைந்த வனத்தில் காணமற் போனால் மேம்பட்ட குண மூள்ள ஒரு புருஷன் எவ்விதம் நடந்து கொள்ளுவானோ அந்த விதத்திலேதான் ராமனுடைய மன நிலையும் நடத்தையும் இருக்கக் காண்கிறோம். தம்பி ஆறுதல் கூறியும் பயன் ஏற்படாத நிலையில் ராமன் இருப்பதைக் காண்கிறோம்.

ராமாவதாரத்தில் சாதாரண தருமம் விளக்கப் படுகிறது. தருமத்தோடு வளர்ந்த காதல் எவ்வாறிருக்கும், எவ்வாறிருக்க வேண்டும் என்பதைப் பார்க்கிறோம். மனைவியின் காதலுக்குப் புருஷனுடைய காதல் குறைவாக இருக்கலாகாது என்பதை இந்தக் கட்டத்தில் நன்றாகப் பார்க்கலாம்.


இந்த நிகழ்ச்சிகளை ஆத்மீக முறையிலும் எடுத்துக் கொண்டு ஓரளவு பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு ஆன்மா வழி தப்பிப் போனால் பகவானுடைய திருவுள்ளம் எந்த அளவில் துன்பப்படுகிறது என்பதை சீதா வியோகத்தில் சித்திரிக்கப் பட்டிருக்கிறது என்றும் வைத்துக் கொள்ளலாம்.

பகவானுக்கு நஷ்டமேது, துன்பமேது என்று கேட்கலாம். சர்வம் பகவத் லீலை, எல்லாம் பகவானுடைய திருவிளையாடல் என்று உணர்ந்து விட்டோமானால் ஒரு விமரிசனமும் அதற்கு மேல் வேண்டியதில்லை. பாவம், புண்ணியம், பக்தி இவையெல்லாம் அந்த லீலையில் ஒரு பாகம். ஆண்டவனுக்கு நாம் ஒவ்வொருவரும் காதல் மனைவியைப் போலாவோம். நாம் எந்தக் காரணத்தினாலுமே வழி தப்பிப் போனால் ஆண்டவனுக்குக் காதல் மனைவியை இழந்த துக்கம் உண்டாகும். அந்த துக்கம் அவன் விளையாட்டில் ஒரு பாகம்.

வினோபாவின் கருத்துக்கள்

கல்வியின் பிரச்னையை எடுத்துக் கொள்வோம். சுதந்திர நாட்டு மக்கள் தங்கள் கிராமத்தில் ஒரு கல்விச்சாலை நடத்தும் முறையையும் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சர்க்காரும் ஜனங்களின் அந்த மனப் பண்பை, திறமையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். உதவாக்கரைக் கல்வி முறையை மாற்றுவது யாரென்றே புலப்படவில்லை. பழைய கல்வி முறையில் ஊறிப் போனவர்களுக்கு வேறு புது முறை ஒன்றும் புலப்படவில்லை. அவர்கள் புதிய மாறுதலைக் கண்டு கலவர மடைகின்றார்கள். சுதந்திரமாகச் சிந்திப்பதும் இல்லை. ஆகையால் இந்தியாவில் பல கலாசாலைகள் பழைய பத்தாம் பசலி முறையிலேயே நடைபெற்று வருகின்றன.

ஆரோக்கிய வாழ்வு



✣ சீதாலக்ஷ்மி குமாரசாமி ✣

6. விபரீத கரணி

செய்யும் விதம் :—விரிப்பில் மல்லாந்து படுக்கவும். முதல் சித்திரத்திலுள்ளபடி கைகளை உடலின் பக்கங்களில் உள்ளங் கைகள் தரையில் படும்படியாக வைத்துக் கொள்ளவும். இது ஆரம்ப நிலை.

பின் மூச்சைப் பிடித்து உள்ளங் கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டு கால்களை இரண்டாவது சித்திர நிலைக்குத் தூக்கவும்.

சிறிது மூச்சை விட்டு இழுத்து, இன்னமும் கைகளை நன்கு ஊன்றிக் கொண்டு உடலை மூன்றாவது சித்திரத்திலுள்ளபடி தூக்கவும்.

உடனே கைகளை மடக்கி நான்காவது சித்திரத்திலுள்ளபடி பிருஷ்டத்தைத் தாங்கிக் கொள்ளவும். பின் மூச்சைச் சௌகரியப்படி விடவும் இழுக்கவும் செய்யலாம்.

இவ்வாறு அவரவர்களுக்கு எவ்வளவு நேரம் இருக்க வேண்டுமென்று சிகிச்சை முறையில் கூறப்பட்டிருக்கின்றதோ அவ்வளவு நேரம் வரையில் இருக்கலாம்.

இந்த முறைப்படி உடலைத் தன் வசத்தில் வைத்திருப்பவர்களால் மட்டும் தான் முடியும். கால் கைகளைத் தூக்கிப் பின் பிருஷ்டம் முதுகையும் தூக்குவது சிறிது கஷ்டம். சக்தி உள்ளவர்கள் இரண்டாவது சித்திர நிலைக்கு வந்து, மறுபடியும் முதல் நிலைக்கே வருவது, பின் கால்களைத் தரையில் வைத்து விடாமல் அப்படியே தூக்குவது போன்று பல தடவைகள் சிலநாள் செய்து வந்தால் பின்பு பிருஷ்டத்தையும் கால்களையும் தூக்கச் சக்திவரும். அப்பொழுது கைகளை மடக்கி பிருஷ்டத்தைத் தாங்கிக் கொள்ளலாம். அவ்வாறு செய்வது எல்லோருக்கும் முடியாது. ஆகையால் அவர்களுக்கு மட்டும் வேறு சுலபமான வழி ஒன்று இருக்கிறது.

அவரவர்களின் கை உயரத்துக்குத் தக்கபடி ஒரு முழும் இருக்கும்படியாக ஒரு படுக்கையைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். நான்கைந்து தலையணைகளை வைத்துக் கயிற்றால் இறுகக் கட்டிக் கொள்ளலாம். அல்லது உள்ளே தலையணைகளை வைத்து மெத்தையில் சுருட்டி ஒரு முழ உயரமாக்கிக் கொள்ளலாம். அல்லது வேண்டாத துணிகளை உள்ளே வைத்து மேலே ஒரு விரிப்பில் நன்கு சுற்றி ஒரு கயிற்றால் கட்டி இதற்கென்றே கூடத் தனியாய் வைத்துக் கொள்ளலாம். ஆனால் கட்டு இறுக்கமாய்க் கட்டியிருக்க வேண்டும். இல்லையானால் நமது உடல் பளுவால் அமுங்கி நமக்கு வேண்டிய உயரம் இல்லாமல் போய் விடும்.

மேற்சொன்ன படுக்கைக் கட்டை விரிப்பில் வைத்துப் படுக்கையின் முனையில் உட்காரவும். பின் மெதுவாய்ப் பின்புறம் சாய்ந்து, கைகளைப் பின்புறம் ஊன்றிக் கொண்டு ஜாக்கிரதையாய்த் தலையை மெதுவாகக் கீழே வைக்கவும். இப்பொழுது முதுகையும் இடுப்பையும் படுக்கை தாங்கியிருக்கும். பின்புறம் அதிகம் நிமிர்ந்து விடக் கூடாது. தலை, தோள்கள் மட்டும் தரையில் இருக்க வேண்டும். பின் இரண்டு கால்களையும் சேர்ந்தாற் போல் தூக்கிப் பழைய நிலைக்கு வரவும். கைகள் இரண்டையும் சௌகரியப்படி வைத்துக் கொள்ளவும். படுக்கை மேலும் வைத்துக் கொள்ளலாம். படுக்கை நழுவி விடும் போல் இருந்தால் பிடித்துக் கொள்ளலாம். கால்களை மேல் தூக்கினதும் பின் பக்க முதுகு பாகத்தின் மேல் பக்கம் தரையில் இருக்கும். பிருஷ்டம், இடுப்பு படுக்கை மேல் இருக்க வேண்டும். இந்நிலையில் இருக்கும்பொழுது பார்த்தால் உடல் நாற்பது அல்லது நாற்பத்தைந்து டிகிரி சாய்வில் இருக்க வேண்டும்.

மூச்சைச் சாதாரணமாக இழுக்கவும் விடவும் செய்யலாம். வாய் மூடி இருக்க வேண்டும். உடலை விறைப்பாய் வைத்துக் கொள்ளக் கூடாது. கால், விரல்கள், பாதம், கைகள் இவைகளெல்லாம் இயற்கையாய் இருக்கும்படி விட்டுவிட வேண்டும். இந்த ஆசனம் செய்யும்போது எச்சில் வந்தால் விழுங்கக் கூடாது. ஆசனத்தைக் கலைக்கும்போது விழுங்கலாம்; அல்லது துப்பலாம். இருமல், தும்மல், கொட்டாவி முதலியன வந்தால் ஆசனத்தை உடனே கலைத்து இறங்கிவிட வேண்டும். அப்படி இறங்காமல் ஆசன நிலையி

லேயே இருமினாலோ, கொட்டாவி விட்டாலோ, தும்மினாலோ எங்காவது நரம்பு இழுத்துக் கொள்ளும். வலியேற்படும். சுளுக்கு ஏற்படும்.

நோயாளிகள், பலவீனமானவர்கள் ஆரம்பத்தில் பிறர் சகாயத்துடன் இந்த ஆசனத்தைச் செய்வது நல்லது. எழுந்து படுக்கைக் கட்டின்மேல் உட்கார்ந்து பின்னால் சாய்ந்து தலையைக் கீழே வைக்கும்போது, சிலர் தலையைப் பொத்தென்று வைத்து விடுவார்கள். அதனால் சிலருக்குத் தலைக்கு அதிர்ச்சி உண்டாகும். ஆகையால் பின்புறம் சாயும்போது ஒருவர் முதுகைத் தாங்கி மெதுவாய்ப் பிடித்துக் கொண்டு, மெள்ளத் தலையைத் தரையில் வைக்க வேண்டும். இவ்வாறு சில நாள் உதவி செய்து வந்தால் பின்பு தன்னாலேயே சாய வரும். இப்படிச் செய்யும்போது படுக்கை நழுவி முன் பக்கம் போய் முதுகு பூராவும் தரையில் வந்துவிடும். அப்படியில்லாமல் இருக்கப் பார்க்க வேண்டும். அப்படி நழுவிவிட்டால் மறுபடி எழுந்து முதலிலிருந்து ஜாக்கிரதையாய்ச் செய்ய வேண்டும். அல்லது உதவி செய்பவர் கால்களை இன்னும் உயரத் தூக்கினால் முதுகும் தூக்கும். அப்பொழுது உதவி செய்பவர் தன் கால்களால் படுக்கையை முதுகுக்கு அடியில் தள்ளலாம்.

எழுந்திருந்து உட்கார்ந்து விபரீதகரணி ஆசனத்தைச் செய்ய முடியாதவர்கள், படுத்தவாறே இருந்தும் செய்யலாம். இதற்குப் பிறர் உதவி கட்டாயம் வேண்டும். உதவி செய்பவர் கால்கள் இரண்டையும் பிடித்துத் தூக்கி, முதுகும் தூக்கும் வண்ணம் இன்னும் சற்றுத் தூக்கிப் பிடித்துக் கொள்ள, மற்றொருவர் படுக்கைக் கட்டை முதுகுக்கு அடியில். கொடுக்கலாம். உதவி செய்பவர் ஒருவராய் இருந்தால் கால்களை மட்டும் தூக்கிப் படுக்கைக் கட்டை பிருஷ்டத்துக்கு ஒட்டினாற் போல் வைத்து, பின் உதவி செய்பவர் பிருஷ்டத்துக்கு எதிர்ப் பக்கம் நின்று கொண்டு பிறகு கால்களை இன்னமும் தூக்கினால் முதுகும் தூக்கும். அப்பொழுது உதவி செய்பவர் படுக்கைக் கட்டைத் தன் கால்களால் முன்னுக்குத் தள்ளினால் சாதகரின் முதுகைத் தாங்கிக் கொள்ளச் சௌகரியமாய் இருக்கும். மிக பலவீனமாய் இருப்பவர்களுக்கு நேராய்த் தன்னால் வைத்துக் கொள்ள முடியாது. அல்லது சில விநாடிகளில் கஷ்டமாய் இருக்கும். ஆகையால் உதவி செய்பவர் சிறிது தாங்கிப் பிடித்துக் கொண்டால் சௌகரியமாக இருக்கும்.

கஷ்டப்பட்டுக் கொஞ்சமும் எழுந்திருக்கக்கூட முடியாதவர்கள் இந்த ஆசனத்தைச் செய்ய வேண்டுமென்பதென்ன! செய்யலாமா என்று கேட்கலாம். ஆம்! அப்பேர்ப்பட்டவர்களுக்காகத்தான் இந்த ஆசனம் ஏற்பட்டது. பெயரைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். ஆனால், விபரீதம் நேர்ந்து விடும் என்று நினைத்து விடாதீர்கள். ஏதாவது ஒரு காரியம் நாம் நினைத்ததற்கு மாறாக நேர்ந்தால் நாம் சாதாரணமாக இந்தச் சொல்லை உபயோகிப்போம். அதைப் போல இந்த ஆசனம் என்ன அவ்வளவு விசேஷமா! என்ன அப்படிப் பலன் அளித்து விடப் போகிறது! எழுந்திருந்து கூட உட்கார முடியவில்லை. என்னத்தை இந்த ஆசனத்தினால் செய்துவிட முடியுமென்று நாம் சாதாரணமாய் நினைப்போம். ஆனால் நாம் நினைத்ததற்கு மாறாக இந்த ஆசனம் செய்து விடும். இந்த ஆசனத்தால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை எனலாம். நம்பிக்கை இழந்த நிலையிலும் ஆறுதல் அளிக்க வல்லது. இனி ஒன்றையும் சொல்வதற்கில்லை என்ற நிலையிலும் இந்த ஆசனம் நம்பிக்கை அளிக்க வல்லது. விபரீத—ஆச்சரியத்தை; கரணி — உண்டாக்குவது. உண்மையில் ஆச்சரியத்தை உண்டாக்குவதுதான் இது.

இந்த ஆசனத்தை அவரவர்களின் உடல் நிலையை அனுசரித்துப் பழக வேண்டும். சாதாரணமாக உள்ளவர்கள் ஒரு தடவைக்கு ஆரம்பத்தில் மூன்று நிமிஷம் இருக்கலாம். இவ்வாறு மூன்று தடவைகள் செய்யலாம். வாரத்துக்குத் தடவைகளில் ஒரு நிமிஷம் அல்லது இரண்டு நிமிஷம் அதிகமாக்கிக் கொண்டுவந்து, பத்து நிமிஷம் வீதம் மூன்று தடவைகள் செய்யலாம். பின் இரண்டு தடவைகள் பதினைந்து நிமிஷம் வீதம் செய்யலாம். அதன் பின் முப்பது நிமிஷம் ஒரே தடவையாகச் செய்யலாம்.

மிகப் பலவீனமானவர்கள் முதல் வாரத்தில் ஒரு நிமிஷம் அல்லது அரை நிமிஷம்தான் செய்யலாம். பின் வாரத்துக்கு ஒன்று அல்லது அரை நிமிஷ வீதம் நேரத்தை அதிகமாக்க வேண்டும். தடவைகளுக்கு இடையில் போதுமான அளவு ஓய்வு அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் மிக ஜாக்கிரதையாய் நேரத்தை அதிகமாக்க வேண்டும். அவசரப்படக் கூடாது.

தவிர, மிகப் பலவீனமானவர்களுக்கு இம்மாதிரி காலைத் தூக்கினால் தலை சிறிது கிறுகிறுக்கும். மயக்கம் வரும். ஆகையால் அவர்கள் ஆசனம் செய்வதற்கு அரை மணி முக்கால் மணி நேரத்துக்கு முன்பே (வீசம் படி) அரை டம்ளர் பால் அருந்த வேண்டும். காலும், முதுகும் மேல் தூக்கியதும் குடல்கள் அழுத்தப் பித்தப் பையிலுள்ள பித்த நீர், இரைப்பைக்கும், சிறு குடலுக்கும் மத்தியிலுள்ள ஒரு வளைந்த டயோடினம் என்ற குடலுக்குள் கொட்டும். அப்பொழுது வாந்தி வருவது போலவும், மயக்கம் வருவதைப் போலவும் இருக்கும். இதைத் தவிர்க்கப் பால் உட்கொண்டால் பித்தநீர் பாலுடன் கலந்து சிறு குடலுக்குள் சென்று விடும். பின் பித்தப்பை காலியாகி விடும். மறுபடியும் பித்தப் பை நிறைவதற்கு மூன்று நான்கு மணி நேரமாகும். நாம் மறுபடியும் உணவு சாப்பிடும்போது அது வந்து கலக்கத் தயாராக வைத்திருக்கும். எனவே பால் சாப்பிட்டுவிட்டு அரைமணி நேரம் பொறுத்து ஆசனம் செய்தால் பித்தப் பை காலியாய் இருப்பதனால் மயக்கம், வாந்தி போன்றவை வராது.

பித்த நீர் என்பது ஜீரணத்துக்காக ஏற்பட்டது. முக்கியமாக நாம் சாப்பிடும் ஆகாரத்திலுள்ள கொழுப்பை ஜீரணிக்க இது உதவுகிறது. இந்தப் பித்த நீர் கல்லீரலிலிருந்து சுரந்து வருகிறது. அப்படிச் சுரந்து வரும் நீரைத் தேக்கி வைத்து வேண்டியபோது கொடுக்கவே பித்தப் பை ஏற்பட்டுள்ளது. பித்த நீர் கப்பு மஞ்சள் நிறமுள்ளது. கோழி முட்டையின் கருவைப் போன்று வழவழப்பாய் இருக்கும். பித்தப் பை ஆள்காட்டி விரலை விடச் சற்று நீளமாயும் மேல் பாகம் கனத்தும் அடி பாகம் சிறுத்தும் இருக்கும். இதில் தேங்கின ரசத்தைக் கொண்டு வந்து டயோடினத்தில் சேர்க்க ஒரு நரம்பு வழியுண்டு. இந்தப் பையில் சாதாரணமாய் இரண்டு மூன்று அவுன்ஸ் பித்த நீர் சேரும். சிலருக்கு அதிகமும் சிலருக்குக் குறைந்தும் இருப்பது உண்டு.

ஆஸ்துமாக்காரர்கள் அவரவர்களின் தேகநிலையையும், வயதையும் அனுசரித்து இந்த ஆசனம் செய்ய வேண்டியதாய் இருக்கும். ஆஸ்துமா வியாதி உள்ளவர்கள் செய்ய வேண்டிய ஆசனங்களையெல்லாம் வெளியிட்டபின் ஆசனத் திட்டம் வெளியிடப்படும்.

(தொடரும்)



தங்க மாம்பழம்

ராஜி

20. போட்டிக்கு வந்தவன்

தண்டோராப் போட்டவர்கள் மாயா மகேந்திரபுரப் பட்டணம் வரையில் போய்த் தண்டோராப் போட்டார்கள். ஆனால் தண்டோராப் போட்ட சமாசாரம் அரசன் வீரசிம்மன் காதுக்கு எட்டவில்லை. அந்த ஊரில் இருக்கும் ஜனங்களுக்கோ அல்லது அரண்மனைச் சிப்பந்திகளுக்கோ பிரபாகரனுக்கும் அரசனுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி என்ன தெரியும்? ஆதலால் தண்டோராப் போடப்பட்ட செய்தியை அரசனிடம் யாரும் சொல்லவில்லை.

ஆனால் தண்டோராச் செய்தியைக் கேட்ட வயற் காட்டுக் கிழவி சும்மா இருப்பாளா? வெகு வேகமாக அரண்மனையை நோக்கிச் சென்றாள். இவள் அரண்மனைக்குச் சென்ற சமயத்தில் அரசன் வீரசிம்மன் அவனுடைய அரண்மனை நந்தவனத்தில் தனியாக உலாவிக் கொண்டிருந்தான். வயற்காட்டுக் கிழவி தன்னை நோக்கி வருவதைக் கண்ட அரசன் அதிசயித்தான். "என்ன கிழவி, போன காரியம் ஜயந்தானா? அவர்கள் அகப்பட்டு விட்டார்களா? அவர்களிடமிருந்து தங்க மாம்பழத்தை வாங்கி வந்தாயா? அவர்களைக் கல்லறைத் தீவுக்குப் போகாதபடி எச்சரிக்கை செய்துவிட்டு வந்தாயா?" என்று அரசன் கேள்விகளைச் சரமாரியாகக் கேட்டுக் கொண்டே போனான்.

"அரசே! நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். நான் சொல்வதைச் சற்று அவசரப்படாமல் கேளுங்கள். நான் அவர்களைப் பீமபுரம் பட்டணத்திலேயே பார்த்தேன். நான் ஒரு நொண்டியைப் போல நடித்ததினால் என்னை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. அவர்களிடம் கல்லறைத் தீவுக்குப் போவது மிகவும் அபாயம் என்று சொன்னேன். ஆனால் நான் சொல்லியது அவர்களிடத்தில் ஒன்றும் பலிக்கவில்லை."

"எந்த முயற்சியில்தான் நீ ஏமாறாமல் திரும்பி வந்தாய்? வீரப்பன் சொல்லியது போல உன் அவசர புத்தியினாலேயே எல்லாக் காரியங்களையும் கெடுத்துக் கொண்டு வருகிறாய்!" என்றான் அரசன்.

வீரப்ப தேவன் பெயரைச் சொல்லிய மாத்திரத்திலேயே கிழவிக்கு அடங்காக் கோபம் வந்தது. "அரசே, வீரப்பதேவன் என்னைப் பற்றிச் சொன்னதாகச் சொல்லுகிறீர்களே! அவன் மாத்திரம் அவசரப்படாமல் நன்றாக நடந்து கொண்டானா? கைக்கு வந்த தங்க மாம்பழத்தைத் தனது அவசர புத்தியினால் கைவிட்டு விட்டான். அதற்குப் பிறகு நடந்த சமாசாரங்களை நீங்கள் கேள்விப்படவில்லையா?"

"எனக்கு ஒன்றும் தெரியாதே, என்ன சமாசாரம்? சொல்லு, சீக்கிரம்!"

"உங்கள் அரண்மனை வாயில் வழியாக ஏதாவது தண்டோராப் போட்டுச் சமாசாரங்கள் சொல்லிச் சென்றதை யாரும் உங்களுக்குச் சொல்லவில்லையா?"

"தண்டோராவா? நான் உத்தரவு இடாமல் யார் தண்டோராப் போட்டுச் சமாசாரங்களைச் சொல்லச் செய்தது? ஆச்சரியமாயிருக்கிறதே!"

"அரசே, அச்செய்தி நம் பட்டணத்தைச் சேர்ந்தது அல்ல. பீமவர்மன் அனுப்பிய செய்திதான்!"

"பீமவர்மனா? அவன் என்ன செய்தியைத் தண்டோராப் போடச் சொன்னான்?"

"அடுத்த பௌர்ணமி அன்று பீமபுரம் அரண்மனை விளையாட்டு மைதானத்தில்



பிரத்தியேகமாக அமைக்கப் பட்டிருக்கும் மைதானத்தில் ஒரு வில்வித்தைப் போட்டி நடக்கும். அந்தப் போட்டியில், காட்டில் இருந்த வலிமை பொருந்திய ஒரு ஆண் சிங்கத்தை ஒரே அம்பினால் கொன்ற பிரபாகரன் என்ற வாலிபன் கலந்து கொள்ளுவான். போட்டியில் அவனை யார் ஜயிக்கிறார்களோ அவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி என்று தண்டோராக்காரன் சொன்னான்'' என்று கிழவி கூறினாள்.

''கிழவி, என்னால் இதை நம்பவே முடியவில்லை. பிரபாகரன் எப்படிச் சிங்கத்தைக் கொன்றிருக்க முடியும்? ஒரு நாளும் முடியாது. இதில் ஏதோ சூது இருக்கும். அல்லது ஏற்கெனவே கொல்லப்பட்ட சிங்கத்தைத் தான் கொன்றதாகப் பிரபாகரன் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்'' என்றான் அரசன் வீரசிம்மன்.

''ஆமாம், ஆமாம்! நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனாலும் அவனுக்குக் காட்டுக்குள் செல்ல என்ன தைரியம்!'' என்று பதிலளித்தாள் கிழவி.

''என்ன தைரியம் இருந்தால் என்ன? பீமவர்மன் கையில்தான் அகப்பட்டுக் கொண்டு விட்டானே! வில் பந்தயத்தில் கட்டாயம் தோற்றுப் போவான். பிறகு அவன் ஆயுள் கைதியாகத்தான் இருக்கப் போகிறான். நாம் இனிமேல் அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.''

''அரசே, அப்படிச் சொல்லாதீர்கள்! அவனுக்குச் சரியான எதிரி அகப்படாமல் அவன் வில் பந்தயத்தில் ஜயித்து விட்டால் பிறகு நம்முடைய காரியம் அல்லவா கெட்டுப் போகும்?''

''ஆமாம். நீ சொல்வதும் உண்மை. அதற்கு நாம் என்ன செய்யலாம்?''

''ஏன் நீங்கள் அந்தப் போட்டியில் கலந்து கொள்ளக் கூடாது? நீங்கள்தான் வில்வித்தையில் மிகவும் கெட்டிக்காரராயிற்றே! நீங்கள் போட்டியில் கலந்து கொள்ளுவதாகப் பீமவர்மனுக்குத் தெரிவித்தால் அவன் சந்தோஷமடைந்து உங்களைக் கட்டாயம் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிப்பான்!''

''ஒருகால் நான் போட்டியில் தோற்றுப் போனால் எனக்கு மிகவும் அவமானம் அல்லவா வந்து சேரும்!'' என்றான் அரசன் வீரசிம்மன் கவலையுடன்.


''அரசே, நீங்கள் ஒருகாலும் போட்டியில் தோற்றுப் போக மாட்டீர்கள். அது நிச்சயம். பிரபாகரனுக்கு ஏதாவது கொஞ்சம் வில் வித்தை தெரியுமென்றால் போட்டியில் அவனுக்கு அந்த வித்தை உபயோகப் படாதபடி செய்து விடுகிறேன். வெகு எளிதில் உங்களுக்கு வெற்றி தேடித் தருவதுதான் எனது முக்கிய நோக்கம். நீங்கள் பௌர்ணமியன்று பீமபுரத்துக்குக் கட்டாயம் வந்து சேருங்கள். உங்களுக்கு முன்பாகவே நான் அங்கு சென்று வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிக்கிறேன். இந்த விஷயத்தில் என்னுடைய சாமர்த்தியத்தைப் பாருங்கள்'' என்று சவால் விட்டுப் பேசினாள் வயற் காட்டுக் கிழவி.

அரசன் பீமபுரத்துக்குப் பௌர்ணமி அன்று வருவதாக ஒப்புக் கொண்டான். வயற் காட்டுக் கிழவி அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே சென்றாள்.

வயற் காட்டுக் கிழவி சென்ற சற்று நேரத்துக்குப் பிறகு வீரப்பதேவன் மிகவும் அவசரமாக அரண்மனைக்குள் சென்றான். அப்பொழுது அரசன் நந்தவனத்தில் தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்தான். வீரப்பதேவனைப் பார்த்த அரசன், ''வா, வீரப்பா, உன்னைப் பார்த்து வெகு நாளாகி விட்டது. அன்றைய தினம் ஒரு நாள் குடியானவன் கூடை நிறைய மாம்பழங்கள் கொண்டு வருகிறான் என்றும் அந்தக் கூடையில் தங்க மாம்பழம் இருக்கிறது என்றும் சொன்னாயே! அதற்குப் பிறகு அந்த மாம்பழக் கூடையையும் காணவில்லை; குடியானவனும் வரக் காணோம். உன்னையும் அன்று முதல் பார்க்க முடியவில்லை'' என்று சொல்லவே, வீரப்பதேவன் அவமானத்தினால் தலை குனிந்து பேச முடியாமல் நின்று கொண்டிருந்தான்.

''வீரப்பா, நீ பதில் சொல்லா விட்டால் எனக்குத் தெரியாது என்று நினைக்க வேண்டாம். நீ அன்று அவசரப் பட்டுக் குடியானவனைத் தொடராமல் அரண்மனைக்கு வந்ததினாலேயே அந்தத் தங்க

பிரசித்திபெற்ற பாண்ட்ஸ் க்ரீம்களின் உதவியால்
உங்கள் வதனத்தை மென்மையாகவும்
நிர்மலமாகவும் வைத்திருங்கள்



ஒவ்வொருவருடைய சரும இயல்புக்கும் உகந்தவாறு இரண்டு மேன்மையான க்ரீம்கள்.

எழிலரசியாகத்திகழ எந்தப் பெண் மணியும் ஆசைப்படுவது சகஜமே! அதை உத்தேசித்தே பாண்ட்ஸ் க்ரீம் களின் தயாரிப்பாளர்கள், உங்களுக்கு உதவியாக இதோ இரண்டு அழகு சாதனங்கள் வழங்குகின்றனர். பாண்ட்ஸ் க்ரீம்கள், வரட்சி அல்லது நச நசப்பு மிகுந்த பிரதேசங்களில் உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கென்றே தயாரிக்கப்பட்டவை; உலர்ந்ததோ, இல்லை எண்ணைப்பசையுடையதோ ஆன எத்தகைய சருமத்திற்கும் பொருத்தமான வகையில் அமைந்தவை. உலகமுழுவதிலும் உள்ள எழில் நங்கையர்களைப் போல் நீங்களும் இந்த க்ரீம்களை பிரதிதினமும் உபயோகித்து, உங்கள் வதனத்தை புதுமலர்ப் புதுமையோங்க வைத்திருங்கள்!



உங்கள் முகப்பொலிவை பாழ்படுத்தும் வரட்சியான பிரதேசங்களில் — பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் உங்களுக்கு தேவை. அதிலடங்கிய செழிப்பான எண்ணைகள் சருமத்திற்கு சமனூட்டி, கடுமையான வெயில் மற்றும் வரட்சிக்காற்றிலும் அது வாடி வதங்காமல் காப்பாற்றுகின்றன.



வெப்பம், நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் — அல்லது சருமம் இயற்கையாகவே எண்ணைப்பசையுடையதானால் — பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள். இம்மெல்லிய க்ரீம், சரும துவாரங்களில் படியும் பிசுக்கையும் செத்த ஜீவாணுக்களையும் வெளியேற்றி உங்கள் மேனிக்கு சௌமியமான பாதுகாப்பு அளிக்கின்றது.


உங்களுக்கிஷ்டமான பாண்ட்ஸ் க்ரீமை நாள் தோறும் உபயோகியுங்கள். சொற்ப தினங்களில் உங்கள் வதனம் அன்றலர்ந்த மலர்போல மென்மையாக, புதுமைப் பொலிவுடன் விளங்குவதைக் காண்பீர்கள் — உணரவும் செய்வீர்கள்!

உலகில் எழிலரசிகள் உபயோகிக்கும் க்ரீம்கள்


பாண்ட்ஸ்

கோல்ட் க்ரீம்

வானிஷிங் க்ரீம்



P. 9945



"தையற்காரருக்குத் தாராள மனசு என்று திருப்பித் திருப்பி ஏன் சொல்லுகிறீர்கள்? தாராள மனசாக இருந்தால் அதற்கு இப்படியா தைக்க வேண்டும்!"

மாம்பழம் திரும்பிப் பிரபாகரன் கைக்குச் சென்று விட்டது" என்று அரசன் சொல்லவே வீரப்ப தேவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஆமாம், அரசே! ஏதோ தவறி விட்டேன். இதைப் பற்றி உங்களுக்குத் தெரிவித்தது யார்?" என்று வியப்புடன் கேட்டான் வீரப்பதேவன்.

"யாராயிருந்தால் என்ன? வயற் காட்டுக் கிழவிதான் சொன்னாள்."

"அவள் அவசரப்பட்டுச் செய்த காரியங்கள் பல. என்னைப் பற்றி உங்களிடம் சொல்லி விட்டாளாக்கும்! இருக்கட்டும். நான் அவளைக் கவனித்துக் கொள்கிறேன். நான் இப்பொழுது இங்கு வந்தது ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றித்தான்" என்று கூறி ஏதோ ரகசிய சமாசாரத்தைச் சொல்லுவதற்காக அரசனை நெருங்கினான்.

"வீரப்பா, நீ எதைப் பற்றிச் சொல்லப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். பீமபுரத்தில் அடுத்த பௌர்ணமி அன்று பிரபாகரனுடன் நடக்க இருக்கும் வில் போட்டியைப் பற்றித்தானே?"

இதைக் கேட்டவுடன் வீரப்ப தேவன் ஒரு பெருமூச்சு விட்டான். தான் முதலில் அரசனுக்கு ஒரு புதிய செய்தியைச் சொல்லலாம் என்று ஆர்வத்துடன் அங்கு வந்த அவன் ஏமாற்றமடைந்து நின்றான். "அரசே! இந்த விஷயத்தை உங்களுக்கு அதற்குள் தெரிவித்தது யார்?" என்று தளர்ந்த குரலில் கேட்டான்.

"வயற் காட்டுக் கிழவிதான் சொன்னாள். சற்று முன்பாகத்தான் இங்கு வந்து என்னைப் பார்த்து விட்டுப் போனாள். என்னையே பிரபாகரனுடன் வில் போட்டிக்கு நிற்கும்படி சொன்னாள். நான் ஜயிப்பதற்கு வேண்டிய உதவிகளையும் செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறாள். நானும் அவள் சொல்லியபடியே வில் போட்டியில் கலந்து கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன்!"


"அப்படியா? அதைச் சொல்லத் தான் நானும் உங்களிடம் ஓடி வந்தேன். என்னைக் கிழவி முந்திக் கொண்டு விட்டாள். அதைப் பற்றி என்ன? எப்படியாவது நீங்கள் அந்தப் போட்டியில் ஜயித்து, பிரபாகரனையும் உமாவையும் சிறைப்படுத்த வேண்டும் என்பதுதான் என் எண்ணம். இந்தச் சமயத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளா விட்டால் பிறகு பிரயோசனமில்லை. எனக்குத் தெரிந்த வரையிலும் உங்களைவிட வில் வித்தையில் சமர்த்தர் இப்போது எவரும் இல்லை. நீங்கள் கட்டாயம் இந்தப் போட்டியில் கலந்துகொண்டால் வெற்றி பெறுவீர்கள் என்பது நிச்சயம். நானும் அங்கு வந்து நீங்கள் ஜயிப்பதற்கு என்ன உதவிகள் அந்தச் சமயத்தில் தேவையோ அவற்றை வயற்காட்டுக் கிழவியைவிட அதிகமாகச் செய்து காண்பிக்கிறேன். அதைப் பற்றி நீங்கள் வில் போட்டியில் வெற்றி பெற்ற பிறகு சொல்லுகிறேன். நான் பௌர்ணமியன்று உங்களுடன் பீமபுரத்துக்கு வருகிறேன். எனக்கு இப்பொழுது விடை கொடுங்கள்" என்றான் வீரப்பதேவன்.

* * *

பீமபுரத்திலே வில் போட்டியை வெகு விமரிசையாக நடத்தப் பீமவர்மன் ஏற்பாடுகள் செய்து கொண்டு வந்தான். பீமபுரத்திலும் அதற்கு அப்பாலுள்ள பட்டணங்களிலும் பீமவர்மன் புதியதாக ஏற்படுத்தியிருக்கும் வில் போட்டியைப் பற்றியே ஜனங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். வில் போட்டியைப் பார்ப்பதற்குச் சுமார் பத்தாயிரம் ஜனங்கள் உட்காரும்படி விளையாட்டு மைதானத்தில் ஒரு பெரிய கூடாரம் அமைக்கப் பட்டது. பல நாற்காலிகள், பெஞ்சுகள், காலரிகள் முதலியன பொருத்தப் பட்டிருந்தன. போட்டி மாலை வேளையில் நடப்பதற்கு ஏற்பாடு ஆகியிருந்ததால் கூடாரம் முழுவதும் மின்சார விளக்குகள் பல அமைக்கப் பட்டிருந்தன.

பிரபாகரனுடன் யார் போட்டியிடப் போகிறார்கள் என்பது பௌர்ணமியன்று காலை வரையில் தெரியவில்லை. பீமவர்மன் யாரைப் பிரபாகரனுடன் போட்டியிடச் செய்வது என்பதைப் பற்றி மந்திரிகளுடன் யோசனை செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது மாயா மகேந்திரபுரத்து அரசன் வந்திருப்பதாக அறிவிக்கப் பட்டது. அதைக் கேட்ட பீமவர்மன் தன் சிம்மாசனத்தை விட்டு எழுந்திருந்தான். வாசற் பக்கம் வந்து வீரசிம்மன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாக மந்திரிகளுடன் நின்று கொண்டிருந்தான். (தொடரும்)


பனிமூடி இருக்கும் இமயமலையிலிருந்து
Parry's SWEETS
பாரீஸ் மிட்டாய்கள்
கன்னியா குமரி வரை
இந்தியா முழுவதும் புத்தம் புதிய
வைகளாக கிடைக்கின்றன
தயாரிப்பவர்கள்:
பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட்
நெல்லிக்குப்பம்
பாரி & கம்பெனி லிமிடெட், மதராஸ்
Parry's
CHOCOLATE ECLAIRS




நீங்கள் இன்று உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?



ஆம்! நான் இன்று என் பற்களை மக்ளீன்ஸ் பற்பசையைக் கொண்டு சுத்தம் செய்தேன். வசீகரம் வாய்ந்த புன்னகைக்கு ஆரோக்கியமான பற்கள் அத்தியாவசியம். ஆகையால் தான் நான் பிரதி தினமும் இரு முறை எனது பற்களை மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையைக்கொண்டு சுத்தம் செய்கிறேன். மக்ளீன்ஸிலுள்ள ஒரு தனிப்பட்ட பொருள் பற்களின் மேல் படிந்துள்ள ஊத்தையை நீக்கி பற்களுக்கு இயற்கையாக இருக்கும் வெண்மையையும், ஒளியையும் தருகிறது. அதிக வெண்மையான பற்கள் கெட்டியான ஈறு மற்றும் நறுமணமுள்ள சுவாசத்திற்கு மக்ளீன்ஸ் பற்பசையையே உபயோகியுங்கள்.





க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்

MTY-39-TAM



5. அடைக்கல மாதா

மனக்கவலை இல்லாதார் இம்மாநிலத்தில் இல்லை. அளவிறந்த பொருள் உடைய அரசர்க்கும் கவலை உண்டு; அருள் ஆர்ந்த மனம் உடைய அறவோர்க்கும் கவலை உண்டு.

இவ்வாறு மாந்தர் எல்லோரையும் அலைத்துக் குலைத்து அல்லற் படுத்தும் மனக் கவலையை மாற்றுதற்கு ஏற்ற மருந்தொன்று கண்டனர் மெய்யறிவுடைய மேலோர். அம் மருந்தின் தன்மையைத் தெள்ளத் தெளிய உணர்த்துகின்றார், திருவள்ளுவர்.

"தனக்குஉவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்பது வள்ளுவர் வாக்கு. "இறைவன் ஒருவனே தன்னிகரில்லாத் தலைவன். அவனே தஞ்சம் அடைந்தோரைத் தாங்க வல்லவன்; அடைக்கலம் புகுந்தோரை ஆதரித்துக் காக்கும் அருள் உடையவன். அவன் 'சரணல்லால் சரண் இல்லை' என்று உணர்ந்து தஞ்சம் அடைந்தவரே தலைப்படுவர்; மனக் கவலை தீர்ந்து மாறிலா இன்பத்தில் மகிழ்ந்திருப்பர்" என்று அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

தனக்குவமை இல்லாத தலைவன் திருவடி சேர்ந்து எவராலும் கடத்தற்கு அரிய விதியையும் கடந்தான் மார்க்கண்டன். அடைக்கலப் பொருளாகிய மார்க்கண்டனைக் காக்கும் பொருட்டு ஈசன் வெளிப்பட்டு, காலதேவனைக் காலால் உதைத்த கதை காவியங்களிலும் திருப்பாசுரங்களிலும் பாராட்டப் படுகின்றது:

"அஞ்சினேன், அபயம் என்ற
அந்தணற்காக அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை உண்டோ"

என்று பாடினார், செஞ்சொற் கவிஞராகிய கம்பர். அடைக்கலம் புகுந்த மார்க்கண்டனுக்கு அருள் புரிந்த ஈசன் கருணையைத் தேவாரமும் பாடிற்று.

"ஒன்றி இருந்து நினைமின்கள்
உம்தமக்கு ஊனம் இல்லை
கன்றிய காலனைக் காலால்
கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம் பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும்
எம்பெரு மான்தன் திருக்குறிப்பே"



என்ற திருப்பாசுரத்தில் மார்க்கண்டனது மனக் கவலையை மாற்றிய ஈசனார் கருணை இனிது உணர்த்தப் படுகின்றது.

அடைக்கலத்தின் பெருமையை அறிவுறுத்தும் காவியங்களுள் தலைமை சான்றது இராமாயணம் என்பர். இராமன், நாடு துறந்து காடு புகுந்த போது, இரக்கமற்ற அரக்கர் இழைத்த கொடுமையால் வாடி வருந்திய அறவோர் அப் பெருமானிடம் அடைக்கலம் புகுந்தார்கள். வானர நாட்டில் வாலியின் கொடுமைக்கு ஆற்றாத சுக்கிரீவன் இராமனடி பணிந்து அடைக்கலம் புகுந்தான். இறக்கும் தருவாயில் மெய்ஞ்ஞானம் உற்ற வாலியும் தன் மைந்தனை அங்கதனை இராமனிடம் அடைக்கலமாக ஒப்புவித்தான். அறநெறி துறந்த இராவணன் தம்பியாகிய விபீஷணனும் இராமனைச் சரண் அடைந்தான். இவ்வாறு அடைக்கலம் புகுந்தோரை எல்லாம் ஆதரித்து அவர் மனக் கவலையை மாற்றி யருளிய பெருமையே இராமாவதாரத்தின் பெருமையாகும்.

அடைக்கலத்தின் அருமை யறிந்த தமிழ் நாட்டார் அதனைப் பலவாறு போற்றுவாராயினர். அடைக்கல புரம் என்னும் பெயருடைய ஊர்கள் தமிழ் நாட்டில் உள்ளன. பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களில் புகலூர் என்றும், புகலி என்றும் பெயர் பெற்ற பழம் பதிகளைக் காணலாம். புகல் என்ற சொல்லுக்கு அடைக்கலம் என்பது பொருள். அடைக்கலம் தரும் ஈசன் அமர்ந்தருளும் திருப்புகலூரிலே போந்து

"பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்று பாடி இறைவன் திருவடி நிழல் அடைந்தார் திருநாவுக்கரசர். சீகாழி என்று இப்போது வழங்கும் சிறந்த ஊருக்குப் 'புகலி' என்ற பெயரும் உண்டு. முன்னொரு காலத்தில் இந்திரனுக்கு அபயம் அளித்துக் காத்த காரணத்தால் அப்பெயர் அவ்வூருக்கு அமைந்தது என்று புராணம் கூறும். அமரர் தலைவனுக்கு அடைக்கலம் அளித்த புகலியைத் தன்னகத்தே யுடைய சோழ நாட்டின் சீர்மை எந்நாட்டிலும் பரவிற்று.

"தொல்லை நாளினில் சூரனுக்கு
அஞ்சியே சுரர் கோன்
வல்லை வான் 'ஒரீஇ மனையோடு
வந்திவண் வைகி
எல்லை யில்பகல் இருந்தவம்
புரிந்துதான் இனிய
நல்ல வாழ்வுறும் நலத்தது
சோழநன் னாடு"

என்று பாராட்டினார் ஒரு கவிஞர். 'புகலி' யிலே பிறந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தரைப் 'புகலியர் கோன்' என்று தமிழகம் போற்றிப் புகழ்ந்தது.

இங்ஙனம் அடைக்கலத்தின் பெருமையை அறிந்து போற்றும் தமிழ் நாட்டில் "அடைக்கல மாதா"வின் திருக்கோவில் ஒன்று இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே எழுந்தது. அக்கோவிலை நிறுவியவர் இத்தாலிய தேசத்தைச் சேர்ந்த வித்தகர்; பெஸ்கி என்னும் இயற் பெயர் உடையவர். தமிழ் நாட்டில் சேசு மதத்தைப் பரப்ப வந்த அப்பெரியார் தமிழ் மொழியை நன்றாகக் கற்றார்; தமிழனைப் போலவே நடையும் உடையும் கொண்டு வாழ்ந்தார். தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டு செய்த அவ் அறிஞரை வீர மாமுனிவர் என்றும், தைரிய நாத சுவாமி என்றும் புகழ்ந்து மகிழ்ந்தது தமிழகம்.

அம்முனிவருடைய ஆர்வத்தால் கொள்ளிட நதியின் வடகரையில் உள்ள ஏலாக்குறிச்சியில் தேவ மாதாவின் கோவில் எழுந்தது. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் புரியும் தேவ மாதாவுக்கு அடைக்கல மாதா என்று பெயரிட்டார் முனிவர். கண்ணிணைக் காக்கின்ற இமை போல் மெய்யடியாரைக் காத்தருளும் அடைக்கல மாதாவின் அருட் காவலில் அமைந்த தலத்திற்குத் திருக்காவலூர் என்னும் பெயர் கொடுத்தார்.

கொள்ளிட நதிக் கரையிலே, தண்ணறுஞ் சோலையின் நடுவே அமைந்த திருக்கோவிலில் கருணை பொழியும் கண்களோடு, மின்னார் முடி புனைந்து, அங்கையில் மணிவடம் தாங்கி அடைக்கல மாதா காட்சி தருகின்றாள். அவ் அருட்கோலத்தைக் கண்டு அகம் குளிர்ந்து,

"கலைபூத்த சோணாட்டுக்
காவிரியின் வடகரைமேல்
சினைபூத்த நிழற் பொழில்வாய்
சிங்கநெடுங் கோடிநிழற்றும்
திருக்காவ லூரகத்துத்
திகழ்ஒளிவாய் மணிக்கோயில்
அருட்காவல் இயற்றிநமை
அளிப்பதுநின் நயையாமோ"

என்று பாடினார் வீரமா முனிவர்.

பாடல் பெற்ற ஸ்தலங்களுக்குத் தமிழ் நாட்டிலே தனிப் பெருமை உண்டு. தேவாரப் பாடல் பெற்ற சிவஸ்தலங்களும், ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருப்பதிகளும் சாலச் சிறப்புற்று விளங்குகின்றன. இதை அறிந்த வீரமா முனிவர் திருக்காவலூரை ஒரு பாமாலையில் அமைத்துப் போற்றினார்.

'திருக்காவலூர்க் கலம்பகம்' என்னும் பெயரால் வீர மாமுனிவர் புனைந்த பாமாலை, தெய்வ மணம் கமழும் தமிழ் மாலையாகத் திகழ்கின்றது. அருங்கருணை வாய்ந்த அடைக்கல மாதா அடியாரது பாவத் தீமை ஆற்றுவாள் என்றும், பிறவிப் பிணியை மாற்றுவாள் என்றும் முனிவர் அழகுறப் பாடியுள்ளார்.

திருப்பதி என்னும் திருவேங்கடம் குலசேகர ஆழ்வாரது உள்ளத்தைக் கவர்ந்த

வண்ணமே, திருக்காவலூர் வீரமாமுனிவரது நெஞ்சை அள்ளுவதாயிற்று. தேனூர் பூஞ்சோலைத் திருவேங்கட மலையில் படியாய்க் கிடக்கவும், சுனையில் மீனாய்ப் பிறக்கவும், சோலையில் மரமாய் நிற்கவும் ஆசைப்படுகின்றார் குலசேகர ஆழ்வார். இத்தகைய ஆசை வீரமாமுனிவர் பாட்டிலும் வெளிப்படுகின்றது.

"தாள்அணிந்த மதிமுதலாத் தமியனும் அக்
கமலத்தாள் தாங்கி லேனே
கோள் அணிந்த குழலணிதார் குடைவண்டாப்
புகழ்பாடி மதுஉண் ணேனே
வாள் அணிந்த வினைப்படைவேல் வளிச்சிங்கம்
ஈன்ற ஒரு மானுப் வந்தாள்
கேள் அணிந்த காவல் நலூர்க் கிளர்புனத்துப்
பசும் புல்லாக் கிடவேன் நானே"

'அடைக்கல மாதாவிற்குச் சூட்டிய மலர் மாலையிலே ஒரு வண்டாக வளர்ந்து, கருணைத் தேன் பருகும் பேறு பெறுவேனோ? திருக்காவலூர்ப் பூஞ்சோலையில் ஒரு புல்லாய் முளைக்கும் பேறு பெறுவேனோ?' என்று பாடுகின்றார் முனிவர்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்காவலூரை அடைந்து, அடைக்கல மாதாவைத் தொழுது அருள் பெற்ற அடியார் பல்லாயிரவர். வறுமை நோயால் வாடினோரும், தொழுநோய் முதலிய வன்பிணியுற்று வருந்தினோரும், அடைக்கல மாதாவின் அடியிணைத் தொழுது துன்பம் நீங்கி இன்பமுற்றார். காவலூர்ப் பூஞ்சோலையில் அருள் தளிர்க்கும்; ஞானம் தழைக்கும்; வரம் அரும்பும்; சீர் பழுக்கும் என்று சிறப்பித்தார் முனிவர்.

"நாறு தயை தளிர்ப்ப, ஞானநிழல் குளிர்ப்ப
தேனூர் வரம்அரும்ப, சீர்கனிய—வானோரும்
அஞ்சலிசெய் உன்தாள் அருட்காவல் நாயகியே
எஞ்சிலதோர் சோலை எனக்கு"

என்று முனிவர் பாடிய காவலூர்க் கோவில் மெய்யடியார் மனக் கவலை தீர்க்கும் மருந்தாக இன்றும் கொள்ளிடக் கரையில் காட்சி தருகின்றது.

படித்துப் பாருங்கள்!

Report of the Congress Village Panchayat Committee

சென்ற மே மாதம் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியார், கிராமப் பஞ்சாயத்துச் சபைகள் தற்சமயம் இயங்கும் முறை பற்றியும் செய்யக் கூடிய சீர்திருத்தங்கள் பற்றியும் ஓர் யாதாஸ்து தயார் செய்யும்படி ஸ்ரீமான்கள் காட்ஜு, ஜகஜ் ஜீவன் ராம், கந்தா, எஸ். என். அகர்வால் முதலியவர்கள் கொண்ட ஒரு கமிட்டி நியமித்தார்கள். அவர்கள் தேசம் பூராவிலும் உள்ள பஞ்சாயத்துச் சபைகளைப் பற்றிய நிர்வாக முறையைக்கேட்டு அறிந்து, அதைச் சீர்படுத்தத்தக்க யோசனைகளும் கூறியிருக்கிறார்கள். "கல்வி"யில் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்துக் கட்டுரைகளில் அன்பர்கள் வோட்டு முறையைப் பற்றி, நீதி நிர்வாகப் பொறுப்பைப் பற்றியெல்லாம் வெளியிட்டிருந்த முறைகளையும் கஷ்டங்களையும் இந்தக் கமிட்டியார் பரிசீலனை செய்து தக்க பரிகாரங்கள் கூறியிருக்கிறார்கள். கிராமப்] பஞ்சாயத்துக்களில் சிரத்தையுடையவர்களுக்குப் பயன் தரக்கூடிய நூலாகும்.

கிடைக்குமிடம் : All India Congress Committee 7, Jantar Mantar Road, New Delhi விலை : ரூ. 1—8—0.

மஞ்சள் அறை

துறைமுகத்தில் ஒரு பெட்டி வந்து இறங்குகிறது. அந்தப் பெட்டி திடீர் என்று காணாமல் போகிறது. அதை மிகவும் சிரமப்பட்டுத் தேடிப் பிடித்தார்கள். அதை உடைத்துப் பார்க்கும் போது மூர்ச்சை போட்டு விழும்படியான நிலை ஏற்படுகிறது. பிறகு குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் வேலையைத் துப்பறியும் துரைசாமி மேற்கொள்ளுகிறார். ஆனால் அவர் துப்பறியப் புறப்பட்டால் புதிது புதிதான சிக்கல்கள் நேர்ந்து அவர் சிந்தனையைத் திகைக்க வைக்கிறது. 'இப்படியெல்லாம் சங்கடப்படுகிறாரே, பாவம் இந்தத் துப்பறியும் துரைசாமி,' என்று படிக்கும் நமக்கு அநுதாபம் ஏற்படுகிறது. அதேமாதிரி அநுதாபம் குற்றவாளிக்கும் சேர்ந்து விடுகிறது. அதனால், "ஐயா, நீர் துப்புத் துலக்கியது போதும். குற்றவாளி இதோ இருக்கிறேன். என்னைப் பிடித்துக் கொள்ளும்" என்று சொல்லுகிறார். அப்புறமும் ஓர் அதிசயம் காத்திருக்கிறது. இப்படி மர்மமும் அதிசயங்களும் நிரம்பிய இந்தக் கதை படிக்க வெகு விறுவிறுப்பாக இருக்கிறது!

ஆசிரியர் : ஆர். எஸ். மணி, பிரசுரம்: ஞானமணிப் பிரசுரம், சென்னை–17. விலை : ரூ. 1–8–0.


மணி விளக்கு (மீலாத் மலர்)

ஆண்டவனின் தூதராக வந்து, அளவு கடந்த அருட் பெருக்கினால் இஸ்லாம் மார்க்கத்தின் தந்தையாக விளங்கிய முகம்மது நபியவர்களின் பிறந்த தினத்தன்று "மணி விளக்கு" மாதப் பத்திரிகையின் 'மீலாத் மலர்' வெளியாகியிருக்கிறது.

இம்மலரில் கவிதைகள், கட்டுரைகள், கதைகள், தொடர்கதை முதலிய அம்சங்கள் இடம் பெற்று இலக்கிய மணம் கமழ்கின்றன. "ஒளி பிறந்தது" என்னும் தலைப்பில் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு நன்கு கூறப்பட்டிருக்கிறது. அந்த மகானைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமுள்ளவர்களுக்கு மேற்படி கட்டுரை பெரிதும் பயன்படும். "கேள்வியும் பதிலும்" என்ற பகுதி மிகவும் சுவையோடு அமைந்திருக்கிறது.

"எல்லா நிலமும் ஆண்டவனின் நிலம், எல்லாப் படைப்புகளும் இறைவனின் படைப்புகள். தரிசு நிலத்தைப் பயிரிடுபவரே அதைப் பெற்றிருக்க உரிமை பெற்றோர்" என்ற திருக் குர் ஆனின் வாக்கும் இன்னும் இது போன்ற அறிவூற்றுக்களான பல வாக்குகளும் இந்த மீலாத் மலருக்குச் சிறப்புத் தருகின்றன.

"மணி விளக்கு", ஆசிரியர் : ஜனாப் ஏ. கே. ஏ. அப்துஸ் ஸமத்; விலாசம் : தபால் பெட்டி நெ. 249, சென்னை–1 ; விலை அணா 8.



டியூடர் ஆயிஸ்டர் பிரின்ஸ்

சுருசுருப்பான ஆடவர் ஒவ்வொருவருக்கும் ஏற்ற கடியாரம்

இந்த சீர்திருத்தப்பட்ட புதிய டியூடர் ஸெல்ப்-வைண்டிங் கடியாரத்திற்கு பிரத்யேக கவனம் சிறிதும் தேவையில்லை. உங்கள் கை மணிக்கட்டின் ஒவ்வொரு சிறு அசைவிலும் இதன் (ரோலெக்ஸ் பேடண்ட்) ரோட்டார் விசை விசேஷமாக தானாகவே சாவி கொடுத்து கடியாரத்தை செம்மையுடன் ஓடவைக்கிறது.

19-ஜுவல் யந்திரம்; காந்தத்தினால் பாதிக்கப்படாதது அதிர்ச்சி தாங்கக்கூடியது ... ஜலம், தூசி, அழுக்கு, வியர்வைகூட புகாதபடி அமைந்த ஆயிஸ்டர் கேஸின் பாதுகாப்புடையது.

> டியூடர் ஆயிஸ்டர்டேட் கடியாரத்தை பார்க்கத் தவறாதீர்கள் — பிரின்ஸைப்போன்று அதே அழகிய அமைப்பு ஆனால் டயலில் தேதியும் காட்டும்.

டியூடர் ஜெனிவா ரோலெக்ஸ்ஸாரால் பொறுப்பு ஏற்கப்பட்டது

ஐ. 738

தென்இந்தியாவில் ஏக விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் பி. ஆர் & ஸன்ஸ் லிட்.,

மவுண்ட் ரோட், மதராஸ்



மறு நாள் தீபாவளி, தலையாரி மூத்துவின் பெண்சாதி பணியாரம் சுடுவதற்காக மாவு அரைத்துக் கொண்டிருந்தாள். மகன் சின்னானும், மகள் அஞ்சலையும் ஓர் உடைந்த தகரப் பெட்டியைத் திறப்பதும் மூடுவதுமா யிருந்தார்கள். அந்தப் பெட்டியில் தீபாவளிக்காக வாங்கி வந்த புது வேட்டியும், பாவாடையும், இரண்டு மூன்று பட்டாசுக் கட்டுகளும் இருந்தன. ஒரு பட்டாசுக் கட்டை இப்போதே பிரித்துவிட வேண்டுமென்று சின்னான் சொன்னான். அஞ்சலை "கூடாது, நாளைக் காலையில்தான் பிரிக்கவேண்டும்" என்றாள்.

தலையாரி மூத்து அவசரமாய் உள்ளே நுழைந்தான். "நான் போய்த் தொலைய வேண்டும். இந்தப் பாழும் சர்க்கார் உத்தியோகம் இப்படித் தான். நாள் கிழமைகூடக் கிடையாது" என்றான்.

"ஐயோ! இதென்ன அநியாயம்! எங்கே போக வேண்டும்! அதெல்லாம் முடியாது. ராத்திரி எப்படியும் வந்து விட வேண்டும்" என்று சொன்னாள் அவன் மனைவி மதுரம்மா.

"நான் என்ன செய்யட்டும்! யாரோ கவர்னர் துரை வருகிறானாம். ரயில் பாதை முழுதும் காவல் காக்க வேண்டுமாம். கணக்குப் பிள்ளை, மணியக்காரர், வெட்டி தலையாரி எல்லாரும் போகிறார்கள். இந்தத் தாலுகா முழுதும் அப்படி. ரிவின்யூ இன்ஸ்பெக்டர் ஐயாகூடத் தடியைப் பிடித்துக் கொண்டு காவல் காப்பாராம்" என்று சொல்லி மூத்து சிரித்தான். ரிவின்யூ இன்ஸ்பெக்டரை அத்தகைய நிலைமையில் எண்ணிப் பார்த்தபோதே அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"அது எப்படியாவது பாழாய்ப் போகட்டும். பண்டிகையன்றுதானா இந்த எழவு வந்து தொலைய வேண்டும்! எப்படியும் இராத்திரி திரும்பி வந்து விடக் கூடாதா! ஐயோ! கொள்ளைப் பணியாரம் செய்ய மாவு அரைத்திருக்கிறேனே! நீ இல்லாமற் போனால் சந்தோஷமாகவே இராது" என்றாள் மதுரம்.

"இராத்திரி வரப் போகிறாராம் துரை. அதற்குச் சாயங்கால முதல் காவல் காக்க வேண்டுமாம். வண்டி போனவுடனே புறப்பட்டு ஓடி வந்து விடுகிறேன். எட்டு மைல் இருக்கிறது. எப்படியும் பொழுது விடிவதற்குள் வந்து விடுகிறேன்" என்றான் மூத்து.

இதற்குள் அஞ்சலை ஓடி வந்து தகப்பன் கையைப் பிடித்துக் கொண்டு "அப்பா, அப்பா! எனக்குப் பூ மத்தாப்பு வாங்கிக் கொண்டு வா" என்றாள்.

சின்னான் ஓடிவந்து அரை வேட்டியைப் பிடித்து, "அப்பா! எனக்குத் துப்பாக்கி வாங்கி வரவேண்டும். வருகிறாயா, சொல்லு. இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்" என்று சொல்லி மூத்துவின் வேட்டியைத் தன்மீதுசுற்றிக்கொண்டான்.

"பணியார மெல்லாம் ஆறிப் போகும். சுடச் சுடத் தின்னால் தானே தேங்காயப்பம் நன்றா யிருக்கும்! உனக்குப் பிடிக்குமே! நீ போகா விட்டாலென்ன! உடம்பு காயலாவென்று சொல்லி விடேன்" என்று கூறினாள் மதுரம்.

"ஐயோ! தலைபோய் விடும். இருபது வருஷமாய் வேலை பார்த்து விட்டு இப்போது கெட்ட பெயர் எடுக்கலாமா! இந்தக் காலத்தில் மாதம் எட்டு ரூபாய் யார் கொடுக்கிறார்கள்! ஸர்க்கார் உத்தியோகம் இலேசா!" என்றான் மூத்து. தான் சர்க்கார் உத்தியோகஸ்தன் என்னும் விஷயத்தில் அவனுக்கு எப்போதுமே கொஞ்சம் பெருமை இருக்கத்தான் செய்தது.

பிறகு, மத்தாப்புப் பெட்டியும், விளையாட்டுத் துப்பாக்கியும் வாங்கி வருவதாகக் குழந்தை

ராஜாஜி நடத்திய 'விமோசனம்' என்ற பத்திரிகையில் 1929-ம் ஆண்டு வெளியானது.

ளுக்கு வாக்களித்துவிட்டு, மூத்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

2

ஐப்பசி மாதத்து அடைமழை. வானம் ஓயாது கருத்து இருண்டிருந்தது. பகலிலேயே வெளிச்சம் சொற்பம். இரவில் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அந்த அந்தகாரத்தினிடையே ஒவ்வொரு சமயம் மின்னல் பளிச்சென்று வீசி ஒரு கணநேரம் பிரகாசமுண்டு பண்ணி வந்தது. சில சமயம் 'சோ'வென்று மழை கொட்டும். சில சமயம் தூற்றல் போடும். அபூர்வமாக ஒரு சமயம் தூற்றல் நிற்கும். ஆனால் ஊதல் காற்று மட்டும் இடைவிடாமல் அடித்துக் கொண்டிருந்தது.

அதோ, வரிசையாக வெகு தூரத்துக்கு மின் மினிபோல் விளக்குகள் காணப்படுகின்றனவே, அவை யாவை! கம்பங்களில் நாட்டிய விளக்குகளா!—இல்லை. ரயில் பாதையின் இருபுறமும் சுமார் ஐம்பது கஜத்துக்கொருவர் வீதம் மனிதர்கள் நிற்கிறார்கள். அவர்கள் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் லாந்தர்கள் அவை. அப்படி நின்று கொண்டிருப்பவர்களில் நமது தலையாரி மூத்துவும் ஒருவன். ஒரு கையில் லாந்தரும் ஒரு கையில் தடியும் பிடித்துக் கொண்டிருக்கிறான். வாடைக்காற்று 'விர்'ரென்று அடிப்பதால் அவன் உடம்பு குளிரினால் 'வெட வெட'வென்று நடுங்குகிறது. பல்லுக் கிட்டுகிறது. மேலே மழைக்கு ஒரு கோணிப் பை. அது நன்றாய் நனைந்து போய் விட்டது. மழை கோணிப் பைக்குள் நுழைந்து மூதுருக்கு வந்து வெகு நேரமாயிற்று. உடுத்திய வேட்டியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

சர்க்கார் உத்தியோகத்துக்குத் தலை முழுகி விட்டு ஓடிப் போகலாமா என்று நினைத்தான் மூத்து. மதுரம் சொன்ன புத்திமதியை அப்பொழுதே கேட்காமற் போனோமே என்று வருந்தினான். இத்தனை நேரம் கஷ்டப்பட்டது பட்டோம், இனிக் கொஞ்ச நேரந்தானே, இருந்து தொலைப்போம் என்று தைரிய மடைந்தான். தன் மனைவி அப்போது கடச்கடப் பணியாரம் செய்து கொண்டிருப்பாளென்பது அடிக்கடி ஞாபகம் வந்தது. "போகட்டும், பெண்சாதியும் குழந்தைகளுமாவது இன்பார்களல்லவா!" என்று எண்ணி ஆறுதல் அடைந்தான்.

இரவு ஏழு மணி, எட்டு மணி, ஒன்பது மணியு மாயிற்று. சாயங்காலம் நாலு மணிக்கு ஆரம்பித்த காவல். மூத்துவுக்கு அந்த ஐந்து மணி நேரம் ஐந்து யுகமாயிருந்தது. "ஏது! இனிமேல் தாங்காது" என்று அவன் தீர்மானித்த சமயத்தில் அங்கே கையில் தாழங் குடையும், உடம்பில் கம்பளிச் சட்டையும், தலையில் குரங்குக் குல்லாவும் தரித்து ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் தான் கிராம முனிசிப் குருநாதப் பிள்ளை. ஊரில் பெரிய பண்ணைக்காரர் அவர்தான். நாற்பது வேலி நிலமும், ஒரு 'ல'காரம் ரொக்கமும் அவருக்குண்டு; ஆனாலும் தலையெழுத்து யாரை விட்டது!

"மூத்து, உஷார்! ஆயிற்று, இன்னும் அரை நாழிகைக்குள் வண்டி வந்து விடும்" என்றார் கிராம முனிசிப்.

"எங்கப்பனாணை! இனிமேல் என்னால் முடியாது. நான் ஓடிப் போகிறேன், பிள்ளை!" என்று நடுங்கிக் கொண்டே சொன்னான் மூத்து.

குருநாதப் பிள்ளைக்கு மூத்துவின்மேல் ரொம்பப் பிரியம். வேலையில் எப்போதும் மூத்து கொஞ்சம் இழுப்புத்தான். ஆனால் பொய், புனை சுருட்டு, திருட்டுப் புரட்டு என்பது அவனிடம் கிடையவே கிடையாது. ஒரு வகையில் மூத்துதான் கிராம முனிசிப்புக்கு மந்திரி என்று சொல்லலாம். குருநாதப் பிள்ளையின் குடும்ப யோகக்ஷேமமெதுவும் மூத்துவுக்குத் தெரியாததில்லை.


"அட புத்தி கெட்டவனே! இங்கே வா, நான் சொல்கிறதைக் கேளு" என்றார் முன்சீப்.

சட்டைப் பையிலிருந்து நாலணா எடுத்து மூத்துவின் கையில் கொடுத்தார். "இதோ, பார்! உன் ஆசாரம், பக்தி, பூஜை யெல்லாம் மூட்டை கட்டி வை. பக்கத்தில் அதோ கடை யிருக்கிறது. போய் ஒரு புட்டி குடித்து விட்டு வா. குளிரெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் பறந்து போய் விடும். அதுவரையில் நானே இங்கே நின்று பார்த்துக் கொள்கிறேன். ஓடி வந்துவிடு" என்றார்.

மூத்துவுக்கு இயற்கையாகவே குடியில் வெறுப்புண்டு. அவன் தெய்வ பக்தி யுள்ளவன். கள்ளுக் குடித்தால் சுவாமிக்குக் கோபமுண்டாகும் என்ற எண்ணம் அவனுக்கு எப்படியோ ஏற்பட் டிருந்தது. அதிலும் அவன் மனைவி இது விஷயத்தில் மிகவும் கண்டிப்பா யிருந்தாள். ஒரு நாள் அவன் கொஞ்சம் புத்தி பிசகி சகவாச தோஷத்தினால் குடித்து விட்டு வீட்டுக்கு வந்தபோது மதுரம் படுத்திய பாடு நன்றாய் அவன் உள்ளத்தில் பதிந்திருந்தது. "கிணற்றில் விழுந்து உயிரை விடுகிறேன்" என்று அவள் ஓடியதும், அவளைத் தடுத்து நிறுத்தத் தான் பட்ட கஷ்டமும் அவனுக்கு ஞாபகம் இருந்தன. அது முதல் அவன் தப்பித் தவறிக் கூடக் கள்ளு சாராயக் கடைப் பக்கம் போவதில்லை. ஆனால் இப்போதோ!......

கிராம முனிசிப்பின் போதனையும், குளிரின் கொடுமையும் சேர்ந்து அவன் உறுதியை மாற்றி விட்டன. "அவளுக்குத் தெரியப் போவதில்லை" என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். பணத்தை வாங்கிக் கொண்டு போய்க் கால் மணி நேரத்தில் திரும்பி வந்தான்.

"அதுதான் சரி மூத்து! குளிரெல்லாம் பறந்து போயிற்றல்லவா! இன்னும் கொஞ்சம் பொறு. ஊருக்கே கிளம்பி விடலாம்" என்று சொல்லி





மதுரை அம்மன் சன்னிதி காந்தி ஜயந்தி கமிட்டியாரால் குடியரசு தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அசோக சக்கரமும் மூன்று சிங்கங்களும் பொறித்துள்ள அழகான பீடத்தில் அமைந்திருந்த கொடிக் கம்பத்தில் மதுரை ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்கள் தேசியக் கொடியைப் பறக்க விட்டுக் குடியரசின் சிறப்பைப் பற்றிச் சொற்பொழி வாற்றினார்.

விட்டுக் கிராம முனிசீப் குருநாதப் பிள்ளை தமது இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

3

மூத்துவின் குளிர் பறந்து போயிற்று. ஆனால் அத்துடன் இன்னும் ஒன்றும் பறந்து விட்டது. அது என்ன! உணர்ச்சி. உணர்ச்சி இருந்தா லல்லவா குளிர் தெரியும்! கொஞ்ச நேரத்துக்கெல்லாம் புத்தி தடுமாற ஆரம்பித்தது. பிறகு மயக்கம் அதிகமாயிற்று. உலகம் கிறுகிறுவென்று சுழன்றது. கையிலிருந்த விளக்கு கீழே விழுந்து உடைந்து அணைந்தது. ஒரு தந்திக் கம்பத்தைப் பிடித்துக் கொண்டு மூத்து நின்றான். கம்பம் கூட சரியாய் நிற்காமல் சுழல ஆரம்பித்தது. ஏற்கெனவே காரிருள். இப்போது கண்ணும் இருண்ட படியால் கனாந்தகாரமாயிற்று.

திடீரென்று தூரத்திலே ஒரு பெரிய வெளிச்சம் காணப்பட்டது. ஐயோ! அது என்ன பேயா! பூதமா! ஆமாம், தெரிந்தது. கொள்ளிவாய்ப் பிசாசு! பயங்கரமான சத்தமிட்டுக் கொண்டு அது மேலே மேலே அதி வேகமாய் வந்து கொண்டிருந்தது. இதோ அருகில் வந்து விட்டது. என்ன கொடிய பெரிய உருவம்! அதன் வாயில் என்ன பயங்கரமான தீ! ஐயோ! அது என்னை இழுக்கின்றதே! இதென்ன! நேரே அதன் வாயில் போய் விழுகிறேனே! ஓஹோ! மணியம் பிள்ளை! மாரியாயி! — அடுத்த கணத்தில் கவர்னர் துரையின் ஸ்பெஷல் வண்டி மூத்துவின் உடம்பை ஆயிரந் துகளாகச் செய்து விட்டுப் பறந்து சென்றது. மூத்துவின் உயிரும் இப்பூவுலகை விட்டுப் பறந்து போயிற்று.

"மேன்மை தங்கிய கவர்னர் துரையும் அவருடைய பரிவாரங்களும் சௌக்கியமாகத் துவரை நகரம் சேர்ந்தனர்" என்று மறுநாள் பத்திரிகைகளில் வெளியாயிற்று.

தலையாரி மூத்துவின் மனைவி தீபாவளி யன்று காலையில் பணியாரம் செய்து வைத்துக் கொண்டு புருஷன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். சின்னானும் அஞ்சலையும் நிமிஷத்துக் கொரு முறை வாசலில் போய் மத்தாப்பூ, துப்பாக்கி யுடன் அப்பன் வருகிறானா வென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

* * *

சமீபத்தில் நான் மாயவரத்துக்குப் போயிருந்த போது, கிராம முனிசீப் ஸ்ரீ குருநாதப் பிள்ளை அவர்களிடமிருந்து மேற்சொன்ன விவரங்களை யெல்லாம் கேட்டறிந்தேன். குருநாதப் பிள்ளை இப்போது மது விலக்கு இயக்கத்தில் பிசாசு பிடித்தவர் போல் வேலை செய்து வருகிறார். அவருடைய முயற்சியினாலேயே அந்த ஊர்க் கள்ளு சாராயக் கடைகள் ஏலம் எடுப்பாரின்றி மூடப்பட்டன. தற்போது அவரிடம் யாராவது சென்று, கள்ளு சாராயத்துக்குச் சாதகமாக ஒரு வார்த்தை சொன்னால் அவர்கள் தப்பிப் பிழைத்து வருவது கஷ்டந்தான்.

ஒரு கல்கி அன்பரின் கருத்து

சென்ற வாரத்துக் கடைசி நாளாகிய ஜனவரி 30-ந் தேதியில் காந்திமகானின் உயிரைத் துஷ்டன் ஒருவன் தூக்கிப் போய் தரும ராஜனிடம் ஒப்புவித்த நாளின் நினைவும் அந்த எதிர்பாராத நிகழ்ச்சியின் துயரமும் புதுப்பிக்கப்பட்டு, மக்களின் உள்ளங்கள் தூய்மை அடைந்தன. 'கல்கி'யின் ஜனவரி 30-ந் தேதி மலரும் அந்தத் துயரத்துக்கும் உள்ளங்களின் திருத்தத்துக்கும் அர்ப்பணமாக அன்றே வெளி வந்தது. அந்த இதழிலேயே துஷ்டன் ஒருவன் சீதையைத் தூக்கிப் போன துக்கத்தையும் ராஜாஜி சொல்லப் படித்துக் கண்ணீர் விட்டோம். ஜானகியை ராவணன் தூக்கிப் போனபடியே துஷ்டன் ஒருவன் நம்முடைய அன்புக்கும் பக்திக்கும் பாத்திரமான அண்ணலைத் திடீரென்று தூக்கிப் போனான்.

சீதை மீட்கப்பட்டபடியே, நம்முடைய அறிவும் நாட்டு மக்களின் க்ஷேமமும் காக்கப்படுமாக!



அழகு மணி

எம்.கே. சங்கரன்

மணியார்டரில் கையெழுத்திட்டு விட்டு, ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்ட சரசா, உடன் வந்திருந்த கடிதத்தைப் பிரித்தாள்.

"உன்னைக் கல்யாணம் செய்து கொண்ட கடமைக்காக ஐம்பது ரூபாய் அனுப்பி இருக்கிறேன்.—ராஜு."

இதைப் படித்ததும் சரசாவின் கண்களில் நீர் பெருகியது. "அம்மா......!" என்று அலறிக் கொண்டே அருகிலிருந்த தன் தாயின் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள் சரசா.

"என்ன நடந்தது சரசா?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் அவள் அன்னை.

"அவர் எனக்கு ஐம்பது ரூபாய் அனுப்பி இருக்கிறாரம்மா, ஜீவனாம்சம்!" என்று விம்மலுடன் கூறினாள்.

"அழாதே, சரசா! உனக்கும் நல்ல காலம் வரும்" என்று சரசாவின் தலையைத் தடவிக் கொடுத்தவாறு கூறினாள் அவள் அம்மா.

***

சரசாவுக்குக் கல்யாணமாகி மூன்று வருடங்கள் ஆகின்றன. அவளும், ராஜுவும் மிகவும் அன்யோன்யமாகத்தான் வாழ்ந்தனர். ராஜு பிராவிடண்ட் பண்டு இலாக் காரியாலயம் ஒன்றில் வேலை பார்த்து வந்தான். காரியதரிசி, ராஜு, ஒரு வேலைக்காரர்,—இம் மூவரைத் தவிர அந்தக் காரியாலயத்தில் வேறு யாரும் கிடையாது. காரியதரிசி ஏதோ ஸ்தானத்துக்கு இருந்தாரே தவிர, பொறுப்பு முழுவதும் ராஜுவின் தலையேல்தான்!

ஒருநாள் ராஜுவின் நண்பன் மூர்த்தி அவசரமாக வந்து, "ராஜு, நூறு ரூபாய் தேவைப் படுகிறது. உன்னால் தர முடியுமா?" என்று கேட்டான்.

கால் காசு கூடத் தன்னிடம் கடன் கேட்டிராத தன் நண்பன், முதன்முதலாகக் கேட்கும்போது இல்லையென்று சொல்ல ராஜுவின் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆனால் அச் சமயம் அவனிடம் பணம் இல்லை.

"மத்தியானம் தருகிறேனே" என்றான்.

"சரி" என்று மூர்த்தி சென்றுவிட்டான்.

ராஜு சரசாவிடம் சென்று ஏதோ காரணம் கூறி அவள் நகையைக் கேட்டான். அவள் பிகு பண்ணினாளாயினும் கொடுத்து விட்டாள். பணம் பெற்றுக் கொண்ட மூர்த்தி ராஜுவை வாயார வாழ்த்தினான்.

மூர்த்தி இரண்டே நாட்களில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டான். சில நாள் கழித்து மறுபடியும் கடன் கேட்டான். ராஜு முன் செய்த முறையை அனுஷ்டித்தான். இப்படியே நான்கைந்து முறை ஆகிவிட்டது. நகையைக் கழற்றிக் கொடுப்பாள் சரசா. ஒரு வாரம் சேட்டிலிருந்து வீட்டுத் திரும்பி வரும் நகை, சரசாவின் கழுத்தில் பதினைந்து நாட்கள்தான் தங்கும். மறுபடியும் வட்டிக் கடையை நோக்கிப் போய் விடும்.

சரசாவுக்கு எரிச்சலாகி விட்டது. வர வர நகை விஷயத்தில் கண்டிப்பாக இருக்க ஆரம்பித்து விட்டாள். அன்று மூர்த்தி ராஜுவிடம் வந்து அவசரமாக ஐந்நூறு ரூபாய் வேண்டுமென்றும், ஒரு வாரத்தில் தருவதாகவும் கூறினான். சரசா நகை தரமாட்டாளென்று ராஜுவுக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் "பார்ப்போம்" என்றான். மூர்த்தி போய் விட்டான். அவனுக்கு எப்படிப் பணம் கொடுப்பது என்று சிந்தித்தான் ராஜு. ஆபீஸில் ரூபாய்களை எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. 'ஆபீஸ் ரூபாயிலிருந்து மூர்த்திக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்து விட்டா



ஜனவரி 29-ம் தேதியன்று புது தில்லி "தென் இந்தியக் கழகம்" ராஷ்டிரபதியின் விருதுகளைப் பெற்ற தலைவர் ராஜாஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன், விஞ்ஞானி டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், ஸ்ரீ நாகேசுவர ராவ் ஆகியோருக்கு மாபெரும் வரவேற்பு ஒன்று அளித்துப் பெருமைப் பட்டது. இந்த விழாவுக்கு உயர்நீதி மன்றத்து நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். தில்லியில் வசிக்கும் தென்னிந்தியர்கள் எல்லாரும் திரளாக வந்திருந்து விழாவைப் பெருமைப்படுத்தினர். விழா மேடையில் வீற்றிருந்த தலைவர்களைப் படத்தில் காணலாம்.

லென்ன? அவன்தான் ஒரு வாரத்துக்குள் தந்து விடுவானே?' என்றெண்ணியவன் அப்படியே செய்து விட்டான்.

மூர்த்தியும் ஒரு வாரத்துக்குள் ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விட்டான். ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தவன், பை காலியாக இருப்பதைக் கண்டு திகைத்து விட்டான். ஐந்நூறு ரூபாய் இருந்த பர்ஸைக் காணவில்லை! எங்கே எங்கேயோ ஓடினான். அவன், அலையாத இடம் இடையாது. கை விட்டுக் கடந்த பொருள் திரும்பக் கிடைக்குமா?

அன்று திடீரென்று ஆடிட்டர் வருவதாகச் செய்தி வந்தது. ராஜு அதிர்ந்து போய் விட்டான். ரூபாயை எப்படிச் சரிக்கட்டுவது என்று தெரியாமல் திணறினான். சரசாவின் நகை அவன் நினைவுக்கு வந்தது, அவனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

***

சாப்பிட்டு விட்டுக் கையலம்பியதும் சரசாவிடம் வந்தான் ராஜு. மெதுவாக "சரசா......!" என்று அழைத்தான். அவன் இப்படி இழுத்துக் கூப்பிடுவதைக் கண்டதுமே சரசாவுக்கு விஷயம் புரிந்து விடும்.

"ஏன்?" என்றாள் சரசா.

"ஆபீசுக்கு ஆடிட்டர் வந்திருக்கிறார்..." ராஜு தலையைச் சொறிந்தான்.

"ஆபீஸ் கணக்கில் ஐந்நூறு ரூபாய் குறைகிறது" என்று இழுத்தான்.

"ஓகோ! என் நகைக்கு விலை தேடுகிறீர்களா?"

"அப்படிச் சொல்லாதே, சரசா! நீ தயவு பண்ணினால் சிறைத் தண்டனையிலிருந்து நான் தப்பிக்க முடியும்."

"நீங்கள் என்ன தண்டனை அனுபவிச்சாலும் சரி. என் நகையிலிருந்து ஓர் பொட்டுக்கூடத் தர முடியாது!" என்றாள்.

"சரசா, மூர்த்தி எல்லாம் நான் நகையை வாங்கித் திருப்பித் தரவில்லையா?" என்றான்.

"ஒரு தடவை இரண்டு தடவை என்றால் தரலாம்!"

"சரசா, பெண்களுக்கு நகை அலங்காரத்துக்கு மட்டும் தானா? கஷ்டம் வரும் போது அதை ஓரளவு சமாளித்துக் கொள்ளத்தானே?"

"கஷ்டம் என்ன வந்து விட்டதாம்?"

அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "போதும். தர முடியுமா, முடியாதா?" என்று கடுமையான குரலில் கேட்டான்.

"முடியாது" என்றாள் சரசா.

"முடியாதா? ஆபத்து சமயத்தில் உதவாத நீயும் ஒரு பெண்ணா?" என்று ஆவேசத்துடன் கத்திக் கொண்டே சரசாவின் கன்னத்தில் பளீர் பளீரென்று அறைந்து அவளைக் கீழே தள்ளினான். "உன் முகத்தில் விழிப்பது கூடப் பாவம்! தூ!" என்று இரைந்து விட்டு வேகமாகச் சென்று விட்டான்.

ஆபத்து சமயத்தில் உதவாத சரசாவின் மீது ராஜுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. மனைவி கழுத்தில் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான நகைகளிருந்தும், ஐந்நூறு ரூபாய்க்காக இரும்புக் கம்பி எண்ண வேண்டிய நிலை வந்து விட்டதே என்று அவன் உள்ளம் குமுறியது.

வேறு எங்கே ரூபாய் வாங்கலாம் என்பதை ஆராய்ந்தான். மூர்த்தியிடம் கடனைக் கேட்கலாமா? அடிக்கடி கடன் கொடுத்துதவிய தனக்கு மூர்த்தி உதவாமல் இருப்பானா என்ற எண்ணம் ஏற்படவே மூர்த்தியின் வீட்டுக்குச் சென்றான்.

அவன் சென்ற சமயம் மூர்த்தி தன் மனைவியிடம் நகைப் பெட்டி ஒன்றைக் காட்டிக் கொண்டிருந்தான். ராஜுவைக் கண்டதும் "வா, ராஜு!" என்று வரவேற்றான். தன் மனைவியை நோக்கி, "லக்ஷ்மி, ராஜு சமயத்தில் உதவி செய்ததால் தான் நான் வியாபாரத்தைநல்ல முறையில் நடத்த முடிந்தது. உனக்கும் நெக்லஸ் வாங்க முடிந்தது" என்று புகழ்ந்தான். பிறகு நகைப் பெட்டியை வாங்கி ராஜுவிடம் காட்டி "இந்த நெக்லேஸைப் பார்; என் மனைவிக்கு இதை வாங்கணு மென்று ரொம்ப நாளாய் நினைத்திருந்

தேன். இன்று தான் சௌகரியப்பட்டது. இதன் விலை இரண்டாயிரத்து நூறு ரூபாய்!'' என்றான்.


ராஜூவுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. ''நன்றா யிருக்கிறது'' என்று கூறினான்.

மூர்த்தி தன் மனைவியை அழைத்து நெக்லேஸை அவள் கழுத்தில் மாட்டினான். மகாலக்ஷ்மி மாதிரி இருக்கும் தன் மனைவியைப் பார்த்துப் பூரித்துப் போனான் மூர்த்தி.

அவர்கள் ஆனந்தமாக இருக்கும் இவ்வேளையில் அபசகுனம் போல் கடன் கேட்பது அவ்வளவு நல்லதாகப் படவில்லை ராஜூவுக்கு. உடனே புறப்பட்டு விட்டான்.

* * *

விளக்கேற்றி விட்டுச் சரசா தெரு வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள். கோபித்துக் கொண்டு சென்ற கணவன் வரவில்லையே என்ற கவலை ஒரு புறமிருந்த போதிலும், அவன் ஓங்கி அடித்தது அவள் மனத்தை இன்னும் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.



சங்கீத பிதாமகர்களாகிய ஸ்ரீ புரந்தரதாஸர் ஸ்ரீ தியாகப் பிரும்மம் ஆகிய இருவருக்கும் பூனா தென்னிந்தியர்கள் ஆராதனை விழா அமோகமாகக் கொண்டாடினார்கள். ஜனவரி மாதம் 8-ந் தேதி சனிக்கிழமை தொடங்கி 25-ந் தேதி முடியப் பதினெட்டு நாட்கள் வரை விழா விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

பதினெட்டு நாட்கள் தொடர்ந்து நடந்த விழா ஜனவரி 26-ந் தேதி பாராட்டு விழாவுடன் இனிது முடிந்தது. பூனா சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் ஸ்ரீ எம். ஆர். ஜயகர் விஜயம் செய்து சங்கீத சாஹித்ய வித்வான் மாயூரம் ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

''சரசா! சரசா!'' என்று அழைத்துக் கொண்டேவந்தாள் பக்கத்துவீட்டு அம்மாள்.

''என்ன பெரியம்மா?'' என்றாள் சரசா.

''உன் கணவரைப் போலீஸ்காரங்க பிடிச்சிக் கிட்டாங்களாம்!''

''என்ன...?'' என்று சரசா பதறிப் போய் விட்டாள். அவள் மனத்தில் இருந்த வீறுப்பெல்லாம் எங்கோ சிதறி விட்டது.

''ஆமாம், சரசா! யாரோ மூர்த்தியாம்; ஐந்நூறு ரூபாய் கொடுத்து மீட்டு விட்டாராம். உன் கணவர் இப்பொழுது மூர்த்தியின் வீட்டில்தான் இருக்கிறாராம்.''

சரசாவின் கண்களிலிருந்து நீர் பெருகியது. முந்திய நாள் கணவன் நகைகளைக் கெஞ்சிக் கேட்டது அவள் நினைவுக்கு வந்தது. 'தன் கழுத்தில் நகை இருந்துமா தன் கணவன் சிறைக்குப் போக வேண்டும்?'—அவள் மனசாட்சி அவளைக் குத்தியது. மறு கணம் மூர்த்தியின் வீட்டை நோக்கி ஓடினாள்.

மூர்த்தியின் வீட்டில் ராஜூ மட்டும்தான் இருந்தான். மூர்த்தியும் அவன் மனைவியும் கோவிலுக்குச் சென்றிருந்தனர். அப்போது வந்த சரசாவைக் கண்டதும் ''எங்கே வந்தாய்?'' என்று எரிந்து விழுந்தான் ராஜூ.

அவள் விம்மிக் கொண்டே ''நான் பெரிய தப்பு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!'' என்று கண்ணீர் வடித்தாள்.

''இன்ப துன்பத்தில் எனக்கு ஒத்துப் போகாத மனைவி எனக்குத் தேவை இல்லை. போ, வெளியே!'' என்று கத்தினான் ராஜூ.


''இனி நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன். வீட்டுக்கு வாங்க!'' என்று கண்ணீர் மல்கக் கெஞ்சினாள் சரசா.

அவன் மனம் சிறிதும் இளகவில்லை. சரசா ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாகி விட்டது. ஒரு வாரமாகியும் ராஜூ வீட்டுக்கு வரவில்லை. 'கணவன் எப்படியும் மனமிரங்கி வருவார்' என்று அவள் எதிர்பார்த்ததும் வீண் போயிற்று. மீண்டும் மூர்த்தியின் வீட்டுக்குச் சென்றாள். ஆனால் வீடு அடைக்கப் பட்டிருந்தது. மூர்த்தி அந்த வீட்டைக் காலி செய்து விட்டுத் திருநெல்வேலிக்குக் குடிபோய் விட்டதாகப் பக்கத்திலுள்ளவர்கள் கூறினர்.

விஷயத்தைக் கேள்விப்பட்டுச் சரசாவின் அப்பாவும் அம்மாவும் வந்தனர். சரசா நடந்தது அனைத்தையும் கூறிக் கண்ணீர் வடித்தாள். ''அழாதே, சரசா! எப்படியும் அவரைச் சமாதானப் படுத்தி அழைத்து வந்து விடுகிறேன்'' என்றார் அவள் தந்தை.

மறுநாள் திருநெல்வேலிக்குச் சென்று ராஜூவைக் கண்டார் சரசாவின் தந்தை. ஆனால் ராஜூ வர மறுத்ததுமின்றித் தன் ஆத்திரத்தை மாமனாரிடம் காட்டி விட்டான். அவர் கோபத்தோடு திரும்பி விட்டார். சரசாவைத் தன் ஊருக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டார். ஆனால் சரசா தன் கணவன் வீட்டை விட்டு எங்கும் வரமுடியாதென்று கூறி விட்டாள். எனவே சரசாவின் அம்மாவை அவளுக்கு உதவியாக வைத்து விட்டுப் போய் விட்டார் தந்தை.

இவைகள் அனைத்தையும் எண்ணிக் கண்ணீர் வடித்தாள் சரசா. மணியார்டரில் வந்த ஐம்பது ரூபாயைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அக் கடிதம் அவளைப் பார்த்துச் சிரித்தது. அவளுக்குச் சகிக்க முடியவில்லை.



"ஒரே சமயத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் நடந்து விடுகின்றன. எல்லோரும் என்னைக் கேட்கச் சொல்லி இருக்கிறார்கள். நான் அதற்கு இது மாதிரி செய்யாமல், வேறு என்ன செய்வது?"

தான் செய்த தவறுக்காகக் கண்ணீர் விட்டு, தன்னை மன்னித்து விடுமாறு பணிவாகவும் உருக்கமாகவும் ராஜுவுக்குக் கடிதம் எழுதினாள். ராஜுவோ கடிதத்தைப் பார்க்கப் பிடிக்காமல் பெட்டிக்குள் எறிந்து விட்டான். அதன்பின் வந்த இரண்டு கடிதங்களும் அதே கதியைத்தான் அடைந்தன.

மூர்த்தியின் சிபாரிசில் ராஜு நல்ல உத்தியோகத்தில் இருந்தான். ராஜு தன் மனைவியிடம் மனஸ்தாபப் பட்டிருப்பது மூர்த்திக்கோ, அவன் மனைவிக்கோ இதுவரை தெரியாது. "உன் மனைவியை இங்கேயே அழைத்து வந்து விடேன்" என்று மூர்த்தி அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான்.

மாதங்கள் சென்றன. அன்று தற்செயலாக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தான் ராஜு. அவனைக் கண்ட ஒரு பெரியவர் அதிவேகமாக வந்து "தம்பி! நீங்களும் ஊருக்கு வாரீங்களா?" என்று கேட்டார். ஆம்! அவர் அவன் ஊர்க்காரர். பக்கத்து வீடு.

"இல்லை" என்றான் ராஜு.

"என்ன தம்பி, இப்படிச் சொல்றீங்க? அப்படின்னா உங்களுக்கு விஷயம் தெரியாதா?"

"என்ன விஷயம்?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் ராஜு.

"நான் வரும்பொழுது உங்க வீட்டம்மா திடீரென்று மயங்கி விழுந்து விட்டாள். ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போனாங்க."

அவன் பதறிப் போய் விட்டான். "என்ன செய்கிறது?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"பிரசவ சமயம் போலிருக்கிறது!"

அவன் கால்கள் தரையில் நிற்க முடியவில்லை. ஒருவித உணர்வு அவன் உடல் முழுவதும் பரவி ஓடியது. தன் அறைக்கு ஓடோடியும் வந்தான். சரசா எழுதிய கடிதங்கள் அனைத்தையும் எடுத்துப் படித்தான்.

அவள் எழுதிய ஒவ்வொரு வரியும் அவன் உள்ளத்தைப் பிழிந்தது. "...இன்னும் நான்கு மாதங்களில் தாங்கள் தந்தையாகி விடுவீர்கள்! எனக்காக இல்லாவிட்டாலும் குழந்தைக்காகவாவது வாருங்கள்..." இதைப் படித்ததும் அவன் மனம் மாறி விட்டான். மறுகணமே ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

ஆஸ்பத்திரியில் அவன் மாமனாரும் பக்கத்து வீட்டுப் பெண்களும் கவலையுடன் நின்று கொண்டிருந்தனர்.

அவன் மாமனார் "வாங்க மாப்பிள்ளை!" என்றார். "சரசா எப்படி இருக்கிறாள்?" என்று அளவற்ற விசாரத்துடன் கேட்டான்.

அவர் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். அவர் கண்களில் நீர் பெருகியது. ராஜுவுக்குத் திகிலாக இருந்தது. நர்ஸ்கள் அங்கு மிங்குமாய் ஓடிக் கொண்டிருந்தனர். 'கடவுளே! என் சரசாவை நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

சிறிது நேரம் கழித்து ஒரு நர்ஸ் வந்து "ஆண் குழந்தை!" என்றாள். ராஜுவின் இரு கரங்களும் தன்னையறியாமல் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்தித்தன.

சரசாவைப் பார்க்க அவன் அனுமதிக்கப் பட்டான். "சரசா...!" என்று அலறிக் கொண்டே அவள் அருகில் சென்றான் ராஜு.

"வந்து விட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே சரசா எழுந்திருக்க முயன்றாள்.

"பிறகு பேசிக் கொள்ளலாம். படுத்துக் கொள்" என்று கூறிவிட்டு, அவளருகில் கிடந்த அந்த அழகு மணியைத் தூக்கி அன்போடு முத்தமிட்டான்.

***

"இதோ பாருங்க! நம் கண்ணனின் குறும்பை" என்று கொஞ்சிக் கொண்டே தன் அழகுமணியை ராஜுவிடம் கொடுத்தாள் சரசா. குழந்தையை வாங்கிக் கொண்ட ராஜு, சரசாவின் கழுத்தைப் பார்த்தான். அவள் கழுத்தில் நகைகள் இல்லாமல் வெறிச் சென்று இருந்தது. அதைப் பார்க்க அவனுக்குச் சகிக்கவில்லை.

"நம் சண்டைதான் தீர்ந்து போச்சே! இனியாவது நகைகளைப் போட்டுக் கொள்."

சரசா ஒரு புன்சிரிப்பை வீசி விட்டு வீட்டுக்குள் சென்று ஒரு தாள் கட்டு ஒன்றை எடுத்து வந்து ராஜுவிடம் கொடுத்தாள்.

"இது என்ன சரசா?" என்று கேட்டான்.

"பிரித்துப் பாருங்களேன்" என்றாள்.

ராஜு அதைப் பிரித்தான். அது ஒரு பத்திரம். ராஜுவின் பெயருக்குத் 'தெற்கரைப் பத்'தில் நாலு ஏக்கர் நன்செய் வயல் முடித்து வைக்கப் பட்டிருந்தது.

"சரசா என்ன காரியம் செய்து விட்டாய்? இதுதான் உன் நகையா?"

சரசா தன்னுடைய கழுத்தில் கிடந்த மாங்கல்யத்தை ராஜுவிடம் காட்டி விட்டு, வீட்டுக்குள் ஓடி விட்டாள்.

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram

REGISTERED No. M. 4392

Registered as newspaper in Ceylon


"வெண்மையான, சுத்தமான

லக்ஸ் டாய்லட் சோப்பின்

நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது . . ."


என்று கூறுகிறார்

குமாரி கமலா



இந்தியாவில்
தயாரித்தது

லக்ஸ் டாய்லட் சோப் இவ்வளவு வெண்மையாயிருப்பதின் காரணம் என்ன? அதை தயாரிக்க மிகவும் சுத்தமான எண்ணெய்களையே உபயோகிக்கப்படுகிறது என்பதுதான். குமாரி கமலா கூறுவதாவது: "எனது பூரண அழகு பராமரிப்பும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பதுதான். அதன் சுறுசுறுப்பான, மென்மையான நுரை ஆழம்புகுந்து சுத்தம்செய்து சருமத்தைப் பட்டுப்போல் மென்மையாகவும், தெளிவாகவும் வைத்திருக்கிறது. நீங்களும் அதை தினமும் உபயோகித்து உங்கள் வதனத்தையும் அழகாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்!"



". . . அதனால்தான் என் வதனத்தை தெளிவாகவும் மலர்ச்சியோடும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்!"

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை
கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது!
இன்றே வாங்கி உபயோகியுங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 428-50 TM